- மத்தியப் பிரதேசத்தின் உஜ்ஜயின் நகரில் கட்டமைக்கப்பட்டுள்ள மகாகாலேஷ்வர் வழித் தடத்தின் முதல் கட்டத்தைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.
- மஹாகல் வழித் தடத்திற்கு மகாகல் லோக் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- இந்தப் பணிகளின் இரண்டாம் கட்டத்தில், மகாராஜ்வாடாவில் உள்ள கட்டிடங்கள் மறு வடிவமைப்பு செய்யப்பட்டு, மகாகல் கோயில் வளாகத்துடன் அது இணைக்கப்படும்.
- பாரம்பரிய மிக்க தர்மசாலை மற்றும் கும்ப அருங்காட்சியகம் ஆகியவையும் அங்கு கட்டமைக்கப் படும்.
- இந்தக் கோவிலின் தற்போதைய வடிவமானது, 1734 ஆம் ஆண்டு மராட்டிய படைத் தளபதி ரானோஜி ஷிண்டே என்பவரால் கட்டப்பட்டது.




## பந்தவ்கரில் உள்ள பௌத்த தலங்கள்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள பந்தவ்கர் புலிகள் காப்பகத்தில் பௌத்த குகைகள் மற்றும் ஸ்தூபிகளை இந்தியத் தொல்லிய ஆய்வுத் துறையானது கண்டுபிடித்துள்ளது.
- 2வது மற்றும் 5வது நூற்றாண்டுகளைச் சேர்ந்த 26 பௌத்த குகைகள் இங்கு கண்டு பிடிக்கப் பட்டன.
- இவை பௌத்தத்தின் மகாயான பிரிவைச் சேர்ந்தவையாகும்.
- குகைகள் மற்றும் அவற்றின் சில எஞ்சியப் பாகங்கள் மகாயான பௌத்தத் தளங்களுடன் ஒத்த வடிவிலான 'சைத்யா' (வட்டமான) கதவுகள் மற்றும் கல் படுக்கைகளைக் கொண்டிருந்தன.
- பிராமி உரையில் எழுதப்பட்டுள்ள 24 கல்வெட்டுகள் அனைத்தும் 2 முதல் 5 ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தையக் காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- இந்தக் கல்வெட்டுகள் மதுரா மற்றும் கௌசாம்பி, பவதா, வெஜபாரதா மற்றும் சபத நாயரிகா போன்ற தளங்களைப் பற்றி குறிப்பிடுகின்றன.
- அவர்கள் குறிப்பிடும் அரசர்களில் பீமசேனா, போத்தசிறி மற்றும் பட்டதேவா ஆகியோர் அடங்குவர்.
- 9 முதல் 11 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலச்சூரி காலத்தைச் சேர்ந்த 26 கோயில்களின் எஞ்சியப் பாகங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- இதே காலகட்டத்தைச் சேர்ந்த உலகின் மிகப் பெரிய வராஹ சிற்பமும் இங்கு கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- குஜராத், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளில் காலச்சூரி வம்சம் பரவிக் காணப்பட்டது.
- இது ஆரம்பகால எல்லோரா குகை மற்றும் எலிபெண்டா குகை போன்ற நினைவுச் சின்னங்களுடனும் தொடர்புடையதாகும்.
- இரண்டு சைவ மடங்களும் இங்கு கண்டறியப்பட்டுள்ளன.
- குப்தர் காலத்தினைச் சேர்ந்த கதவு அடைப்புகள் மற்றும் குகைகளில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் போன்ற சில எஞ்சியப் பாகங்களும் இங்கு கண்டு பிடிக்கப் பட்டு உள்ளன.



## 5G சேவை வழங்கீட்டின் தொடக்கம்

- 2022 ஆம் ஆண்டு இந்தியக் கைபேசி மாநாட்டில், 5G இணையச் சேவையானது நாட்டில் அதிகாரப் பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாட்டின் பிற நகரங்களுக்கும் படிப்படியாக 5ஜி சேவைகள் வழங்கப்படும் என்று ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் அறிவித்துள்ளது.
- எட்டு இந்திய நகரங்களில் 5ஜி சேவைகளைத் தொடங்க உள்ளதாக ஏர்டெல் நிறுவனம் அறிவித்துள்ளது.



## ஸ்வச் சர்வேக்சன் 2022 விருதுகள்

- இந்தூர் நகரம் தொடர்ந்து ஆறாவது முறையாக இந்தியாவின் தூய்மையான நகரமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- சூரத் மற்றும் நவி மும்பை ஆகிய நகரங்கள் அடுத்த இரண்டு இடங்களைப் பெற்றன.
- இதில் சிறப்பாகச் செயலாற்றிய மாநிலங்களின் பிரிவில், மத்தியப் பிரதேசம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- 100க்கும் குறைவான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கொண்ட மாநிலங்களின் பிரிவில், திரிபுரா முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- ஒரு லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்களின் பிரிவில், மகாராஷ்டிர மாநிலத்தின் பஞ்ச்கனி நகரமானது முதலிடத்தைப் பிடித்தது.
- அதனைத் தொடர்ந்து சத்தீஸ்கரின் படான் (NP) மற்றும் மகாராஷ்டிராவின் கர்ஹாட் ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- 1 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் பிரிவில், ஹரித்வார் தூய்மையான கங்கை நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- அதைத் தொடர்ந்து வாரணாசி மற்றும் ரிஷிகேஷ் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஒரு லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட கங்கை நகரங்களில் பிஜ்னோர் முதல் இடத்தைப் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து முறையே கன்னோஜ் மற்றும் கர்முக்தேஷ்வர் ஆகிய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- மகாராஷ்டிராவின் தியோலாலி நகரானது நாட்டின் தூய்மையான இராணுவக் குடியிருப்பு வாரியமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

### Ranking cleanliness

The tables list the top six urban local bodies (ULBs) and the best performing States according to Swachh Survekshan, 2022. Indore retained the tag of India's cleanest city for the sixth consecutive time, while Madhya Pradesh is ranked first among States

Ranking of urban local bodies (with more than 1 lakh population)

| City | State | Rank |
|---|---|---|
| Indore | Madhya Pradesh | 1 |
| Surat | Gujarat | 2 |
| Navi Mumbai | Maharashtra | 3 |
| Visakhapatnam | Andhra Pradesh | 4 |
| Vijayawada | Andhra Pradesh | 5 |
| Bhopal | Madhya Pradesh | 6 |

Source: Swachh Survekshan 2022

Best performing States

(>100 ULBs)

| Rank | State |
|---|---|
| 1 | Madhya Pradesh |
| 2 | Chhattisgarh |
| 3 | Maharashtra |

(< 100 ULBs)

| | |
|---|---|
| 1 | Tripura |
| 2 | Jharkhand |
| 3 | Uttarakhand |



## சர்வதேச கைபேசி சாதன அடையாளக் குறியீட்டு எண்ணின் பதிவு

- கைபேசி உற்பத்தி நிறுவனங்களினால், இந்தியாவில் தயாரிக்கப்படும் அனைத்து கை பேசிகளின் சர்வதேச கைபேசி சாதன அடையாளக் குறியீட்டு எண்ணை இந்திய அரசாங்கத்திடம் பதிவு செய்வதை தொலைத் தொடர்புத் துறை (DoT) கட்டாயம் ஆக்கி உள்ளது.
- சர்வதேச கைபேசி சாதன அடையாளக் குறியீடு (IMEI) என்பது ஒவ்வொரு கைபேசி சாதனத்தையும் தனித்துவமாக அடையாளம் காணும் 15 இலக்க எண்கள் ஆகும்.
- இறக்குமதியாளர்களும், ஒவ்வொரு கைபேசியினையும் இறக்குமதி செய்வதற்கு முன் அதன் சர்வதேச கைபேசி சாதன அடையாளக் குறியீட்டு எண்ணை அரசாங்கத்திடம் பதிவு செய்ய வேண்டும்.
- தகவல் தொடர்புத் துறை அமைச்சகமானது முன்னதாக ஒரு மத்திய சாதன அடையாளப் பதிவேட்டினை வெளியிட்டது.
- இந்த அடையாளப் பதிவேடானது கைபேசிகளை அவற்றின் சர்வதேச கைபேசி சாதன அடையாளக் குறியீட்டு எண்ணின் அடிப்படையில் வெள்ளை, சாம்பல் மற்றும் கருப்பு என மூன்று வகைகளாக வகைப்படுத்துகிறது.

## இரயில் நிலையங்களின் மறுசீரமைப்பு




- மத்திய அமைச்சரவையானது, மூன்று முக்கிய இரயில் நிலையங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு ஒப்புதல் அளித்தது.
- அந்த 3 இரயில் நிலையங்கள் - புது டெல்லி, அகமதாபாத் மற்றும் சத்ரபதி சிவாஜி இரயில் முனையம் (CSMT) மும்பை ஆகியனவாகும்.
- இதன் கீழ், இந்த நிலையங்கள் நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடனும் மேம்படுத்தப் பட்ட வசதிகளுடனும் மறுசீரமைக்கப்படும்.

## தூய்மை இந்தியா 2.0 திட்டம்




- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் வரும் இளையோர் விவகாரத் துறையானது நாடு முழுவதும் ஒரு மாத கால தூய்மை இந்தியா 2.0 திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் நெகிழிக் கழிவுகளைச் சேகரிப்பதோடு, அது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்தத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், குடிமக்களின் ஆதரவுடனும், தன்னார்வப் பங்கேற்புடனும் நெகிழி மற்றும் மின்னணுக் கழிவுகள் உள்ளிட்ட ஒரு கோடி கிலோகிராம் எடையுள்ள கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட உள்ளது.

## PMGKAY திட்டத்தின் விரிவாக்கம்

- பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) திட்டத்தினை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நலத் திட்டத்தின் கீழ், ஒரு நபருக்கு மாதம் 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப் படுகிறது.
- இதுவரை, PMGKAY திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 25 மாதங்களாக செயல்பாட்டில் உள்ளது.



## சம கருக்கலைப்பு உரிமைகள்

- நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களும், அவர்களின் திருமண நிலையைப் பொருட் படுத்தாமல், பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வ கருக்கலைப்புச் சிகிச்சையைப் பெறுவதற்கு அனுமதிக்கும் வகையில், கர்ப்பமாகி 24 வாரங்கள் வரை கருக்கலைப்பு செய்யலாம் என உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளது.
- இது 51 ஆண்டுகள் பழமையான கருக்கலைப்புச் சட்டத்தினை (மருத்துவ முறை சார்ந்த கருக் கலைப்புச் சட்டம், 1971) ரத்து செய்துள்ளது.
- கருத்தரித்த திருமணமாகாத பெண்கள், 24 வாரங்கள் ஆன கர்ப்பத்தைக் கலைப்பதை இந்தச் சட்டம் தடுக்கிறது.
- மருத்துவ முறை சார்ந்த கருக்கலைப்புச் சட்டத்தின் சமீபத்தியத் திருத்தமானது 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- 1960 ஆம் ஆண்டுகள் வரை இந்தியாவில் கருக்கலைப்பு என்பது சட்டவிரோதமானது என்பதோடு இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC) 312வது பிரிவின் கீழ், இந்தக் குற்றத்திற்காக ஒரு பெண்ணுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் / அல்லது அபராதம் விதிக்கப் படலாம்.
- சாந்தி லால் ஷா குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மருத்துவ முறை சார்ந்த கருக்கலைப்பு மசோதாவானது நிறைவேற்றப் பட்டது.
- 1971 ஆம் ஆண்டு மருத்துவ முறை சார்ந்த கருக்கலைப்புச் சட்டமானது 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அமலுக்கு வந்தது.
- ஜம்மு & காஷ்மீர் தவிர இந்தியா முழுவதும் இந்தச் சட்டம் பொருந்தும்.


OPERATION SAFE

7 million abortions are conducted a year in India

Only 50% of these operations are legal

8% of women opting for abortion die due to complications arising from unsafe procedures

22 million unsafe abortions are reported globally every year

## சுகபைகா நதி புனரமைப்பு

- சுகபைகா நதியை 6 மாதங்களுக்குள் புனரமைப்பதற்கு ஒடிசா மாநில அரசுக்கு தேசியப் பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.
- இது மகாநதி ஆற்றின் ஒரு கிளை நதியாகும்.
- கட்டாக் மாவட்டத்தில் உள்ள சுகபைகா நதியின் முகத்துவாரமானது 1950 ஆம் ஆண்டுகளில் மூடப் பட்டதால் அந்த நதி வறண்டு போனதாக தேசியப் பசுமை தீர்ப்பாயம் குற்றம் சாட்டியது.

## தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டம்

- பொதுச் சேவை உதவி நிதி (USOF) நிறுவனமானது, சமீபத்தில் தொலைத்தொடர்பு தொழில் நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இது கிராமப்புறம் சார்ந்த தகவல்தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதியளிப்பதற்கும் மற்றும் தொலைத் தொடர்பு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கச் செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் கல்வியாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையினரிடையே ஒருங்கிணைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்ட உள்நாட்டுத் தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், உள் சேர்க்கவும் இந்திய நிறுவனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.




## உலகின் முதல் CNG முனையம்

- குஜராத் மாநிலத்தில் நிறுவப்பட உள்ள உலகின் முதல் CNG முனையத்திற்குப் பிரதமர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- இந்த மாபெரும் முனையம் ஒவ்வோர் ஆண்டும் 1.5 மில்லியன் மெட்ரிக் டன்களைக் கையாள உள்ளது.
- இது பொது-தனியார்-கூட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி நிறுவப்படுகிறது.



## கருடா நடவடிக்கை

- மத்தியப் புலனாய்வுப் பிரிவானது, கருடா நடவடிக்கை எனப்படும் ஒரு மாபெரும் நடவடிக்கையை மேற்கொண்டது.
- சர்வதேச இணைப்புகளைக் கொண்ட போதைப் பொருள் கடத்தல் வலை அமைப்புகளை "சீர்குலைத்தல், சீரழித்தல் மற்றும் அகற்றுதல்" ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சர்வதேசக் காவல்துறை அமைப்பு மற்றும் மாநிலக் காவல்துறையுடன் இணைந்து போதைப் பொருள் விற்பனையாளர்களை வெளிக்கொணரச் செய்கிறது.




## மகிழுந்துகளில் 6 கவசக் காற்றுப் பைகள்

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பயணிகள் தங்களது வாகனங்களில் குறைந்தபட்சம் ஆறு கவசக் காற்றுப் பைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.
- இது அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் பொருந்தும், அவற்றின் விலை மற்றும் மாறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், முதன்மையாக நிறுவப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்துத் துறை அமைச்சகமானது முன்னதாக 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல், எட்டு பயணிகள் வரை பயணிக் கூடிய வாகனங்களில் ஆறு கவசக் காற்றுப் பைகளை நிறுவ வேண்டும் என்று கட்டாயமாக்கியது.
- அமைச்சகமானது, 1989 ஆம் ஆண்டு மத்திய மோட்டார் வாகன விதிகளை (CMVR) திருத்தம் செய்து, மகிழுந்துத் தயாரிப்பாளர்கள் கவசக் காற்றுப் பைகள் நிறுவ வேண்டும் என்ற ஆணையை அமல்படுத்தும் வகையில் ஒரு வரைவு அறிவிப்பையும் வெளியிட்டது.

## வந்தே பாரத் 2.0

- குஜராத்தின் காந்திநகர் நிலையத்தில் காந்திநகர் - மும்பை வந்தே பாரத் விரைவு இரயிலினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் தலைநகரங்களை இணைக்கும் இந்தப் புதிய வந்தே பாரத் விரைவு இரயிலானது, இந்தியாவின் மூன்றாவது வந்தே பாரத் விரைவு இரயில் ஆகும்.
- இது முதலில் புது டெல்லி-வாரணாசி வழித்தடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இரண்டாவது இரயிலானது புது டெல்லி-ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ரா பாதையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- வந்தே பாரத் விரைவு இரயில் 2.0 ஆனது பயணிகளுக்கு விமானச் சேவை போன்ற சேவைகள் மற்றும் கவாச் தொழில்நுட்பம் உள்ளிட்டப் பாதுகாப்பு அம்சங்களை வழங்கும்.
- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பாகும்.




## கார்பன் கணிப்பான்

- உலகளாவியப் பண வழங்கீட்டு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான மாஸ்டர்கார்டு நிறுவனமானது, கார்பன் கணிப்பான் அம்சங்களை அறிமுகப்படுத்த உள்ளது.
- கார்பன் கணிப்பான் என்பது வங்கிகளுக்கு வழங்கப்படும் ஒரு சேவையாகும்.
- இது ஒரு தனிப்பயனாக்கப்பட்ட கார்பன் தடப் பதிவு கண்காணிப்பு அமைப்பாகும்.
- இது ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு செலவின வகைகளில் கார்பன் தடயத்தின் ஒட்டு மொத்த விளைவை நுகர்வோருக்கு மதிப்பிட்டு வழங்கும்.
- இது ஏற்கனவே பல நாடுகளில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- தற்போது இது இந்தியாவிலும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.




## ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் அதிகார விரிவாக்கம்

- மத்திய அரசு அருணாச்சலப் பிரதேசத்தின் மூன்று மாவட்டங்களிலும், நாகாலாந்தின் ஒன்பது மாவட்டங்களிலும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின் அதிகாரத்தினை (AFSPA) மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

- ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் ஆனது "கலகம் நிறைந்தப் பகுதியில்" ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் கூடுவதைத் தடை செய்யும் அதிகாரத்தை ஆயுதப் படைகளுக்கு வழங்குகிறது.
- சட்டம் ஒழுங்கை மீறும் பட்சத்தில் உரிய எச்சரிக்கைக்குப் பிறகு பாதுகாப்புப் படை தங்கள் அதிகாரத்தினைப் பயன்படுத்தவும் துப்பாக்கிச் சூடு நடத்தவும் இச்சட்டம் அனுமதிக்கிறது.




## 6வது இந்தியக் கைபேசி மாநாடு

- ஆசியாவின் மிகப்பெரிய தொலைத் தொடர்பு விழாவான 6வது இந்தியக் கைபேசி மாநாடானது டெல்லியில் நடைபெற்றது.
- இதில் 5G, செயற்கை நுண்ணறிவு (AI), இணைய உலகம் (IoT) போன்ற முக்கிய கருப் பொருள்களைச் சுற்றியுள்ள சமீபத்தியத் தொழில்துறைத் தொழில்நுட்பப் போக்குகள் பற்றி விவாதிக்கப்பட்டது.
- இது இந்தியத் தொலைத் தொடர்புத் துறை மற்றும் கைபேசி இணைப்புச் சேவை வழங்குநர் சங்கம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது

## உலகின் மிகப்பெரியக் கலப்பின மின் உற்பத்தி நிலையம்



- அதானி க்ரீன் எனர்ஜி நிறுவனமானது, 600 மெகாவாட் திறன் கொண்ட உலகின் மிகப் பெரிய காற்றாலை-சூரியசக்தி ஆகிய இரண்டையும் கொண்ட ஒரு கலப்பின மின் உற்பத்தி நிலையத்தினை ராஜஸ்தானின் ஜெய்சால்மர் நகரில் அமைத்துள்ளது.
- இது 600 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் நிலையம் மற்றும் 150 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை ஆலை ஆகியவற்றினை உள்ளடக்கியது.
- இந்நிறுவனம் உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்தி ஆலைகளில் ஒன்றான கமுதி சூரிய சக்தி மின் நிலையத்தினை இயக்குகிறது.

## இந்தியாவின் முதல் சிறிய வகை ஆளில்லா விமானம்

- இந்தியாவின் முதல் சிறிய வகை ஆளில்லா விமானம் என்ற சான்றிதழை அஸ்டீரியா ஏரோஸ்பேஸ் லிமிடெட் என்ற நிறுவனம் பெற்றுள்ளது.
- இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட A200 வகை என்ற ஆளில்லா விமானத்திற்குச் சான்றளிக்கப் பட்டது.
- "புவியியல் தகவல் அமைப்பு, விவசாயம், கட்டுமானம், சுரங்கம் மற்றும் பிற தொழில்களில் ஆய்வு மற்றும் வரைபடமிடல் போன்றப் பயன்பாடுகளுக்காக இந்த வகை ஆளில்லா விமானம் உருவாக்கப்பட்டுள்ளது."
- 250 கிராம் முதல் அதிகபட்சமாக இரண்டு கிலோ வரை எடை கொண்ட ஆளில்லா விமானங்கள் சிறிய வகை ஆளில்லா விமான வகையின் கீழ் வருகின்றன.




## மதம் மாறியவர்களுக்குப் பட்டியலினச் சமூகத்தினர் அந்தஸ்து

- முன்னாள் தலைமை நீதிபதி கேஜி பாலகிருஷ்ணன் தலைமையில் 3 பேர் கொண்ட ஒரு ஆணையத்தை மத்திய அரசு நியமித்துள்ளது.
- இது "வரலாற்று ரீதியாக அட்டவணைப்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஆனால் புதிதாக இந்து, பௌத்தம் மற்றும் சீக்கியம் மதம் தவிர மற்ற மதங்களுக்கு மாறிய நபர்களுக்கு" பட்டியலினச் சமூகம் என்ற அந்தஸ்து வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை வழங்கச் செய்திடுவதைப் பரிசீலிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அரசியலமைப்பின் 341வது பிரிவின் கீழ் அவ்வப்போது வெளியிடப்படும் குடியரசுத் தலைவர் உத்தரவுகளுக்கு இணங்க இந்த ஆணையம் இந்த விவகாரத்தை ஆராயும்.
- அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதிகள்) ஆணை, 1950 என்பது இந்து மதம், சீக்கிய மதம் அல்லது பௌத்த மதம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட மதத்தைத் தழுவிய எந்த ஒரு நபரும் ஒரு அட்டவணைச் சாதியின் உறுப்பினராக கருதப் படக்கூடாது என்று குறிப்பிடுகிறது.
- இந்துக்கள் மட்டுமே வகைப்படுத்தப்பட்ட இந்த அசல் ஆணை பின்னர் சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்களை உள்ளடக்கியதாக மாற்றப்பட்டது.


'COMPLEX, CONSTITUTIONAL QUESTION'

- The Constitution (Scheduled Castes) Order, 1950, states **SC status can only be accorded to Hindus, Sikhs and Buddhists**
- While BJP has been opposed to giving SC status to Dalit converts to Islam and Christianity, forming a panel suggests the **party is exercising caution against any legal pitfall**
- Calling it 'a seminal & historically complex sociological and Constitutional question given its sensitivity and potential impact', govt's gazette notification says change in definition of SCs can only be done on the basis of a detailed study
- **Panel to also study changes Dalits go through on converting** to other religions in terms of their customs, traditions, social and other status, as well as discrimination and deprivation

Ex-CJI KG Balakrishnan will head the 3-member panel

## சூரிய சக்தியில் இயங்கும் முதல் கிராமம்

- குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள மோதேரா, இந்தியாவின் முதல் 24×7 சூரிய சக்தியில் இயங்கும் கிராமமாக அறிவிக்கப்பட்டது.
- மோதேரா 24 மணி நேரமும் சூரிய சக்தியில் இயங்கும் நாட்டின் முதல் கிராமம் ஆகும்.
- இது நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின் உற்பத்தி நிலையம் மற்றும் குடியிருப்பு மற்றும் அரசுக் கட்டிடங்களில் பொருத்தப்பட்ட 1,300க்கும் மேற்பட்ட அளவில் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய ஆற்றல் உற்பத்தி அமைப்புகளை உள்ளடக்கியது.



## "மட்டடா சந்திப்பு" விழிப்புணர்வு நிகழ்ச்சி

- தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், 'மட்டடா சந்திப்பு' எனப்படும் ஓர் ஆண்டு கால வாக்காளர் விழிப்புணர்வுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மட்டேட்டா சந்திப்பு என்பது அகில இந்திய வானொலியுடன் இணைந்து இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட 52 நாட்கள் வரையில் ஒலிபரப்பாக உள்ள ஒரு வானொலித் தொடராகும்.
- வானொலியின் உதவியுடன் நாடு முழுவதும் உள்ள வாக்காளர்களுடன் தொடர்பு கொள்வதை மட்டேட்டா சந்திப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பசுமைத் தொழில்நுட்பப் பாதுகாப்பு மையம்

- இந்தியாவின் முதல் பசுமைத் தொழில்நுட்பப் பாதுகாப்பு மையமானது ஸ்ரீநகரில் உள்ள தேசியத் தொழில்நுட்பக் கழகத்தில் (NIT) திறக்கப்பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, உள்ளார்ந்த TBI (i-TBI) எனப்படும் மூன்று ஆண்டு கால முன்னெடுப்பிற்கு ஆதரவளித்து வருகிறது.
- சாத் பர்வேஸ் இந்த முதல் பசுமைத் தொழில்நுட்பப் பாதுகாப்பு மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.

## சிவிங்கிப் புலி மறு அறிமுகத் திட்ட கண்காணிப்பு




- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்கா மற்றும் பிற பொருத்தமான இடங்களில் சிவிங்கிப் புலிகளை அறிமுகப்படுத்துவதை மேற்பார்வையிடுவதற்காக 9 பேர் கொண்ட அறிமுகப்படுத்தச் செய்வதை மேற்பார்வையிட 9 பேர் கொண்ட பணிக் குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) சிவிங்கிப் புலிகள் அதிரடிப் படையின் செயல்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கும்.
- இந்தப் பணிக்குழுவானது இரண்டு ஆண்டுகள் பணியில் இருக்கும்.
- இந்தப் பணிக்குழுவின் உறுப்பினர்கள் சிறுத்தை மித்ராக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் குறிப்பாக அவற்றின் பாதுகாப்பு மற்றும் பொதுவான ஒரு பகுதியின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகத் தொடர்பு கொண்டு செயல்படுவர்.

## சார்தக் முன்னெடுப்பு

- 'சார்தக்' என்பது முதியோரின் மன நலனுக்கான ஒரு சமூகம் அடிப்படையிலான ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த முன்னெடுப்பின் மூலம் செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு முதியோர் மனநலம் குறித்துப் பயிற்சி அளிக்கப்படும்.
- தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் ஆனது ஹெல்ப் ஏஜ் இந்தியா அமைப்புடன் இணைந்து 10,000 மனநலப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

## கல்வி 4.0 அறிக்கை

- உலகப் பொருளாதார மன்றம், யுனிசெப் மற்றும் YuWaah (Generation Unlimited India) ஆகியவை இணைந்து கல்வி 4.0 இந்தியா அறிக்கையை வெளியிட்டன.
- இந்தியாவின் கல்வித் துறையில் கற்றல் பயன்பாடுகளை மேம்படுத்துவதிலும், அவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதிலும் தொழில்துறைப் புரட்சி 4.0 தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும் இது கவனம் செலுத்துகிறது.
- இந்த அறிக்கையின்படி, வேகமாக மாறிவரும் வேலைவாய்ப்புச் சந்தையில் மாணவர்களை வேலைக்கு அமர்த்தும் செயல்முறையே பள்ளியிலிருந்துப் பணிக்கு மாற்றுதல் என்பதாகும்.
- முறையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இல்லாததால், இந்தியாவில் பள்ளியில் இருந்து பணிக்கு மாற்றுதல் திட்டம் குறிப்பிடத்தக்கச் சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

## உலகப் பட்டினிக் குறியீடு 2022

- உலகப் பட்டினிக் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட121 நாடுகளில் இந்தியா 107வது இடத்தில் உள்ளது.
- இதில் இந்தியா 29.1 என்ற மதிப்பைப் பெற்று 'தீவிர நிலைப்' பிரிவில் இடம் பிடித்து உள்ளது.
- இந்திய நாடானது இலங்கை (64), நேபாளம் (81), வங்காளதேசம் (84), பாகிஸ்தான் (99) ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக கீழ் நிலையில் உள்ளது.
- தெற்காசியாவிலேயே ஆப்கானிஸ்தான் (109) மட்டுமே இந்தியாவை விட மோசமான நிலையில் உள்ள ஒரு நாடாகும்.
- இது கன்செர்ன் வேர்ல்டுவைட் மற்றும் வெல்த்ஹங்கர்லைஃப் ஆகியவற்றால் கூட்டாக வெளியிடப்பட்ட ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- இது நான்கு கூறு குறிகாட்டிகளின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டது – ஊட்டச் சத்துக் குறைபாடு, குழந்தை வளர்ச்சியின்மை, குழந்தை வளர்ச்சி குறைபாடு மற்றும் குழந்தை இறப்பு ஆகியவையாகும்.
- உலகப் பட்டினிக் குறியீட்டில், பட்டினி நிலைமையின் தீவிரத்தைப் பிரதிபலிக்கிற நிலையில் மதிப்பெண் ஆனது 100 புள்ளி அளவில் கணக்கிடப் படுகிறது.
- அதில் சுழியம் என்பது சிறந்த மதிப்பெண் (பட்டினி நிலை இல்லை) மற்றும் 100 என்பது மோசமான நிலை ஆகும்.

## Food for thought

India's score of 29.1 in the 2022 Global Hunger Index falls under the "serious" category in the hunger meter. It ranked 107 out of the 121 countries analysed below Rwanda and Ethiopia

| =< 9.9 low | 10-19.9 moderate | 20-34.9 serious | 35-49.9 alarming | >= 50 extremely alarming |
|---|---|---|---|---|
| | | 29.1 | | |

| Rankings | Country | | Rankings | Country |
|---|---|---|---|---|
| 102 | Rwanda | | 106 | Sudan |
| 103 | Nigeria | | **107** | **India** |
| 104 | Ethiopia | | 108 | Zambia |
| 105 | Republic of Congo | | 109 | Afghanistan |
| | | | 110 | Timor-Leste |

**LEADS 2022**




- 2022 ஆம் ஆண்டிற்கான LEADS (பல்வேறு மாநிலங்கள் முழுவதும் தளவாட வழங்கீடுகளை எளிதாக்குதல்) அறிக்கையினை வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது சமீபத்தில் வெளியிட்டது.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் நான்கு பெரிய வகைகளின் கீழ் கடலோர மாநிலங்கள், உள்நாடு/நிலத்தினால் சூழப்பட்ட மாநிலங்கள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகிய நிலைகளில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இது மூன்று செயல்திறன் வகைப்பாடுகளை வழங்குகிறது.
    - சாதனையாளர்கள் - 90 சதவீதம் அல்லது அதற்கு மேல் சாதனை அடையும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள்

- வேகமாக முன்னேறி வருபவை - 80 முதல் 90 சதவிகிதம் சாதனை அடையும் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும்
- இலட்சியமிக்கவை - 80 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண் பெற்ற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள்.

❖ 15 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சாதனையாளர்களாக வகைப் படுத்தப் பட்டுள்ளன.

❖ ஆந்திரப் பிரதேசம், அசாம், சண்டிகர், டெல்லி, குஜராத், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு, தெலுங்கானா, உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்கள் மேற்கண்ட குழுவில் இடம் பெற்றுள்ளன.

❖ சமீபத்திய அறிக்கையில் கேரளா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், புதுச்சேரி, சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகியவை வேகமாக முன்னேறி வருபவையாக வகைப் படுத்தப் பட்டுள்ளன.

❖ 15 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இலட்சியமிக்கவையாக வகைப் படுத்தப் பட்டுள்ளன

## இந்தியாவின் 50வது தலைமை நீதிபதி

❖ நீதிபதி D.Y.சந்திரசூட் இந்தியாவின் 50வது தலைமை நீதிபதியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.

❖ இவர் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் தேதி முதல் 1985 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதி வரை நீதித் துறையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றியத் தலைமை நீதிபதி Y.V.சந்திரசூட் அவர்களின் மகன் ஆவார்.

❖ ஓரினச் சேர்க்கை உறவுகளை குற்றமற்றதாக்குவது குறித்த இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவினைப் பகுதியளவு ரத்து செய்தல், ஆதார் திட்டத்தின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் சபரிமலை விவகாரம் குறித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்புகளை அவர் வழங்கினார்.

❖ வெறும் 74 நாட்கள் மட்டுமே குறுகிய பதவிக் காலத்தில் பதவி வகித்த, U.U.லலித்துக்குப் பிறகு இவர் பொறுப்பேற்க உள்ளார்.



## PM-DevINE

- ❖ வடகிழக்குப் பிராந்தியத்திற்கான பிரதமரின் மேம்பாட்டு முன்னெடுப்பு (PM-DevINE) திட்டத்திற்கு சமீபத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- ❖ வடகிழக்குப் பிராந்தியத்தில் அடிப்படை குறைந்தபட்ச சேவைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த முன்னெடுப்பானது அறிவிக்கப் பட்டது.
- ❖ இது வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மேம்பாட்டு இடைவெளிகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ வடகிழக்குப் பிராந்தியத்தில் பல்வேறு துறைகளில் உள்ள மேம்பாட்டு இடை வெளிகளை அகற்ற உதவும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இத்திட்டம் நிதி வழங்குகிறது.
- ❖ வடகிழக்குப் பிராந்தியத்தில் குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.




## நான்காவது வந்தே பாரத் விரைவு இரயில்

- ❖ உனாவில் இருந்து நான்காவது வந்தே பாரத் விரைவு இரயில் சேவையைப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த இரயிலானது உனா (இமாச்சலப் பிரதேசம்) மற்றும் புது தில்லி இடையே இயங்கும்.
- ❖ இந்த நான்காவது வந்தே பாரத் இரயில் ஆனது அதன் முந்தைய வடிவங்களை விட மேம்படுத்தப் பட்டதாகக் கருதப்படுகிறது.
- ❖ வந்தே பாரத் விரைவு இரயிலானது, இரயில் 18 என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ இது இந்திய இரயில்வே நிர்வாகத்தினால் இயக்கப்படும் ஒரு மித அதிவேக, நகரங்களுக்கு இடையே மின்சாரத்தில் இயங்கும் ஒரு பல-அலகு இரயில் ஆகும்.

- மற்ற 3 வழித்தடங்கள்
  - புது டெல்லி முதல் ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ரா வரை
  - புது டெல்லி முதல் வாரணாசி வரை மற்றும்
  - காந்திநகர் முதல் மும்பை மத்திய இரயில் நிலையம் வரை




## அலுவல் மொழிக் குழுவின் பரிந்துரைகள்

- அலுவல் மொழிக் குழுவின் 11வது தொகுதியானது குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப் பட்டது.
- இந்தி மொழி பேசும் மாநிலங்களில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகங்கள், இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மத்தியப் பல்கலைக் கழகங்களில் இந்தி மொழியைப் பயிற்றுவிப்பு மொழியாகப் பயன்படுத்துவதற்கு இக்குழு பரிந்துரைத்தது.
- இந்தி மொழி பேசாத மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களில் மேற்கொள்ளப் படும் வழக்குகள் ஆங்கிலம் அல்லது பிராந்திய மொழியில் பதிவு செய்யப் படுகின்றன.
- தீர்ப்புகள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் இருப்பதால் அவற்றை இந்தி மொழியின் மூலமான மொழி பெயர்ப்புகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- இந்தி மொழி பேசும் மாநிலங்களில் இந்தி மொழியைப் பயன்படுத்தாத மத்திய அரசுப் பணியில் உள்ள அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்கள் வருடாந்திரச் செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையில் (APAR) அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.
- இந்த விதிகளின்படி, A வகை மாநிலங்களில் இந்தி அதிகாரப்பூர்வ மொழியாகும்.
- B வகை மாநிலங்களில் 65 சதவீதத்திற்கும் குறைவாக இந்தி பயன்படுத்தப்படுகிறது.
- C வகை மாநிலங்கள் என்பது 65 சதவீதத்திற்கும் குறைவாக இந்தி மொழிப் பயன்பாடு உள்ள மாநிலங்கள் ஆகும்.
- A பிரிவு மாநிலங்களில் இந்தி மொழியை முழுமையாகப் பயன்படுத்துமாறும், மற்ற மாநிலங்கள் பிராந்திய மொழிகளைப் பயன்படுத்துமாறும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

- அலுவல் முறையிலான தகவல்தொடர்புகளில் ஆங்கில மொழியின் பயன்பாட்டைக் குறைப்பதும், இந்தியின் பயன்பாட்டை அதிகரிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும்.
- அலுவல் முறையிலான தகவல்தொடர்புகளில் இந்தி மொழியைப் பயன்படுத்துவதை மறு ஆய்வு செய்வதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் அலுவல் மொழிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.
- இது இந்திய அரசியலமைப்பின் 351வது பிரிவின் மூலம் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.
- இது 1976 ஆம் ஆண்டில் 1963 ஆம் ஆண்டு அலுவல் மொழிகள் சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்தக் குழுவின் முதல் அறிக்கை 1987 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

## ஒரே நாடு ஒரே உரம் திட்டம்

- பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஊர்வரக் பரியோஜனா-ஒரே நாடு ஒரே உரம் திட்டத்தை பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ், டிஏபி, என்பிகே அல்லது யூரியா ஆகிய அனைத்து வகையான உரங்களும், 'பாரத்' என்ற தயாரிப்புப் பெயரின் கீழ் விற்பனை செய்யப்படும்.
- பாரத் தயாரிப்புப் பெயரின் கீழ் விவசாயிகளுக்கு மலிவான மற்றும் தரமான உரங்களை வழங்குவதற்காக இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- ஒரே நாடு ஒரே உரம் என்ற இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் அனைத்து விதமான குழப்பங்களிலிருந்தும் விடுபட்டு சிறந்த உரத்தைப் பெறுவார்கள்.
- மேலும், இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட 600 பிரதான் மந்திரி கிசான் சம்ருத்தி கேந்திராக்களையும் (PMKSK) மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள உரங்களுக்கான சில்லறை விற்பனைக் கடைகள் படிப்படியாக PMKSK ஆக மாற்றப்படும்.




## இந்தியாவின் முதல் அலுமினிய சரக்குப் பெட்டி

- 61 BOBRNALHSM1 எனப்படும் இந்தியாவின் முதல் அலுமினியத்தாலான ரயில் சரக்குப் பெட்டியினை புவனேஸ்வர் ரயில் நிலையத்தில் மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தொடங்கி வைத்தார்.
- இது HINDALCO, RDSO மற்றும் Besco வேகன் ஆகியவற்றுடன் இணைந்து உள்நாட்டிலேயே முழுமையாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

- இந்த ஒற்றை அலுமினியச் சரக்குப் பெட்டியானது அதன் பயன்பாட்டு நாட்களில் 14,500 டன்களுக்கு மேலான கார்பன் டை ஆக்சைடைச் சேமிப்பதோடு, இது 85% மறுசுழற்சி செய்யக் கூடியதாகவும் 180 டன் கூடுதல் எடையைச் சுமந்து செல்லும் திறன் கொண்டதாகவும், குறைந்த எடை கொண்டதாகவும் குறைந்தப் பராமரிப்பு கொண்டதாகவும் நீண்ட நாட்கள் பயன்படக்கூடியதாகவும் உள்ளது.




## இந்தி மொழியில் இளங்கலை மருத்துவப் படிப்பிற்கான பாடப் புத்தகங்கள்

- இளங்கலை மருத்துவம் மற்றும் அறிவியல் கல்விப் படிப்பிற்கான இந்தி மொழிப் பாடப் புத்தகங்களை மத்திய உள்துறை அமைச்சர் போபால் நகரில் வெளியிட்டார்.
- இதன் மூலம் இந்தி மொழியில் இளங்கலை மருத்துவம் மற்றும் அறிவியல் கல்விப் படிப்பை தொடங்கிய முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாறியுள்ளது.
- முதற்கட்டமாக இந்தி மொழியில் பயிற்றுவிக்கப் படுவதற்கு உடற்கூறியல், உடலியல் மற்றும் உயிர் வேதியியல் ஆகிய மூன்று பாடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## கிருஷ்ணா நதியின் குறுக்கே தொங்கு பாலம்

- கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே முக்கிய கம்பிவடம் தாங்கிய தொங்குப் பாலத்தினைக் கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை இணைத்து நல்லமலா வனப்பகுதி வழியாக கடந்து செல்லும்.
- ஆற்றின் குறுக்கே கட்டப்படும் இந்தப் பாலமானது, நீளமான கண்ணாடியால் ஆன பாதசாரிகளுக்கான நடைபாதை, கோபுரம் போன்ற தூண்கள், ஒளிரும் விளக்குகள் மற்றும் ஒரு பெரிய போக்குவரத்து இடைவெளி போன்ற பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருக்கும்.

## மீன் உற்பத்தியில் 3வது இடம்

- உலகளாவிய மீன் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் 3வது பெரிய மீன் உற்பத்தி மற்றும் 2வது பெரிய மீன் வளர்ப்பு நாடாக இந்தியா உள்ளது.
- இந்திய மீன்வளம் கடல் சார்ந்த மீன்பிடித் தொழிலைச் சார்ந்திருப்பதிலிருந்து உள் நாட்டு மீன்பிடித் தொழிலுக்கு மாறியுள்ளது.
- மீன் உற்பத்தியில், 1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 36% என்ற அளவில் இருந்த இந்திய நாட்டின் பங்களிப்பானது, சமீப காலத்தில் 70% ஆக உயர்ந்துள்ளது.
- பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டமானது, மீன்வளத் துறையின் நிலையான மற்றும் பொறுப்பு மிக்க மேம்பாட்டின் மூலம் நீலப் புரட்சியைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PMMSY திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் மீன்பிடித் துறையில் 'சீர்திருத்தம், செயல் திறன் மற்றும் மாற்றம்' என்பதாகும்.




## இந்தியாவில் கலவை எரிபொருள் மின்சார மகிழுந்து

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், நிதின் கட்காரி டொயோட்டா கரோலா ஆல்டிஸ் எனும் கலவை எரிபொருள் மின்சார மகிழுந்தினை அறிமுகப்படுத்தினார்.
- இந்தியாவில் கலவை எரிபொருள் மூலம் இயங்கும் வலுவான கலப்பின மின்சார வாகனம் (FFV-SHEV) தொடர்பான முதல் முன்னோடித் திட்டமாக இது அறிவிக்கப் பட்டு உள்ளது.
- இந்தத் திட்டம் எத்தனால் மூலம் இயங்கும் கலவை எரிபொருள் ரக வாகனங்கள் இந்தியச் சூழ்நிலையில் சாத்தியமானதா என்பதை ஆய்வு செய்ய முயல்கிறது.
- கலவை எரிபொருள் ரக மகிழுந்துகள் எத்தனால், பெட்ரோல் அல்லது பெட்ரோல் மற்றும் எத்தனாலின் கலவை உள்ளிட்ட நெகிழ்திறன் மிக்க எரிபொருள்களில் இயங்கும் திறன் கொண்டது.
- இந்த வாகனங்கள் எந்திரத்தின் எரிபொருளை பெட்ரோலில் இருந்து எத்தனாலுக்கு மாற்றுவதற்கான நெகிழ்வுத் தன்மையை வழங்குகிறது.

- இந்த வாகனங்கள் மின்கலங்கள் மூலம் எந்திரத்தினை இயக்கி, எந்திரத்திலிருந்து வெளியாகும் கார்பன் உமிழ்வைக் குறைக்க உதவும்.

## Tele-MANAS முன்னெடுப்பு

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மாநிலங்கள் மத்தியில் தொலை தொடர்பு மன நலம் சார்ந்த உதவி வழங்கீட்டு மற்றும் வலையமைப்பு என்ற திட்டத்தினை (Tele-MANAS) தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, உலக மனநல தினத்தை முன்னிட்டுத் தொடங்கப் பட்டு உள்ளது.
- Tele-MANAS முன்னெடுப்பு ஆனது நாடு முழுவதும் இலவச தொலை தொடர்பு மன நலம் சார்ந்த உதவிச் சேவைகளை இரவு பகலாக முழு நேரமும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குறிப்பாக தொலைதூர அல்லது குறைந்த அளவு சேவை கிடைக்கப் பெறும் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அழைப்பாளர்கள் இந்த சேவைகளைப் பெறுவதற்கு ஏற்ப தங்களுக்கு விருப்பமான மொழியைத் தேர்ந்தெடுக்க வழிவகை கொண்ட கட்டணமில்லா எண் ஒன்று நாடு முழுவதும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.




## ஆயுத அமைப்புப் பிரிவு உருவாக்கம்

- இந்திய விமானப் படையின் 90வது ஆண்டு விழாவையொட்டி, இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கான ஆயுத அமைப்புப் பிரிவை உருவாக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- சுதந்திரத்திற்குப் பிறகுப் புதியச் செயல்பாட்டுப் பிரிவு உருவாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது முக்கியமாக வான்வழி பாயும் ஏவுகணைகள், நிலம் விட்டு வான் பாயும் ஏவுகணைகள், தொலைதூர இயக்க விமானம், இரட்டை மற்றும் பல பணியாளர்கள் கொண்ட விமானங்களில் ஆயுத அமைப்புச் செயல்பாட்டு அமைப்புகள் ஆகிய நான்கு சிறப்புப் பிரிவுகளில் பணியாளர்களை நியமிப்பதற்கு முக்கியமானதாகும்.




## INTERPOL அமைப்பின் 90வது பொதுச் சபை

- INTERPOL அமைப்பின் 90வது பொதுச் சபை புது டெல்லியில் நடைபெற்றது.
- இது 195 உறுப்பினர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய ஒரு காவல்துறை அமைப்பு ஆகும்.
- பொதுச் சபை என்பது சர்வதேசக் காவல்துறை அமைப்பின் உயர்மட்ட ஆளுகைக் குழு மற்றும் முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு ஆண்டிற்கு ஒருமுறை கூடுகிறது.
- 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் இந்த பொதுச் சபை நடைபெறுகிறது.
- இந்தியாவில் கடைசியாக 1997 ஆம் ஆண்டில் இந்தப் பொதுச் சபை நடைபெற்றது.

## LiFE பிரச்சாரம்




- சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை (LiFE) என்ற பிரச்சாரம் ஆனது, 2021 ஆம் ஆண்டில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP26 மாநாட்டில் பிரதமர் அவர்களால் தொடங்கப் பட்டது.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் (UNSG) அன்டோனியோ குட்டரெஸ், இந்தப் பிரச்சாரத்திற்கான கையேடு, சின்னம் மற்றும் முழக்கம் ஆகியவற்றின் வெளியீட்டு விழாவில் இந்தியப் பிரதமருடன் இணைந்து பங்கேற்றார்.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் தனது இரண்டாவது பதவிக் காலத்தை தொடங்கிய பின்னர், அவர் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பயணம் இதுவாகும்.

## தேசிய அறிவுசார் சொத்து மாநாடு 2022

- இது தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்த மாநாட்டின் கருத்துரு 'அறிவுசார் பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கச் செய்வதற்காக அறிவுசார் சொத்து சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துதல்' என்பதாகும்.
- 2015 ஆம் ஆண்டில் 81வது இடத்தில் இருந்த இந்தியா 2022 ஆம் ஆண்டில் 40வது இடத்திற்கு முன்னேறியது.
- இந்தத் தரவரிசையின் முதல் 10 இடங்களுக்குள் இந்தியாவினைக் கொண்டு வர நமது அரசாங்கம் முயல்கிறது.
- அறிவுசார் சொத்து என்பது புத்தாக்கங்கள் போன்ற அறிவின் படைப்பாக்கங்கள்; இலக்கிய மற்றும் கலைப் படைப்புகள்; வடிவமைப்புகள்; வர்த்தகத்தில் பயன்படுத்தப் படும் சின்னங்கள், பெயர்கள் மற்றும் படங்கள் ஆகியவற்றினைக் குறிக்கிறது.

## ஜெயப்பிரகாஷ் நாராயணனின் சிலை

- பீகார் மாநிலம் சரண் மாவட்டத்தில் உள்ள சிதாப்டியாராவில் நிறுவப்பட்டுள்ள 14 அடி உயர லோக் நாயக் ஜெயப் பிரகாஷ் நாராயண் சிலையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்து வைத்தார்.
- ஜெயப் பிரகாஷ் நாராயண் JP அல்லது லோக் நாயக் என்று வெகு பிரபலமாக அறியப் படுகிறார்.
- இவர் ஒரு சுதந்திரப் போராட்ட ஆர்வலர், கோட்பாட்டாளர், சமூகவாதி மற்றும் அரசியல் தலைவர் ஆவார்.
- இவருக்கு 1999 ஆம் ஆண்டில் (மரணத்திற்குப் பின்) பாரத ரத்னா விருது வழங்கப் பட்டது.

## எத்தனால் மானியத் திட்டம்

- எத்தனால் கலப்புத் திட்ட வட்டி மானியத் திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கச் செய்வதற்கான காலக்கெடுவை மார்ச் 31 ஆம் தேதி வரையில் மத்திய அரசு நீட்டித்து உள்ளது.
- இது முதன் முதலில் 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- அரசாங்கத்தின் ஆதரவோடு, தொழில்முனைவோர் தங்கள் திட்டங்களை முடிப்பதற்கு ஏற்ற வசதிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## தளவாடத் திட்டத்தின் அற்புதம்

- சர்வதேச நாணய நிதியம் (IMF) இந்தியாவின் நேரடி பயன் பரிமாற்ற (DBT) திட்டத்தை 'தளவாட அற்புதம்' என்று அழைத்துள்ளது.
- குறிப்பாக பெண்கள், முதியவர்கள் மற்றும் விவசாயிகளை இலக்காக வைத்துள்ளத் திட்டங்களை இந்தியா இந்த வகையில் பதிவு செய்துள்ளது.
- அதன் தலைமை இயக்குநர் இந்தியாவின் தனித்துவ அடையாள முறையைப் பாராட்டியதோடு, மொத்தப் பணப் பரிமாற்றத் திட்டத்தின் முதுகெலும்பாக விளங்கும் ஆதார் முறையையும் பாராட்டினார்.




## மும்பை விமான நிலையம் பசுமை எரிசக்திப் பயன்பாட்டிற்கு மாற்றம்




- மும்பையின் சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையமானது, அதன் ஆற்றல் நுகர்வுத் தேவைகளுக்காக முற்றிலும் பசுமை எரிசக்தி வள ஆதாரங்களுக்கு மாறியுள்ளது.
- இதன் மூலம் இந்தியாவின் 100 சதவீத நிலையான வளர்ச்சி கொண்ட விமான நிலையங்களில் ஒன்றாக இது மாறியுள்ளது.

- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் பசுமை ஆற்றலில் மட்டுமே முழுவதுமாக இயங்கும் கலப்பினத் தொழில்நுட்பத்தை இந்தியாவில் அறிமுகப் படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது அந்த விமான நிலையத்தினால், அதன் கார்பன் தடத்தைக் குறைத்து, 'நிகரச் சுழியம்' என்ற உமிழ்வை நோக்கி அதன் பயணத்தை மேலும் கொண்டுச் செல்லச் செய்வதற்கான அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

## கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி - 'பிரஸ்தான்'

- பிரஸ்தான் எனப்படும் கடல்சார் பாதுகாப்புப் பயிற்சியானது, கிழக்கு கடற்படைப் பிரிவினால் ஆந்திரப் பிரதேசத்தின் காக்கிநாடா பகுதியின் கடற்சார் மேம்பாட்டுப் பகுதியில் நடத்தப்பட்டது. '
- கடல்சார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கடல்சார் பங்குதாரர்களின் முயற்சிகளையும் ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## PowerEX பயிற்சி 2022




- CERT-In மற்றும் பவர்-CERT-In ஆகியவை இணைந்து சமீபத்தில் PowerEX எனப்படும் இணைய வெளிப் பாதுகாப்புப் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளன.
- CERT-In அமைப்பானது அதன் தளத்தில் இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை மேற் கொண்டது.
- சமீபத்தில் முடிவடைந்த இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியின் நோக்கம் "தகவல் தொழில்நுட்பம் & செயல்பாட்டு அமைப்புகளில் இணையவெளி தாக்குதல் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, பகுப்பாய்வு செய்வது மற்றும் அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது" என்பதாகும்.
- இந்தப் பயிற்சியின் கருத்துரு, "தகவல் தொழில்நுட்பம் & செயல்பாட்டு அமைப்புகளின் உள்கட்டமைப்பில் இணையவெளி மூலம் மேற்கொள்ளப்படும் இடையூறுகளைத் தடுத்தல்" ஆகும்.
- இணையவெளி அச்சுறுத்தல்கள் பற்றி கற்கவும், பயிற்சி செய்யவும் மற்றும் அதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளச் செய்யவும் மின் துறைப் பயன்பாட்டு அமைப்புகளில் பணி புரியும் அதிகாரிகளுக்கு இது உதவியது.

## தொடர்பு மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்பு நடவடிக்கைகளின் மாநாடு

- கஜகஸ்தானின் ஆஸ்தானாவில் ஆசியாவில் மேற்கொள்ளப்படும் தொடர்பு மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்பு நடவடிக்கைகள் குறித்த 6வது உச்சி மாநாடானது (CICA) நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாகும்.
- தொடர்பு மற்றும் நம்பிக்கைக் கட்டமைப்பு நடவடிக்கைகளின் மாநாடு என்பது ஆசியாவில் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் அமைதி, பாதுகாப்பு மற்றும் உறுதித் தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு அரசுகளுக்கிடையேயான மன்றமாகும்.
- 1992 ஆம் ஆண்டில் கஜகஸ்தானின் முதல் அதிபர் நர்சுல்தான் நசர்பயேவ் என்பவரால் இந்த அமைப்பை உருவாக்குவதற்கான கருத்தானது முதலில் முன்வைக்கப் பட்டது.
- இதன் முதல் உச்சி மாநாடானது 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்றது.
- இந்த அமைப்பின் உறுப்பினர்களில் 27 ஆசிய நாடுகள், ஒன்பது பார்வையாளர் நாடுகள் மற்றும் ஐந்து சர்வதேச அமைப்புகளும் அடங்கும்.
- இதன் செயலகம் 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து அல்மாட்டியில் (கஜகஸ்தான்) அமைந்துள்ளது.

## புதிய காங்கிரஸ் தலைவர்

- கர்நாடகாவின் மூத்தத் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தனது போட்டியாளரான கேரளாவினைச் சேர்ந்த சசி தரூரைத் தோற்கடித்துள்ளார்.
- 24 ஆண்டுகளில் காந்தியக் குடும்பத்தைச் சாராத முதல் காங்கிரஸ் தலைவர் இவர் ஆவார்.
- கடந்த 40 ஆண்டுகளில் பழம்பெரும் இந்த அமைப்பின் முதல் பட்டியலினச் சாதியினர் பிரிவினைச் சேர்ந்த தலைவர் இவர் ஆவார்.
- இது கடந்த 22 ஆண்டுகளில் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான முதல் தேர்தல் மற்றும் அக்கட்சியின் 137 ஆண்டுகால வரலாற்றில் ஆறாவது பெரிய போட்டியாகும்.
- 1939 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவருக்கான முதல் தேர்தல் நடத்தப் பட்டது.
- அதில் மகாத்மா காந்தியின் ஆதரவு பெற்ற பட்டாபி சீதாராமையா நேதாஜி சுபாஷ் சந்திர போஸிடம் தோல்வி அடைந்தார்.
- இந்த தேர்தலில் 9,500 கட்சி பிரதிநிதிகள் வாக்களித்தனர்.
- கார்கே 7,897 வாக்குகளும், தரூர் 1,072 வாக்குகளும் பெற்றனர்.

## பல்துறை கண்காணிப்பு முகமை

- இந்திய அரசு சமீபத்தில் பல்துறை கண்காணிப்பு முகமையைக் கலைத்தது.
- இது முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையை விசாரிப்பதற்காக அமைக்கப் பட்டது.

- மத்தியப் புலனாய்வுப் பிரிவின் கீழ் இரண்டு ஆண்டு காலப் பணிக் காலத்திற்கு 1998 ஆம் ஆண்டில் இந்த பல்துறை கண்காணிப்பு முகமை அமைக்கப்பட்டது.
- இது MC ஜெயின் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
- 24 ஆண்டுகளுக்கும் மேலான அதன் செயல்பாட்டிற்குப் பிறகும், இந்த முகமை அந்த சதித் திட்டம் பற்றி எந்தத் திடுக்கிடும் புதிய கண்டுபிடிப்புகளையும் பதிவு செய்ய வில்லை.




## இடம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பு

- இந்தியாவின் முதல் ‘இடம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பானது’ மும்பையில் தொடங்கப் பட்டுள்ளது.
- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையினால் இந்த அமைப்பானது உருவாக்கப் பட்டுள்ளது.
- இது புலம்பெயர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய புதுப்பிக்கப்பட்டத் தகவல்களை ஒரே அமைப்பில் உடனடியாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இணையதள அடிப்படையிலான இந்த இடம்பெயர்வு கண்காணிப்பு அமைப்பானது (MTS) பாதிக்கப்படக் கூடிய, குறிப்பிட்ட கால, புலம்பெயர்ந்த பயனாளிகளின் இடப் பெயர்வுகளைத் தனிப்பட்ட அடையாள எண்கள் மூலம் கண்காணிக்கும்.

## முதல் செமிகான் இந்தியா ஃபியூச்சர் டிசைன் கண்காட்சி

- முதல் செமிகான் இந்தியா ஃபியூச்சர் டிசைன் என்ற கண்காட்சியானது குஜராத்தில் நடைபெற்றது.
- குறைகடத்தி வடிவமைப்பிற்காக முதலீடு செய்வதற்குப் புத்தொழில் நிறுவனங்கள், அடுத்தத் தலைமுறை கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் வணிக முன்னணி நிறுவனங்கள் ஆகியோரை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது, இஸ்ரோ நிறுவனத்தினால் சோதனை செய்து அங்கீகரிக்கப் பட்ட NavIC அலைமாற்றி சில்லுத் தொகுதிகளும் வெளியிடப்பட்டன.

## சிந்து நதி நீர் ஒப்பந்த நடுவண் அமைப்பு

- கிஷெங்கங்கா மற்றும் ரேட்டில் நீர்மின் நிலையங்கள் தொடர்பாக, ஒரு "நடுநிலை நிபுணர்" மற்றும் நடுவர் நீதிமன்றத்தின் தலைவர் ஆகியோரை உலக வங்கி நியமித்து உள்ளது.

- 1960 ஆம் ஆண்டு சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இரண்டு திட்டங்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் சர்ச்சையில் சிக்கியுள்ளன.
- இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்பது வருடப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, 1960 ஆம் ஆண்டில், உலக வங்கியும் ஒரு கையெழுத்துதாரராக உள்ள இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தமானது, இரு நாடுகளுக்கும் இடையே நதிநீரைப் பயன்படுத்துவது தொடர்பாக ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு வழிமுறையை நிறுவுகிறது.




## குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு

CABINET DECISIONS | 18 OCTOBER 2022

| Crops | MSP for Robi Crops (2022-23) | MSP for Robi Crops (2023-24) | Increase in MSP (Absolute) |
|---|---|---|---|
| Wheat | 2015 | 2125 | 110 |
| Barley | 1635 | 1735 | 100 |
| Gram | 5230 | 5335 | 105 |
| Lentil (Masur) | 5500 | 6000 | 500 |
| Rapeseed & Mustard | 5050 | 5450 | 400 |
| Safflower | 5441 | 5650 | 209 |

(Rs. Per Quintal)

- 2023-24 ஆம் ஆண்டின் சந்தைப்படுத்துதல் பருவத்திற்கான அனைத்து முக்கிய ராபி பருவப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) உயர்த்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ பருப்புகளுக்கான (மசூர்) குறைந்தபட்ச ஆதரவு விலையானது அதிகபட்சமாக குவிண்டாலுக்கு 500 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ❖ பலாப்பழம் மற்றும் கடுகு ஆகியவற்றிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.400 உயர்த்தப் பட்டுள்ளது.
- ❖ பருப்புக்கான MSP (மசூர்) அதிகபட்சமாக குவிண்டாலுக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது.

## ஸ்வதேஷ் தர்ஷன் 2

- ❖ 15 மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கான ஸ்வதேஷ் தர்ஷன் 2 என்ற திட்டத்தினை மத்திய அரசு தொடங்க உள்ளது.
- ❖ மத்தியப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் அடங்கிய பதினைந்து மாநிலங்கள் இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ 'ஸ்வதேஷ் தர்ஷன் 2' திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் ஜான்சி மற்றும் பிரயாக்ராஜ், மத்தியப் பிரதேசத்தில் குவாலியர், சித்ரகூட் மற்றும் கஜுராஹோ மற்றும் மகாராஷ்டிராவில் அஜந்தா மற்றும் எல்லோரா ஆகியவை இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சில முக்கிய இடங்களாகும்.
- ❖ இது கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலா மண்டலங்களில் இருந்து விலகி, இடம் சார்ந்தச் சுற்றுலாவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்ற இந்தியாவின் புதிய உள்நாட்டுச் சுற்றுலாக் கொள்கையின் ஒரு பகுதியாக இது ஊக்குவிக்கப்படுகிறது.
- ❖ ஸ்வதேஷ் தர்ஷன் திட்டமானது கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலா மண்டலங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 2014-15 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- ❖ ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்திற்கு மத்திய அரசு முழு நிதியுதவியை வழங்குகிறது.



## கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி

- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் தடுப்பூசியின் உற்பத்தியானது, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தொடங்கப்பட உள்ளது.
- இதற்கு நாற்கர இணைப்புத் திறன் கொண்ட மனித பாப்பிலோமா (HPV)- "செர்வாவாக்" தடுப்பூசி என பெயரிடப்பட்டு, இது இந்திய சீரம் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதற்காக இந்த தடுப்பூசி அறிவிக்கப்பட்டது.
- 'செர்வாவாக்' என்பது, இந்திய சீரம் நிறுவனத்தின் ஆதரவுடன், பில் அண்ட் மிலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையுடனான DBT மற்றும் BIRAC ஆகியவற்றின் கூட்டுழைப்பின் விளைவாக உருவாக்கப்பட்டது.
- 'கிராண்ட் சேலஞ்சஸ் இந்தியா' என்ற அதன் கூட்டணி திட்டத்தின் மூலம் இந்த நாற்கர இணைப்புத் திறன் கொண்ட தடுப்பூசியானது உள்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.




## இந்தியாவின் வேலைவாய்ப்புக் கண்ணோட்டம்

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) நாட்டின் வேலைவாய்ப்புக் கண்ணோட்டம் குறித்த செய்திக் குறிப்பை வெளியிட்டது.
- பல்வேறு பரிமாணங்களில் பதிவான முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப் பகுதிக்கு இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்(EPFO), தொழிலாளர் அரசு காப்பீட்டு நிறுவனம் (ESIC) மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆகியவற்றின் படி இந்தியாவில் முறை சார் வேலைவாய்ப்பு ஆகஸ்ட் மாதத்தில் சரிவைக் கண்டுள்ளது.
- ஜூலை மாதத்தில் 1.82 மில்லியனாக இருந்த, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள புதிய சந்தாதாரர்களின் எண்ணிக்கையானது, 7.1 சதவீதம் குறைந்து ஆகஸ்ட் மாதத்தில் 1.69 மில்லியனாக குறைந்துள்ளது.

- ஜூலை மாதத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 1.58 மில்லியன் சந்தாதாரர்களுடன் ஒப்பிடச் செய்கையில், ஆகஸ்ட் மாதத்தில் 8 சதவீதம் குறைந்து 1.46 மில்லியன் சந்தா தாரர்களாக பதிவாகியுள்ளதாக தொழிலாளர் அரசு காப்பீட்டு நிறுவனம் தெரிவித்து உள்ளது.




## கிளைபோசேட் பயன்பாட்டிற்குத் தடை

- இந்தியா முழுவதும் கிளைபோசேட் என்ற ஒரு களைக்கொல்லியினைப் பயன்படுத்த மத்திய அரசு இறுதியாக கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
- மனிதன் மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்திற்கு ஆபத்தான இது ஒரு களைக் கொல்லியாகும்.
- இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களில் கிளைபோசேட் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.



# சர்வதேசச் செய்திகள்

## அனைவருக்கும் இலவச ரொட்டி

- துபாய் தனது நகரத்தில் உள்ள ஏழை மக்களுக்கு இலவசமாக ரொட்டி விநியோகம் செய்வதற்காக விநியோக இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- விநியோக இயந்திரங்களில் கணினி தொடுதிரை உள்ளதால், அது பல்வேறு வகை ரொட்டிகளைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு வழிவகை செய்கிறது.
- இந்த இயந்திரங்களில் உள்ள 'அனைவருக்கும் ரொட்டி' என்ற உரையானது நூற்றுக் கணக்கான புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது.
- துபாய் வேகமாக உயர்ந்து வரும் நுகர்வோர் விலைகளால் பாதிக்கப் பட்டுள்ளது.
- துபாய் புள்ளியியல் மையமானது, உணவு விலைக் குறியீடானது ஜூலை மாதத்தில் 8.75 சதவீதம் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகமானது இந்தியா, வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 8.7 மில்லியன் குடியேறிய நபர்களைக் கொண்டுள்ளது.




## விமான நிலையச் சேவை தர விருது 2022

- சர்வதேச விமான நிலையச் சபையானது, கொச்சின் சர்வதேச விமான நிலைய நிறுவனத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கான விமான நிலையச் சேவை தர விருதினை வழங்கியுள்ளது.
- இந்த விருதானது, உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறையில் வழங்கப்படும் ஒரு உயரிய விருதாகக் கருதப்படுகிறது.
- பெருந்தொற்றுக் காலத்திற்குப் பிறகு, தடையற்றப் போக்குவரத்தை உறுதி செய்து பயணிகளின் திருப்தியை மேலும் வலுப்படுத்திய 'பாதுகாப்பு திட்டத்தினை' திறம் படச் செயல்படுத்தியதற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## ஸ்வச் வாயு சர்வேக்சன்

- தேசிய தூய்மைக் காற்றுத் திட்டத்தின் கீழ் 'ஸ்வச் வாயு சர்வேக்சன் - நகரங்களின் தர வரிசை' குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- 2025-26 ஆம் ஆண்டிற்குள் காற்று மாசுபாட்டை 40% வரை குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட தேசிய தூய்மைக் காற்று திட்டத்தின் ஒரு பகுதியாக தயாரிக்கப்பட்ட நகரச் செயல் திட்டங்களை செயல்படுத்துவதன் அடிப்படையில் இந்தியாவில் உள்ள 131 நகரங்களைத் தரவரிசைப் படுத்த இந்த வழிகாட்டுதல்கள் உதவுகிறது.
- இந்த 131 நகரங்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் மூன்று குழுக்களாக வகைப் படுத்தப் பட்டுள்ளன.
    - 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட முதல் குழுவில், 47 நகரங்கள் உள்ளன.
    - 3 முதல் 10 லட்சம் மக்கள்தொகை கொண்ட இரண்டாவது குழுவில் 44 நகரங்கள் உள்ளன.
    - 3 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட மூன்றாவது குழுவில் 40 நகரங்கள் உள்ளன.




Swachh Vayu Sarvekshan- Ranking of Cities under National Clean Air Programme (NCAP)

## சவுதி அரேபியாவின் பிரதமர்

- சவுதி அரேபியாவின் அதிகாரம் வாய்ந்த பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அந்த நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- MbS என அழைக்கப்படும் இந்தப் பட்டத்து இளவரசர், பாதுகாப்பு அமைச்சராக இருந்து பதவி உயர்வு பெற்று சவுதி அரேபியாவின் தற்கால ஆட்சியாளராகப் பணியாற்றி வருகிறார்.



- சவூதி அரேபியா உலகிலேயே அதிகளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடாகத் திகழ்வதோடு, மத்திய கிழக்குப் பகுதியில் அமெரிக்காவின் ஒரு முக்கிய நட்பு நாடாகவும் இது திகழ்கிறது.

## தென்பகுதி தயார்நிலை நடவடிக்கை




- இந்தியாவின் ஐஎன்எஸ் சுனய்னா என்ற கப்பலானது ஒரு வருடாந்திரப் பயிற்சி நடவடிக்கையான ஒருங்கிணைந்தக் கடல்சார் படைகளின் தென்பகுதி தயார்நிலை என்ற நடவடிக்கையில் பங்கேற்க உள்ளது.
- ஒருங்கிணைந்தக் கடல்சார் படைகள் என்பது பன்னாட்டுக் கடற்படைக் கூட்டாண்மை ஆகும்.
- இந்திய நாடானது ஒருங்கிணைந்தக் கடற்படைகளின் உறுப்பினர் நாடு அல்ல.
- இந்தப் பயிற்சிகளில் இந்தியா ஒரு துணைப் பங்குதாரர் நாடாக பங்கேற்க உள்ளது.
- இது ஒருங்கிணைந்தக் கடல்சார் படைகளால் (CMF) நடத்தப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சி நடவடிக்கையில் அமெரிக்கா, இத்தாலி, ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும், இங்கிலாந்து, ஸ்பெயின் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் கப்பல்களும் பங்கேற்கின்றன.

## சர்வதேச சூரியசக்தி கூட்டணியில் சர்வதேச வான்வழிப் போக்குவரத்து அமைப்பு

- கனடாவின் மாண்ட்ரீயல் நகரில் நடைபெற்ற சர்வதேச வான்வழிப் போக்குவரத்து அமைப்பின் 42வது அமர்வின் போது சர்வதேச வான்வழிப் போக்குவரத்து அமைப்பு (ICAO) சர்வதேச சூரிய சக்தி கூட்டணியுடன் (ISA) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- உலக வான்வழிப் போக்குவரத்துத் துறையில் சூரிய ஆற்றல் பயன்பாட்டிற்கான புதிய தொடக்கத்தை இந்நிகழ்வு குறிக்கிறது.
- இது சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் அனைத்து உறுப்பினர் நாடுகளின் வான்வழிப் போக்குவரத்துத் துறையின் சூரியசக்திமயமாக்கலை செயல்படுத்தும்
- இது வான்வழிப் போக்குவரத்துத் துறையில் இந்தியாவின் நிகரச் சுழிய உமிழ்வு இலக்குகளுக்கு வழி வகுக்கும் CO2 உமிழ்வுகளின் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டது.

## 8வது உலகப் பசுமைப் பொருளாதார உச்சி மாநாடு

- இது பசுமைப் பொருளாதாரம் குறித்த முன்னணி உலக மன்றங்களில் ஒன்றாகும்.
- துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையம், துபாய் உயர் அதிகார ஆற்றல் சபை மற்றும் உலகப் பசுமைப் பொருளாதார அமைப்பு ஆகியவை WETEX அமைப்புடன் இணைந்து இந்த உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்தன.
- இந்த உச்சி மாநாடு 'கூட்டுறவு மூலமானப் பருவநிலை நடவடிக்கை தலைமைத்துவம்: நிகரச் சுழிய உமிழ்விற்கான செயற்திட்டம்' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.

## உக்ரைன் பகுதிகள் இணைப்பு

- ரஷ்யா நான்கு உக்ரேனியப் பகுதிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க், சபோரிஜியா மற்றும் கெர்சன் ஆகியன இணைக்கப் பட்ட 4 உக்ரேனியப் பிரதேசங்கள் ஆகும்.
- முன்னதாக, ரஷ்ய அரசானது இந்தப் பிராந்தியங்களில் நிர்வாகம் மேற்கொள்வது குறித்த ஒரு பொது வாக்கெடுப்பினை ரஷ்யா மேற்கொண்டது.




## யுனெஸ்கோ அமைப்பின் MONDIACULT உலக மாநாடு 2022

- யுனெஸ்கோ அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான MONDIACULT உலக மாநாடு மெக்சிகோ நகரில் நடைபெற்றது.
- இது வகையிலான மூன்றாவது மாநாடு இதுவாகும்.
- இந்த மாநாட்டில், 100க்கும் மேற்பட்ட நாடுகளின் கலாச்சார அமைச்சர்கள் பங்கேற்று இந்தப் பலதரப்பு மன்றத்தில் உலகளாவிய கலாச்சாரக் கொள்கை போக்குகள் குறித்து முடிவு செய்தனர்.
- கலாச்சாரக் கொள்கைகள் பற்றிய முதல் MONDIACULT உலக மாநாடானது, 1982 ஆம் ஆண்டில் மெக்சிகோ நகரில் (மெக்சிகோ) நடைபெற்றது.
- அடுத்ததாக மேம்பாட்டிற்கான கலாச்சாரக் கொள்கைகளுக்கான யுனெஸ்கோ உலக மாநாடானது, 1998 ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோம் நகரில் (சுவீடன்) நடைபெற்றது.

## ரஷ்யாவின் இணைப்பு நடவடிக்கைக்கு எதிரான தீர்மானம்

- ரஷ்யாவின் இணைப்பு நடவடிக்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் (UNSC) தீர்மானத்திற்கு வாக்களிப்பதை இந்தியா புறக்கணித்தது.
- இது மாஸ்கோவின் "சட்டவிரோத வாக்கெடுப்பிற்கு" கண்டனம் தெரிவித்ததோடு, நான்கு உக்ரேனிய நாட்டுப் பிரதேசங்களை ரஷ்யா இணைத்த நடவடிக்கையானது செல்லுபடியாகாது என்று அறிவித்தது.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் மீது ரஷ்யா தனது மறுப்பு அதிகாரத்தினை (வீட்டோ) பயன்படுத்தி அதனைத் தடுத்தது.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினரான ரஷ்யா தனது மறுப்பு அதிகாரத்தினைப் பயன்படுத்தி அத்தீர்மானத்தினை ரத்து செய்ததால் சபையினால் அந்தத் தீர்மானத்தை ஏற்க முடியவில்லை.
- சபையின் 15 உறுப்பினர்களில் 10 உறுப்பினர் நாடுகள் அத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.
- சீனா, காபோன், இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் அதில் வாக்களிப்பதைத் தவிர்த்தன.




## AUKUS கூட்டணிக்கு எதிரான தீர்மானம்

- அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை ஆஸ்திரேலியாவுக்கு வழங்க வழி வகுக்கும் AUKUS கூட்டமைப்பிற்கு எதிராக சர்வதேச அணுசக்தி முகமையில் மேற் கொள்ளப்பட்ட ஒரு வரைவுத் தீர்மானத்திலிருந்து சீனா பின் வாங்கியது.
- கடந்த செப்டம்பர் மாதத்தில் AUKUS (ஆஸ்திரேலியா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா) பாதுகாப்புக் கூட்டாண்மை அறிவிக்கப்பட்டது.
- இது அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்குவதற்கான தொழில் நுட்பத்தைப் பெறுவதற்கு ஆஸ்திரேலியாவிற்கு உதவி வழங்கும்.
- இந்த முயற்சியானது அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் (NPT) கீழ் தங்கள் பொறுப்புகளை மீறுவதாக சீனா கூறியது.

- ❖ இது சம்பந்தமாக சர்வதேச அணுசக்தி முகமை மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் சீனா விமர்சித்தது.
- ❖ இந்தியா உட்பட சர்வதேச அணுசக்தி முகமையில் 35 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

## எண்ணெய் உற்பத்தியில் குறைப்பு




- ❖ OPEC+ என்ற அமைப்பானது எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு 2 மில்லியன் பீப்பாய்கள் (bpd) என்ற அளவிற்குக் குறைப்பதற்கு முடிவு செய்துள்ளது.
- ❖ கோவிட்-19 பெருந்தொற்று தொடங்கியதில் இருந்து மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய குறைப்பு இதுவாகும்.
- ❖ பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பானது 1960 ஆம் ஆண்டில் ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா மற்றும் வெனிசுலா ஆகிய ஸ்தாபன உறுப்பினர் நாடுகளால் நிறுவப்பட்டது.
- ❖ அதன் பிறகு பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு விரிவாக்கப் பட்டு, அது தற்போது 13 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- ❖ ரஷ்யாவை உள்ளடக்கிய மற்ற முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகளான 11 நட்பு நாடுகளின் சேர்க்கையுடன் இந்தக் குழுவானது OPEC+ என அழைக்கப்படுகிறது.

## புர்கினா பாசோ இராணுவ ஆட்சி

- ❖ மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினா பாசோ 8 மாதங்களில் இரண்டாவது இராணுவப் புரட்சியால் பாதிக்கப் பட்டுள்ளது.
- ❖ கேப்டன் இப்ராஹிம் டிராரே இப்போது புர்கினா பாசோவின் அதிபராக உள்ளார்.
- ❖ அவர் லெப்டினன்ட்-கர்னல் பால்-ஹென்றி சண்டோகோ டமிபா என்பவரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினார்.
- ❖ புர்கினா நாடானது ஏழு வருடமாக ஜிஹாதி பிரச்சாரத்துடன் போராடி வருகிறது.

## உலகளாவிய உணவுப் பாதுகாப்புத் தளம்

- ❖ சர்வதேச நிதி நிறுவனம் உலகளாவிய உணவுப் பாதுகாப்புத் தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.

- ❖ உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்கும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தனியார் துறையின் திறனை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சர்வதேச நிதி நிறுவனம் என்பது உலக வங்கியின் தனியார் துறைப் பிரிவாகும்.

## வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கை 2022




- ❖ ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பானது அதன் வருடாந்திர வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இது 2022 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் 2.6% அளவிற்கு வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கிறது.
- ❖ இது கடந்த ஆண்டு திட்டமிடப்பட்ட விகிதத்தை விட 0.9 சதவீதப் புள்ளிகள் அளவிற்குக் குறைவாகும்.
- ❖ 2023 ஆம் ஆண்டில் வளர்ச்சி 2.2% ஆக மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ பிராந்தியத்தின் மிகப்பெரியப் பொருளாதாரமான இந்தியப் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் 5.7% மற்றும் 2023 ஆம் ஆண்டில் 4.7% வளர்ச்சி அடையும் என அறிக்கை எதிர்பார்க்கிறது.
- ❖ 2022 ஆம் நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.7% வளரும்.

## பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவு

- ❖ பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவு மிக்க இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் 12 நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- ❖ ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) ஆனது இந்த ஆய்வினை மேற்கொண்டது.
- ❖ இது ஆயுத உற்பத்தியில் தன்னிறைவினை மதிப்பீடு செய்தது.
- ❖ மாபெரும் வித்தியாசத்தில் மற்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி இந்தப் பட்டியலில் சீனா முன்னணி இடத்தினைப் பெற்றது.
- ❖ சீனா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக இந்தியா இதில் நான்காவது இடத்தில் உள்ளது.
- ❖ தைவான், ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகியவை இதில் முறையே ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது இடங்களில் உள்ளன.

- பாகிஸ்தான் எட்டாவது இடத்திலும், அடுத்தடுத்த இடங்களில் இந்தோனேசியா (9வது), மலேசியா (10வது) மற்றும் தாய்லாந்து (11வது) ஆகியவையும் உள்ளன.

**ARMS EXPORTS & IMPORTS; MILITARY SPENDING IN INDO-PACIFIC REGION**

| Country | Exporter rank* | Importer rank* | Largest supplier** | Military Spending 2021*** | Spending rank**** |
|---|---|---|---|---|---|
| Australia | 3 | 2 | US (69%) | 31,754 | 5 |
| China | 1 | 3 | Russia (77%) | 293,352 | 1 |
| India | 4 | 1 | Russia (54%) | 76,598 | 2 |
| Indonesia | 5 | 8 | US (23%) | 8,259 | 9 |
| Japan | 14 | 6 | US (97%) | 54,124 | 3 |
| South Korea | 2 | 4 | US (58%) | 50,227 | 4 |
| Malaysia | NA | 16 | Spain (32%) | 3,830 | 13 |
| Pakistan | 13 | 5 | China (72%) | 11,305 | 8 |
| Singapore | 7 | 9 | France (43%) | 11,115 | 7 |
| Taiwan | 12 | 15 | US (100%) | 12,958 | 6 |
| Thailand | 15 | 10 | South Korea (25%) | 6,605 | 10 |
| Vietnam | 11 | 7 | Russia (66%) | 5,500***** | NA |

*Regional rank, 2016-20. Regional ranking is based on 44 jurisdictions in Asia and Oceania as defined in SIPRI databases, **Share of total arms imports, ***Current US$ mn, ****Regional rank, 2021, *****In 2018 NA: Not applicable.*
*Sources: SIPRI Arms Transfers Database, March 2022; SIPRI Military Expenditure Database, April 2022*

## உலகின் அதிவேக இணைய சங்கேதப் பண ஏற்பு நாடு

- பிளாக்செயின் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனமான செயினலிசிஸ், 2022 ஆம் ஆண்டிற்கான உலக இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீட்டினை வெளியிட்டது.
- மத்தியக் கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா (MENA) பிராந்தியத்தில் பெறப்பட்ட இணைய சங்கேதப் பணத்தின் அளவு 48 சதவீதம் அதிகரித்துள்ளது என்று இந்தக் குறியீடு வெளிப்படுத்தியது.
- இது உலகிலேயே மிக உயர்ந்த அளவாகும்.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு இடையில் 566 பில்லியன் மதிப்புள்ள இணைய சங்கேதப் பணமானது பெறப்பட்டது.
- மத்தியக் கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா (MENA) பிராந்திய நாடுகளில் இணைய சங்கேதப் பணத்தின் அதிக மதிப்பைப் பெற்றுள்ளதன் மூலம் துருக்கி தற்போது முதலிடத்தில் உள்ளது.
- மத்தியக் கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா (MENA) பிராந்திய நாடுகளுக்குப் பிறகு, லத்தீன் அமெரிக்க நாடுகள் இரண்டாவது பெரிய இணைய சங்கேதப் பண வளர்ச்சியைக் கண்டது
- இது 40 சதவீத உயர்வைப் பதிவு செய்துள்ளது.
- அதைத் தொடர்ந்து வடக்கு அமெரிக்கா 36 சதவீத வளர்ச்சியையும், மத்திய ஆசியா, தெற்கு ஆசியா மற்றும் ஓசியானியா 35 சதவீத வளர்ச்சியையும் பெற்றுள்ளன.
- மூன்று மத்தியக் கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா (MENA) பிராந்திய நாடுகள் - துருக்கி, எகிப்து மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகள் இந்தக் குறியீட்டில் முதல் 30 இடங்களில் இடம் பெற்றுள்ளன.




## உலகின் முதல் ஒற்றை மின்னேற்றி விதிமுறை




- ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 2024 ஆம் ஆண்டிற்குள் மின்னணு சாதனங்களுக்கான ஒற்றை மின்னேற்றிக் கலத்தினை அறிமுகப்படுத்தும் ஒரு புதிய விதிக்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- அனைத்துப் புதிய திறன்பேசிகள், வரைபட்டிகைகள் மற்றும் ஒளிப்படக் கருவிகள் ஒரே மாதிரியான மின்னேற்றியினைக் கொண்டிருக்கும் என்று அந்த விதிகள் கூறுகிறது.
- இந்தப் புதிய விதிகள் ஆனது, வாடிக்கையாளர்கள் ஒரு கையடக்கச் சாதனத்தை வாங்கும் போது USB-C வகை முனையத்தைக் கொண்ட ஒரு மின்னேற்றி மற்றும் அந்த வகை இல்லாத ஒன்று ஆகிய இரண்டு மின்னேற்றிகளில் ஒன்றைத் தேர்வு செய்ய வழி வகை செய்கிறது.
- 2026 ஆம் ஆண்டு முதல், மடிக்கணினிகளும் இந்த விதிமுறைக்குள் உள்ளடக்கிய வகையில் இந்த விதிகள் விரிவுபடுத்தப்படும்.
- இந்தப் புதிய சட்டம் மின்-கழிவைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதோடு வாடிக்கையாளர்களுக்கு மேலும் சில நிலையானத் தேர்வுகளை வழங்குவதற்கான வாய்ப்பினையும் அளிக்கிறது.

## மானேசர் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி 2022

- ❖ இந்தியா தற்போது 'மானேசர் பயங்கரவாத எதிர்ப்பு 2022' என்ற பலதரப்பு பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சியை நடத்தி வருகிறது.
- ❖ இது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் (RATS) கட்டமைப்பின் கீழ் நடத்தப்படுகிறது.
- ❖ பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பு (RATS) ஆனது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நிரந்தர உறுப்புகளில் ஒன்றாகும்.
- ❖ உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் அதன் தலைமையகம் அமைந்துள்ளது.
- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் நோக்கம் பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதத்திற்கு எதிராக ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதாகும்.
- ❖ 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியா ஏற்றுக் கொண்டது.

## ரஷ்ய இணைப்பிற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம்




- ❖ 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், ரஷ்யாவின் சட்ட விரோத இணைப்பிற்குக் கண்டனம் தெரிவிக்கும் வரைவு தீர்மானத்தின் மீதான அல்பேனியாவின் தீர்மானத்திற்கு வாக்களிக்கப்பட்டது.
- ❖ இந்தத் தீர்மானத்திற்கு இரகசிய வாக்கெடுப்பு மூலம் வாக்களிக்க வேண்டும் என்று ரஷ்யா கோரியிருந்தது.
- ❖ இந்தியா உட்பட 107 ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகள் நிராகரித்ததை அடுத்து, மாஸ்கோவின் ரகசிய வாக்கெடுப்பு கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
- ❖ இரகசிய வாக்கெடுப்பிற்கான ரஷ்யாவின் அழைப்பிற்கு ஆதரவாக 13 நாடுகள் மட்டுமே வாக்களித்த நிலையில் 39 நாடுகள் இதில் வாக்களிக்கவில்லை.
- ❖ ரஷ்யாவும் சீனாவும் வாக்களிக்காத நாடுகளில் அடங்கும்.

- இதற்கிடையில், உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பினை இந்தியா இதுவரை கண்டிக்கவில்லை என்பதோடு அரசுமுறை மற்றும் பேச்சுவார்த்தை மூலம் இந்த நெருக்கடி தீர்க்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

## சீனப் பொதுவுடமைக் கட்சியின் 20வது தேசிய மாநாடு




- சீனப் பொதுவுடமைக் கட்சியின் 20வது தேசிய மாநாடானது, அதன் அரசியல் அமைப்பைத் திருத்தியமைத்து, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான நாட்டின் கொள்கை வழிமுறைகளை அங்கீகரிக்கிறது.
- 1921 ஆம் ஆண்டில் கட்சி நிறுவப்பட்டதில் இருந்து, இந்த ஆண்டு நடைபெறும் இந்த மாநாடு 20வது மாநாடாகும்.
- சீன அதிபர் ஜி ஜின்பிங், அந்தக் கட்சியின் தலைவராக மூன்றாவது முறையாக பதவி ஏற்று தனது அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இதில், அமைப்பின் உயர்மட்ட முடிவெடுக்கும் அமைப்புகளான, அரசியல் விவகாரங்களுக்கான குழு அல்லது பொலிட்பீரோ மற்றும் உயரடுக்கு பொலிட்பீரோ நிலைக் குழு (PSC) ஆகியவற்றுக்கான நியமனங்களும் அடங்கும்.

## "ஸ்டெட்ஃபாஸ்ட் நூன்" பயிற்சி

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது (நேட்டோ), "ஸ்டெட்ஃபாஸ்ட் நூன்" என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட அதன் வருடாந்திர அணுசக்தி பயிற்சியைத் தொடங்கி உள்ளது.
- ஸ்டெட்ஃபாஸ்ட் நூன் என்பது இரட்டைப் போர் திறன் கொண்ட போர் விமானங்கள் மற்றும் கண்காணிப்பு மற்றும் எரிபொருள் நிரப்புதல் ஆகியவற்றிற்காகப் பயன்படுத்தப் படும் வழக்கமான ஜெட் விமானங்கள் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிப்பதை உள்ளடக்கியது.
- இதில் நேரடி ஆயுதங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

- இந்தப் பயிற்சியானது நேட்டோவின் அணுசக்தித் தடுப்பு அமைப்பானது, பாதுகாப்பாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த உதவுகிறது.




## ஐக்கிய நாடுகள் சபையின் உலகப் புவிசார் சர்வதேச மாநாடு

- ஐக்கிய நாடுகள் சபையின் 2வது உலகப் புவிசார் சர்வதேச மாநாடானது ஹைதராபாத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST) ஏற்பாடு செய்யப்பட்டு, உலகளாவியப் புவிசார் தகவல் மேலாண்மைக்கான ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவினால் (UN-GGIM) நடத்தப்படுகிறது.
- இது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "உலக நாடுகளின் புவிசார் இயக்கம்: யாரும் விடுபடக் கூடாது" என்பதாகும்.
- இதன் முதல் மாநாடானது, 2018 ஆம் ஆண்டில் சீனாவின் டெக்கிங்கின் ஜெஜியாங் நகரில் நடைபெற்றது.

## IBSAMAR VII பயிற்சி

- 7வது இந்தியா-பிரேசில்-தென்னாப்பிரிக்கா கடல்சார் (IBSAMAR) பயிற்சியில் பங்கேற்பதற்காக ஐஎன்எஸ் தர்காஷ் என்ற கப்பல் தென்னாப்பிரிக்காவின் எலிசபெத் துறைமுகத்தினைச் சென்றடைந்தது.
- IBSAMAR என்பது இந்தியா - பிரேசில் - தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் முத்தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பின் முக்கிய ஒரு அங்கமாகும்.
- இது இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா நாட்டுக் கடற்படைகளுக்கு இடையிலான ஒரு கூட்டுப் பன்னாட்டுக் கடல்சார் பயிற்சியாகும்.
- முந்தைய IBSAMAR பயிற்சியானது (IBSAMAR VI) தென்னாப்பிரிக்காவின் சைமன்ஸ் டவுனில் 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## பல் பரிமாண வறுமைக் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறியீட்டினை (MPI) ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு அமைப்பு (OPHI) ஆகியவற்றினால் வெளியிடப் பட்டது.

***முக்கிய சிறப்பம்சங்கள்***

- உலகின் 1.2 பில்லியன் மக்கள் பல பரிமாணங்களின் அடிப்படையில் ஏழ்மை நிலையில் உள்ளனர்.
- அவர்களில் கிட்டத்தட்டப் பாதியளவிற்கும் மேலானவர்கள் கடுமையான வறுமையில் வாழ்கின்றனர்.
- ஏழ்மை நிலையில் உள்ள பாதியளவிற்கும் மேலானவர்கள் (593 மில்லியன்) 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் ஆவர்.
- ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதி (579 மில்லியன்), தெற்காசியா (385 மில்லியன்) போன்றப் பகுதிகளில் உள்ள ஏழைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
- இரண்டு பிராந்தியங்களிலும் சேர்ந்து 83% ஏழை மக்கள் வசிக்கின்றனர்.
- கடந்த 15 ஆண்டுகளில் 415 மில்லியன் மக்களை வறுமை நிலையில் இருந்து இந்தியா மீட்டெடுத்துள்ளது.
- இந்தியாவில் இன்னும் 22.8 கோடி பேர் பல் பரிமாண ஏழ்மை நிலையில் உள்ள நிலையில், அவர்களில் 9.7 கோடி பேர் குழந்தைகள் ஆவர்.
- இந்தியாவைத் தொடர்ந்து 9.6 கோடி என்ற அளவுடன் நைஜீரியா இடம் பெற்றுள்ளது.
- இந்த இந்திய மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர், குறைந்தபட்சம் ஒருவராவது ஊட்டச் சத்துக் குறைபாடு கொண்டவர் உள்ள குடும்பத்தில் வாழ்கின்றனர்.
- நாட்டில் 2005/06 ஆம் ஆண்டில் 55.1% ஆக இருந்த வறுமையின் நிலை 2019/21 ஆம் ஆண்டில் 16.4% ஆகக் குறைந்துள்ளது.
- 2005-06 மற்றும் 2019-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 15 ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவில் 41.5 கோடி மக்கள் வறுமையிலிருந்து வெளியேறியுள்ளனர்.
- தற்போது தெற்காசியாவில் துணை சஹாரா ஆப்பிரிக்காவை விட குறைவான அளவில் ஏழைகளின் எண்ணிக்கை பதிவாகவில்லை.
- 2005/2006 முதல் 2015/2016 வரையிலான காலக்கட்டத்தில் பதிவான 8.1% உடன் ஒப்பிடும் போது, 2015/2016 ஆம் ஆண்டு முதல் 2019/21 ஆம் ஆண்டு வரையிலான ஒப்பீட்டு அளவிலான குறைப்பு ஆண்டிற்கு 11.9% அளவிற்கு வேகமான ஒன்றாக பதிவானது.
- 2015-16 ஆம் ஆண்டில் ஏழ்மையான மாநிலமாக இருந்த பீகார், பல் பரிமாண வறுமைக் குறியீட்டு மதிப்பில் முழுமையான அடிப்படையில் மிக வேகமான குறைவு ஏற்பட்டது.
- 2015/2016 ஆம் ஆண்டில் பதிவான ஏழ்மையான மாநிலங்களாகப் பதிவான 10 மாநிலங்களுள், 2019-21 ஆம் ஆண்டில் ஒரே ஒரு மாநிலம் (மேற்கு வங்காளம்) இந்தப் பட்டியலில் இருந்து வெளியேறியுள்ளது.
- இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில், கோவா மாநிலத்தில் அதிக சரிவு பதிவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஜம்மு மற்றும் காஷ்மீர், ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.
- கிராமப்புறங்களில் 2015-2016 ஆம் ஆண்டில் 36.6% ஆக இருந்த வறுமை நிலை 2019-2021 ஆம் ஆண்டில் 21.2% ஆகவும், அதுவே நகர்ப்புறங்களில் 9.0 சதவீதத்திலிருந்து 5.5% ஆகவும் குறைந்துள்ளது.




## நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு 2022

- 11வது நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடானது (SMDS-XI) லடாக்கின் லே நகரில் நடைபெற்று வருகிறது.
- இது இந்திய இமயமலைப் பகுதி (IHR) முழுவதும் செயலாற்றி வரும் ஒரு குடிமை சார்ந்த சமூக அமைப்பின் தலைமையிலான மன்றமான ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டு முன்னெடுப்பின் (IMI) ஒரு முதன்மையான வருடாந்திர நிகழ்வாகும்.
- இந்திய இமயமலைப் பகுதியானது 10 மலைசார் மாநிலங்கள், இரண்டு ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் நான்கு மலைசார் மாவட்டங்களை உள்ளடக்கியது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, 'சுற்றுலாப் பயணத்தை நிலையான மலை மேம்பாட்டிற்குப் பயன்படுத்துதல்' என்பதாகும்.

## B20 இந்தோனேசியா உலகளாவியப் பேச்சுவார்த்தை பற்றிய மாநாடு

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது, இந்திய தொழில் துறை கூட்டமைப்புடன் இணைந்து B20 இந்தோனேசியா உலகளாவியப் பேச்சு வார்த்தை மாநாட்டினை நடத்தியது.
- 2022 ஆம் ஆண்டு B20 இந்தோனேசியா உலகளாவியப் பேச்சுவார்த்தை மாநாடானது இந்திய அரசினால் நடத்தப்பட்டது.
- இது B20 இந்தோனேசிய அமைப்பின் கொள்கைப் பரிந்துரைகளுடன் இந்தியத் தொழில் துறையின் கருத்துகளைச் சீரமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வணிகம் 20 (B20) என்ற அமைப்பானது 2010 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது உலகளாவிய வணிகச் சமூகத்துடனான அதிகாரப்பூர்வ G20 உரையாடல் மன்றம் ஆகும்.

## மாறுபட்ட மண்டலம்

- அறிவியலாளர்கள் சமீபத்தில், மாலத்தீவில் ஒரு 'மாறுபட்ட மண்டலத்தினை' கண்டுபிடித்தனர்.

- இந்த மாறுபட்ட மண்டலம் என்பது கடலின் மேற்பரப்பிற்கு அடியில் 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வகையில் இது ஒரு புதிய சுற்றுச்சூழல் அமைப்பாகும்.
- இது 'பெருங்கடலின் சோலை' என்று குறிப்பிடப்படுகிறது.
- ஒமேகா சீமாஸ்டர் II என பெயரிடப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலில் பொருத்தப்பட்ட ஒளிப்படக் கருவியைப் பயன்படுத்தி அறிவியலாளர்கள் இந்த சுற்றுச்சூழல் அமைப்பைக் கண்டறிந்தனர்.
- மைக்ரோ-நெக்டன் போன்றவற்றை உண்ணும் சுறாக்கள் மற்றும் பிற பெரிய கடல் மீன்கள் போன்ற பல பெரிய அளவிலான வேட்டையாடி உண்ணும் விலங்குகள் அங்கு இருப்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியது.
- மாலத்தீவைச் சுற்றியுள்ள ஆழ்கடலில் இவ்வளவு பன்முகத்தன்மை கொண்ட சுறா இனங்கள் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் நிகழ்வு என்பது குறிப்பிடத் தக்கதாகும்.




## ஐக்கியப் பேரரசின் பிரதமர் ராஜினாமா

- ஐக்கியப் பேரரசின் பிரதமர் லிஸ் ட்ரஸ், வரிக் குறைப்பு நிதிநிலை அறிக்கை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தனது பதவியினை ராஜினாமா செய்தார்.
- ட்ரஸ் வெறும் 44 நாட்கள் மட்டுமே அப்பதவியில் இருந்த நிலையில், பிரிட்டிஷ் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் மட்டுமே பணியாற்றியப் பிரதம மந்திரி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- முன்னதாக, போரிஸ் ஜான்சன் ஜூலை மாதத் தொடக்கத்தில் அந்தப் பதவியினை ராஜினாமா செய்தார்.
- தற்போது நிலவி வரும் பொருளாதாரத்தின் நிச்சயமற்றத் தன்மையானது, உலகின் ஆறாவது பெரியப் பொருளாதாரத்தின் சந்தைகளை மேலும் அச்சத்தில் ஆழ்த்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



## உலக சுகாதார உச்சி மாநாடு 2022

- ❖ உலக சுகாதார உச்சி மாநாடானது, ஒரு சர்வதேச சுகாதார மாநாடாக ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்று வருகிறது.
- ❖ உலக சுகாதார மாநாட்டினை உலக சுகாதார நிறுவனம் இணைந்து நடத்துவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இதன் தொடக்க விழாவின் முக்கியக் கருத்துருவான உலக சுகாதாரத்தினை ஒரு புதிய நிலைக்கு எடுத்துச் செல்வது என்பது அறிவியல் துறைகளுக்கும் அறிவியல், அரசியல் மற்றும் சமூகத்திற்கும் இடையே பரிமாற்றத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.




## ஒரு சுகாதாரக் கூட்டு செயல் திட்டம்

- ❖ நான்கு அங்க அமைப்பானது புதிய ஒரு சுகாதாரக் கூட்டு செயல் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
  - ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO)
  - ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP)
  - உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும்
  - விலங்கு ஆரோக்கியத்திற்கான உலக அமைப்பு (WOAH)
- ❖ இந்தச் செயல் திட்டமானது, ஒரு கட்டமைப்பை உருவாக்கி, சுகாதார பேரிடர்களுக்கான மேம்படுத்தப்பட்ட கூட்டுத் தடுப்பு, கணிப்பு, கண்டறிதல் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான அமைப்புகளையும் திறனையும் ஒருங்கிணைக்க உள்ளது.

- ❖ இது மக்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு நிலையான மேம்பாட்டினையும் ஆதரிக்கும்.




## நிஹோன்சுவிற்குப் புவிசார் குறியீடு

- ❖ சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டுப் பதிவகத்திடம் ஜப்பானைச் சேர்ந்த ஒரு தயாரிப்பு நிறுவனம் குறியீடு கோரி விண்ணப்பிப்பது இதுவே முதல் முறையாகும்.
- ❖ நிஹோன்ஷு ஜப்பானிய சேக் என்றும் அழைக்கப்படும் ஒரு மதுபானமாகும்.
- ❖ இது நொதித்த அரிசியிலிருந்துத் தயாரிக்கப்படுகின்ற ஒரு சிறப்பு மற்றும் மதிப்பு மிக்க பானமாகக் கருதப் படுகிறது.
- ❖ மக்கள் திருவிழாக்கள், திருமணங்கள் அல்லது இறுதிச் சடங்குகள் போன்ற சிறப்பு நிகழ்வுகளில் பாரம்பரியமாக நிஹோன்ஷு பானத்தினை அருந்துவர் என்றாலும் இது தினசரி அடிப்படையிலும் உட்கொள்ளப்படுகிறது.
- ❖ எனவே, இது ஜப்பானில் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்தப் பகுதியாகும்.



## சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைமை

- சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைமை மற்றும் இணைத் தலைமையாக இந்தியா மற்றும் பிரான்ஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைவராக மத்திய மின்சாரம் & புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R.K. சிங் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இணைத் தலைவராக பிரான்ஸ் அரசின் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சரான கிறிசோலா சகாரோபோலூ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ஐக்கியப் பேரரசின் புதிய பிரதமர்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஐக்கியப் பேரரசின் முதல் பிரதமராக பொறுப்பெற்று ரிஷி சுனக் வரலாறு படைத்துள்ளார்.
- 44 நாட்கள் மட்டுமே அந்தப் பணியில் இருந்த ட்ரஸ் ராஜினாமா செய்ததையடுத்து இவர் பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் ஐக்கியப் பேரரசின் 57வது பிரதமர் ஆவார்.
- இவரது பெற்றோர் இருவரும் இந்திய வம்சாவளியினர் ஆவர்.
- சுனக் ஐக்கியப் பேரரசின் முதல் வெள்ளையர் அல்லாதவர் மற்றும் முதல் இந்துப் பிரதமராகவும் இருப்பார்.




## ஜி ஜின்பிங்கின் மூன்றாவது பதவிக்காலம்

- சீன அதிபர் ஜி ஜின்பிங், பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனர் மாவோ சேதுங்கிற்குப் பிறகு, சீனாவில் தற்போது ஆட்சி செய்து வரும் பொதுவுடமைக் கட்சியின் முதல் தலைவர் என்ற வரலாறு படைத்துள்ளார்.
- மூன்றாவது முறையாக ஆட்சி செய்ய "தேர்ந்தெடுக்கப்பட்ட" ஜி ஜின்பிங், 30 ஆண்டுகளுக்கும் மேலான பதவி காலத்திற்குப் பிறகு ஓய்வு பெற்ற, இவரது முன்னோடியான மாவோ அவர்களையடுத்து, இவர் தனது 10 ஆண்டு பதவிக் காலத்தினை நிறைவு செய்ய உள்ளார்.
- ஜி முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு இந்த ஆண்டு இவர் தனது 10 ஆண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்கிறார்.

## உலகளாவிய இளையோர் பருவநிலை உச்சிமாநாடு

- மூன்று நாட்கள் அளவிலான உலகளாவிய இளையோர் பருவநிலை உச்சி மாநாடானது, வங்க தேசத்தின் குல்னாவில் உள்ள அவா மையத்தில் நடைபெற்றது.
- இது வங்காளதேசத்தில் உள்ள பருவநிலையால் அதிகம் பாதிக்கப்படக் கூடியப் பகுதிகளில் ஒன்றாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பருவநிலை அபாயக் குறியீட்டில் (CRI), 2000 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பருவநிலை மாற்றத்தில் ஒட்டு மொத்தத் தாக்கத்தை உருவாக்கிய பத்து நாடுகளில் வங்காளதேசம் ஏழாவது இடத்தில் உள்ளது.
- ஆனால் இது உலகளாவிய உமிழ்வுகளில் வெறும் 0.56 சதவீதம் மட்டுமே ஆகும்.
- 2009 ஆம் ஆண்டில் பருவநிலை மாற்ற உத்தி மற்றும் செயல் திட்டம் என்ற ஒருங்கிணைந்தச் செயல் திட்டத்தை உருவாக்கிய முதல் வளர்ந்து வரும் நாடு வங்காள தேசம் ஆகும்.

## ஜெருசலேமிற்கு ஆஸ்திரேலியா அங்கீகாரம் மாற்றம்

- இஸ்ரேலின் தலைநகராக மேற்கு ஜெருசலேம் என்ற நகரினை அங்கீகரித்த முந்தைய அரசாங்கத்தின் முடிவினை ஆஸ்திரேலியாவின் தற்போதைய அரசு மாற்றியுள்ளது.
- மத்திய-இடதுசாரித் தொழிலாளர் கட்சி அரசின் அமைச்சரவையானது, மீண்டும் டெல் அவிவைத் தலைநகராக மாற்றுவதை அங்கீகரிப்பதற்கு ஒப்புக் கொண்டது.
- இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஜெருசலேமின் அந்தஸ்து மீதான வழங்கீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் அக்கட்சி மீண்டும் உறுதிப்படுத்தியது.
- இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆறு நாள் போரைத் தொடர்ந்து கிழக்கு ஜெருசலேமை இணைத்து, முழு நகரத்தையும் அதன் "முழு அளவிலான மற்றும் பிரிக்க முடியாத தலைநகரமாக" அறிவித்தது.
- பாலஸ்தீனியர்கள் கிழக்குப் பகுதியை தங்களது எதிர்கால அரசின் தலைநகராகக் கூறுகின்றனர்.




## சர்வதேச காவல்துறை மெட்டாவர்ஸ்

- புது டெல்லியில் நடைபெற்ற 90வது பொதுச் சபையில் இண்டர்போல் மெட்டாவேர்ஸ் தொடங்கப் பட்டது.

- சட்ட அமலாக்க அமைப்பிற்காக வடிவமைக்கப்பட்ட உலகின் முதல் மெட்டாவர்ஸ் இது ஆகும்.
- இதில் பதிவு செய்யப்பட்ட பயனர்கள், பிரான்சின் லியோனில் உள்ள சர்வதேசக் காவல் துறையின் தலைமைச் செயலகத்தின் தலைமையகத்திற்கு மெய்நிகர் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அவர்களின் அவதார வடிவங்கள் மூலம் மற்ற அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள இது உதவுகிறது.
- இது தடயவியல் விசாரணை மற்றும் பிற காவல் திறன்கள் பற்றியப் பயிற்சி வகுப்புகளையும் வழங்குகிறது.
- சர்வதேசக் காவல் துறையின் 195 உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த சட்ட அமலாக்க அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக வேண்டி இது தற்போது முழுமையாக செயல்படும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.




## சூரியசக்திக்கான முதலீட்டு வசதிகள்

- சூரிய சக்தி மின்நிலைய திட்டங்களில் முதலீடுகளை அதிகரிக்க, சர்வதேச சூரியசக்தி கூட்டணியானது (ISA), 'சூரியசக்திக்கான முதலீட்டு வசதிகளுக்கு' ஒப்புதல் அளித்தது.
- இது இரண்டு நிதிக் கூறுகள் மூலம் சூரியசக்தித் திட்டங்களில் முதலீடுகளை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் வகையிலான பண வழங்கீட்டு உத்தரவாத நெறிமுறையாகும்.
    - சூரியசக்தி பண வழங்கீட்டு உத்தரவாத நிதி மற்றும்
    - சூரியசக்தி காப்பீட்டு நிதி.

## இஸ்ரேல் மற்றும் லெபனான் ஒப்பந்தம்

- இஸ்ரேலும் லெபனானும் மத்தியத் தரைக் கடல் பகுதியில் தங்கள் கடல் எல்லைகளை வரையறுப்பதற்கான ஒரு உடன்படிக்கையை இறுதி செய்துள்ளன.
- இது நாடுகளுக்கிடையேயான நில எல்லை மீதான ஐக்கிய நாடுகள் சபையின் திட்டத்தின் மூலம் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது, மத்தியத் தரைக் கடலில் உள்ள முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தித் தளங்களை உள்ளடக்கிய பல ஆண்டுகளாக கடல் எல்லை தகராறைத் தீர்க்கிறது.




## உலக சுகாதார அமைப்பின் பூஞ்சை முன்னுரிமை நோய்க்கிருமிகளின் பட்டியல்




- உலக சுகாதார அமைப்பு (WHO) பூஞ்சை தொற்றுகள் குறித்த "முன்னுரிமை நோய்க் கிருமிகள்" எனப்படும் முதல் பட்டியலை வெளியிட்டது.
- மனித ஆரோக்கியத்திற்கு ஒரு மிகப்பெரிய அச்சுறுத்தலை விளைவிக்கின்ற பூஞ்சை முன்னுரிமை நோய்க்கிருமிகளின் பட்டியலில் (FPPL) 19 பூஞ்சைகள் அடங்கும்.
- உலக சுகாதார அமைப்பின் பூஞ்சை முன்னுரிமை நோய்க்கிருமிகளின் பட்டியலானது மூன்று பிரிவுகளாக ‘முக்கியமானது, உயர்தரம் மற்றும் நடுத்தர முன்னுரிமை கொண்டவை’ ஆகிய வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- இந்த பூஞ்சை நோய்க்கிருமிகள் பொது சுகாதாரம் மற்றும்/அல்லது வளர்ந்து வரும் பூஞ்சை எதிர்ப்புத் திறன் சார்ந்த ஆபத்தின் அடிப்படையில் ஒவ்வொரு முன்னுரிமை பிரிவிலும் தரவரிசைப் படுத்தப் படுகின்றன.
- முக்கிய முன்னுரிமை நோய்க் கிருமிகள் குழுவில், அதிக மருந்து-எதிர்ப்புத் திறன் கொண்ட பூஞ்சையான கேண்டிடா ஆரிஸ், கிரிப்டோகாக்கஸ் நியோஃபார்மன்ஸ், ஆஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ், மற்றும் கேண்டிடா ஆல்பிகன்ஸ் ஆகியவை அடங்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆசிய பாமாயில் கூட்டணி

- இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய பாமாயில் கூட்டணியை (APOA) உருவாக்கியுள்ளன.
- இந்தக் கூட்டணியின் முதல் பொதுக்குழுக் கூட்டமானது, இந்தியாவின் ஆக்ராவில் நடைபெற்ற உலக எண்ணெய் நிறுவன உச்சி மாநாட்டினை ஒட்டி நடத்தப் பட்டது.
- அடுத்தக் கூட்டமானது அடுத்த ஆண்டான 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தோனேசியாவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- உலக எண்ணெய் நிறுவன உச்சி மாநாடு என்பது உலகின் முன்னணி சமையல் எண்ணெய்கள் மற்றும் வேளாண் வர்த்தக மாநாடு, கண்காட்சிகள் மற்றும் விருதுகளில் ஒன்றாகும்.
- 2022 ஆம் ஆண்டானது உலக எண்ணெய் நிறுவன உச்சி மாநாட்டு அமைப்பின் 25வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தையும் குறிக்கிறது.
- இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் சேர்ந்து உலக பாமாயில் உற்பத்தியில் கிட்டத்தட்ட 90% பங்கு வகிக்கின்றன.
- இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்த எண்ணெய் பொருட்களின் சிறந்த நுகர்வு நாடுகளாக திகழ்கின்றன.
- உலக இறக்குமதியில் 15% பங்கு வகிப்பதோடு, ஆசியாவிலேயே அதிக பாமாயிலை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது.
- இந்தியாவைத் தொடர்ந்து சீனா (9%), பாகிஸ்தான் (4%) மற்றும் வங்காளதேசம் (2%) ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

## வங்கிச் செயல்பாடுகளை 100 சதவீதம் எண்ணிம மயமாக்குதல்

- லே மாவட்ட நிர்வாகமானது வங்கிச் செயல்பாடுகளில் 100 சதவீத எண்ணிம மயமாக்கல் என்ற இலக்கினை எட்டியுள்ளது.
- எண்ணிம அடிப்படையிலான வங்கிச் சேவை என்பது ஒரு வங்கி தனது நிதி, வங்கி மற்றும் பிற பரிவர்த்தனைகளுக்காக மின்னணு சாதனங்கள் மூலம் இணைய வழியில் வழங்கும் மின்னணு வங்கிச் சேவையைக் குறிக்கிறது.
- கேரளாவின் திருச்சூர் மாவட்டமானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் முதலாவது முழுமையான எண்ணிம வங்கிச் சேவை கொண்ட மாவட்டமாக மாறியது.
- ஒரு குடும்பத்தில் குறைந்தபட்சம் ஒருவராவது வங்கிக் கணக்கை வைத்திருக்க வேண்டும் என்ற நிதி உள்ளடக்க இலக்கை எட்டிய இந்தியாவின் முதல் மாநிலமாகவும் கேரளா திகழ்கிறது.

## நான்காவது காலாண்டில் வேலைவாய்ப்பு விகிதம்

- காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வின் (QES) நான்காவது சுற்று (ஜனவரி - மார்ச் 2022) அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது நிறுவனம் அடிப்படையிலான அகில இந்தியக் காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வின் (AQEES) ஒரு பகுதியாகும்.

- 2021 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட காலாண்டு வேலை வாய்ப்பு ஆய்வின் மூன்றாவது சுற்றுடன் ஒப்பிடும் போது சுமார் நான்கு லட்சம் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளதாகக் கூறுகிறது.
- உற்பத்தித் துறையானது 38.5% தொழிலாளர்களைப் பணியமர்த்தி, நாட்டின் மிகப் பெரிய நிறுவன முதலாளியாகத் தொடர்கிறது.
- இதைத் தொடர்ந்து கல்வித் துறை (21.7%), IT/BPO துறை (12%) மற்றும் சுகாதாரத் துறை (10.6%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஏறக்குறைய 80% நிறுவனங்களில் 10 முதல் 99 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.
- சுமார் 12% நிறுவனங்களில் 10க்கும் குறைவான தொழிலாளர்களேப் பணியில் உள்ளனர்.
- கணக்கெடுக்கப்பட்ட 1.4% நிறுவனங்களில் மட்டுமே குறைந்தது 500 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர்.
- மூன்றாம் காலாண்டில் 31.6% ஆக இருந்த பெண் தொழிலாளர்களின் பங்கேற்பானது நான்காவது காலாண்டு அறிக்கையில் 31.8% ஆக அதிகரித்துள்ளது.
- இருப்பினும், சுகாதாரத் துறையில் உள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கையில் சுமார் 52% பேர் பெண் தொழிலாளர்களாக உள்ளனர்.
- கல்வி, நிதிச் சேவைகள் மற்றும் IT/ BPO ஆகிய துறைகள் தொடர்பான வேலைவாய்ப்பு சதவீதங்கள் முறையே 44%, 41% மற்றும் 36% ஆக இருந்தது.
- 86.4% தொழிலாளர்கள் வழக்கமானப் பணியாளர்கள் என்றும், 8.7% பேர் ஒப்பந்த ஊழியர்கள் என்றும், அதைத் தொடர்ந்து சாதாரண ஊழியர்கள் (2.3%) மற்றும் சுய தொழில் செய்பவர்கள் (2%) என்றும் இந்தக் கணக்கெடுப்பு கூறியது.




## 2015-20 ஆம் ஆண்டு அந்நிய வர்த்தகக் கொள்கையின் விரிவாக்கம்

- நாணய மதிப்பு ஏற்ற இறக்கம் மற்றும் உலகளாவில் நிலவும் நிச்சயமற்றத் தன்மை காரணமாக தற்போதைய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- தற்போது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற முக்கியப் பொருளாதாரங்களில் மந்த நிலை ஏற்படும் அச்சமானது நிலவி வருகிறது.
- இதன் விளைவாக இந்தியாவில் முதலீடுகள் வேகமாக திரும்பப் பெறப்பட்டு அதனால் வெளிநாட்டு நிதிகள் வெளியேறுகின்றன.

- உக்ரைன் போரினால் ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் நெருக்கடி, பணவீக்கம் மற்றும் பணவியல் கொள்கை நெருக்கடி ஆகியவை அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பைப் பலவீனப்படுத்துகின்றன.
- தற்போது அமெரிக்க டாலர் மதிப்பு 22 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகவும், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 81.6 என்ற வரலாறு காணாத அளவிலும் குறைவாக உள்ளது.
- எனவே, நீண்ட கால வெளியுறவுக் கொள்கையினை (2022-27) ஏற்றுக் கொள்வதற்கு தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலை சாதகமாக இல்லை.
- 2015-20 ஆம் காலகட்ட வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது, சரக்கு மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குவதோடு இந்தியாவில் எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தவும் செய்கிறது.




## ரூபாய் வர்த்தகத்திற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புதல்

- இந்திய ரூபாயில் வர்த்தகம் மேற்கொள்வதற்காக ரஷ்யாவின் காஸ்ப்ரோம் வங்கியில் சிறப்பு வோஸ்ட்ரோ கணக்கைத் தொடங்குவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலை UCO வங்கி பெற்றுள்ளது.
- கொல்கத்தாவில் அமைந்துள்ள UCO வங்கியானது, இந்திய வங்கிச் சேவை கட்டுப்பாட்டாளரின் ஒப்புதலைப் பெற்ற முதல் வங்கியாகும்.
- காஸ்ப்ரோம் வங்கியானது, ஒரு ரஷ்ய கடன் வழங்கும் நிறுவனமாவதோடு, அது ரஷ்யாவின் முன்னணியில் உள்ள முதல் மூன்று வங்கிகளில் ஒன்றாகும்.
- உலகின் மிகப்பெரிய எரிவாயு உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமான காஸ்ப்ரோம் நிறுவனத்தினால் எரிவாயு தொழில் நிறுவனங்களுக்கு வங்கிச் சேவைகளை வழங்கச் செய்வதற்காக இது அமைக்கப்பட்டது.

## ஏஜியஸ் கூட்டாண்மை ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

- பெல்ஜியம் நாட்டில் அமைந்துள்ள ஏஜியஸ் சர்வதேசக் காப்பீட்டு நிறுவனம், IDBI வங்கியின் ஆயுள் காப்பீட்டு நிறுவனக் கூட்டுத் துணீகர முதலீட்டில் 25% முதலீட்டை வெற்றிகரமாகப் பெற்றுள்ளதாக ஏஜியஸ் கூட்டாண்மை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் அறிவித்தது.

- ஒரு வெளிநாட்டுப் பங்குதார நிறுவனம் 74% பங்குகளைக் கொண்ட இந்தியாவின் முதல் ஆயுள் காப்பீட்டு நிறுவனமாக இது மாறியுள்ளது.

## ரெப்போ விகிதம் அதிகரிப்பு - இந்திய ரிசர்வ் வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கியானது, அளவை மதிப்பீட்டுக் கடன் விகிதத்தை 50 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தி 5.90 சதவீதமாக உயர்த்தியது
- சமீபத்திய ரெப்போ விகித உயர்வானது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்கான ரெப்போ விகிதம் அல்லது குறுகிய காலக் கடன் விகிதம் ஆனது தற்போது 6 சதவீதத்தினை நெருங்கியுள்ளது.

## சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்கள்

- முதியோர்களுக்கான சேமிப்புத் திட்டத்திற்கான வட்டி விகிதத்தை 20 அடிப்படைப் புள்ளிகள் அல்லது 7.4 சதவீதத்திலிருந்து 7.6% ஆக அரசாங்கம் உயர்த்தியது.
- மாதாந்திர வருமானக் கணக்குத் திட்டத்திற்கு 10 அடிப்படைப் புள்ளிகள் அல்லது 6.6 சதவீதத்திலிருந்து 6.7 % ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- சேமிப்பு வைப்புத் தொகைக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 4 சதவீதமாக தொடர்ந்து வழங்கப் படும்.
- மேலும், பின்வரும் மூன்று திட்டங்களுக்கும் விகிதங்கள் மாற்றப்படாமல் உள்ளன.
- பொது வருங்கால வைப்பு நிதிக்கு 7.1 சதவீதம் வழங்கப்படுகிறது.
- தேசிய சேமிப்புச் சான்றிதழ் திட்டத்திற்கு 6.8 சதவீதம் வழங்கப்படுகிறது.
- பெண் குழந்தைக்கான சேமிப்புத் திட்டமான சுகன்யா சம்ரிதி யோஜனாவிற்கான வட்டி விகிதங்கள் 7.6 சதவீதம் ஆகும்.

| SL No. | Instrument / Scheme | Rate of Interest from 01.07.2022 to 30.09.2022 | Rate of Interest from 01.10.2022 to 31.12.2022 |
|---|---|---|---|
| 1. | Post Office Savings Account | 4.0 | 4.0 |
| 2. | 1Year Time Deposit | 5.5 | 5.5 |
| 3. | 2 Year Time Deposit | 5.5 | 5.7 |
| 4. | 3 Year Time Deposit | 5.5 | 5.8 |
| 5. | 5 Year Time Deposit | 6.7 | 6.7 |
| 6. | 5 Year Recurring Deposit | 5.8 | 5.8 |
| 7. | Senior Citizen Savings Scheme | 7.4 | 7.6 |
| 8. | Monthly Income Account Scheme | 6.6 | 6.7 |
| 9. | Sukanya Samriddhi Account Scheme | 7.6 | 7.6 |
| 10. | Public Provident Fund Scheme | 7.1 | 7.1 |
| 11. | National Savings Certificate | 6.8 | 6.8 |
| 12. | Kisan Vikas Patra | 6.9 (will mature in 124 months) | 7.0 (will mature in 123 months) |

## பாரத் ஸ்டேட் வங்கியின் கிராம சேவைத் திட்டம்

- பாரத ஸ்டேட் வங்கியானது, SBI அறக்கட்டளையின் கிராம சேவைத் திட்டத்தை இந்தியாவின் ஆறு மாநிலங்களில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது 'பாரத் ஸ்டேட் வங்கியின் கிராமச் சேவை' திட்டத்தின் 4வது கட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உள்ள 30 தொலைதூர கிராமங்களை கொண்டு வர உள்ளது.

- ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள உயர் இலட்சியமிக்க மாவட்டங்களில் உள்ள தொலைதூர கிராமங்களை வங்கி தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர உள்ளது.




## உலகின் முன்னணி சர்க்கரை உற்பத்தியாளர்

- உலகின் முன்னணி உற்பத்தியாளர், பயனர் மற்றும் இரண்டாவது பெரிய சர்க்கரை ஏற்றுமதியாளர் நாடாக தற்போது இந்தியா மாறியுள்ளது.
- 5,000 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான கரும்பு இந்தியாவில் உற்பத்தி செய்யப் பட்டது.
- சுமார் 3,574 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு சர்க்கரை ஆலைகளில் செயல்முறைக்கு உள்ளாக்கப் பட்டு சுமார் 394 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.
- 35 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை எத்தனால் உற்பத்திக்கு வழங்கப்பட்டது.
- சர்க்கரை ஆலைகள் மூலம் 359 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப் பட்டது.
- இந்தியாவும் எந்த நிதி உதவியும் இல்லாமல் அதன் அதிகபட்ச ஏற்றுமதியான சுமார் 109.8 லட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியினைப் பதிவு செய்துள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு உயிரி எரிபொருளாக எத்தனாலின் வருகை சர்க்கரை ஆலைகளின் சிறந்த நிதி நிலைகளுக்கு வழி வகுத்தது.



## மொத்த நேரடி வரி வசூல்

- பெருநிறுவன மற்றும் தனிநபர் வருமான வரி உள்ளிட்ட மொத்த நேரடி வரி வசூலானது நடப்பு நிதியாண்டில் இதுவரை 24 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில், தனிநபர் வருமான வரியில் பதிவான (பத்திரப் பரிவர்த்தனை வரி உட்பட) 32.3 சதவீத வளர்ச்சியும், பெருநிறுவன வரி வருவாயில் பதிவான 16.73 சதவீதம் அதிகரிப்பும் இதில் அடங்கும்.
- இந்த நிதியாண்டில் நேரடி வரி வசூல் ரூ.14.20 லட்சம் கோடியாக இருக்கும் என்று நிதி நிலை அறிக்கையில் மதிப்பிடப் பட்டிருந்தது.

## 75 புதிய எண்ணிம வங்கி அலகுகள்

- இந்தியப் பிரதமர் அவர்கள் 75 மாவட்டங்களில் 75 எண்ணிம வங்கி அலகுகளைத் தொடங்கி (DBU) வைத்துள்ளார்.
- எண்ணிம வங்கி அலகு என்பது ஒரு சிறப்பு நிலையான வணிக அலகு அல்லது மையம் ஆகும்.
- இது பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளால் அமைக்கப்பட்டுள்ளது.
- இது எண்ணிம வங்கி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும், ஏற்கனவே உள்ள நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை எந்த நேரத்திலும் எண்ணிம முறையில் சுய சேவை அடிப்படையில் வழங்குவதற்குமான சில குறைந்தபட்ச எண்ணிம உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது.




## IDBI வங்கியின் முதலீடு விலக்கம்

- பொதுத்துறை வங்கிகளுக்கான ஏலதாரர்களின் பரவலான தொகுப்பினைக் கொண்டு வரக் கூடிய விளம்பரதாரர் அளவுருக்களை மாற்றியமைப்பது குறித்து பரிசீலிக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கியிடம் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.
- தற்போது நாட்டில் 12 பொதுத்துறை வங்கிகள் உள்ளன.
- தற்போதுள்ள எந்த வங்கியும் புதிய வங்கியை ஊக்குவிக்க முடியாது என்றும், அதே

விளம்பரதாரர் மற்றொரு வங்கியை விளம்பரப்படுத்த முடியாது என்றும் ரிசர்வ் வங்கியின் விதிமுறைகள் தெளிவாகக் கூறி இருப்பதால், வங்கித் தனியார்மயமாக்கல் பலனளிக்கக் கூடியதாக உள்ளது.

- 2021-22 (ஏப்ரல்-மார்ச்) ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இரண்டு பொதுத்துறை வங்கிகளையும் ஒரு பொதுக் காப்பீட்டு நிறுவனத்தையும் தனியார்மயமாக்குவதற்காக முன்மொழியப்பட்டது.
- பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்குவதற்குச் சட்டத் திருத்தங்கள் தேவைப் படும்.




## ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இணைய சங்கேதச் சொத்து அறிக்கை கட்டமைப்பு

- ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, ஒரு புதிய இணைய சங்கேத-சொத்து அறிக்கைக் கட்டமைப்பை (CARF) அறிவித்துள்ளது.
- ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கட்டமைப்பானது இணைய சங்கேத-சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் புகாரளிப்பதற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் வசதிகளை வழங்குகிறது.
- G20 அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களிடம் இந்தக் கட்டமைப்புகள் வழங்கப் படும்.
- இணைய சங்கேத-சொத்துக்கள் G20 அமைப்பின் பொதுவான அறிக்கையிடல் தரத்தினால் (CRS) முழுமையாக உள்ளடக்கப் படவில்லை என்பதோடு வரி ஏய்ப்பு அபாயத்தையும் இது அதிகரிக்கிறது.
- இணைய சங்கேத-சொத்துக்களை, எந்த ஒரு மத்திய நிர்வாகியிடமும் அதன் பரிமாற்றம் மற்றும் பரிவர்த்தனைகள்/உடமைகள் பற்றிய முழு விவரத்தினைப் பற்றி தெரியப் படுத்தாமலும் வைத்திருக்க இயலும்.
- இணைய சங்கேதப் பணச் சந்தையானது, இணைய சங்கேத-சொத்துப் பரிமாற்றங்கள் மற்றும் பல்வேறு முறைப்படுத்தப்படாத பணத்தொகுப்பு வழங்குநர்கள் சந்தையில் இடம் பெறுவதற்கு வழி வகுத்தது.
- இந்தக் கட்டமைப்பானது உள்நாட்டுச் சட்டமாக மாற்றக் கூடிய வகையிலான மாதிரி விதிகளைக் கொண்டுள்ளது.




## இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதிச் சந்தை

- ❖ சீனா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக நெதர்லாந்து உருவெடுத்துள்ளது.
- ❖ 2022 ஆம் நிதியாண்டு முதல் இந்தியாவின் முதல் பத்து ஏற்றுமதித் தளங்களாக விளங்கும் நாடுகளின் பட்டியலில் நெதர்லாந்து இரண்டு இடங்கள் முன்னேறியுள்ளது.
- ❖ அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை முறையே மிகப்பெரிய மற்றும் இரண்டாவது பெரிய ஏற்றுமதிச் சந்தைகளாகத் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.
- ❖ 2022 ஆம் நிதியாண்டில் 21வது இடத்தைப் பிடித்த பிரேசில் தற்போது இந்தியாவின் 8வது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக உள்ளது.

## இந்தியாவுடனான சீனாவின் வர்த்தக உபரி

- ❖ 2021 ஆம் ஆண்டில், வருடாந்திர இருவழி வர்த்தகமானது முதல் முறையாக 100 பில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டி 125.6 பில்லியன் டாலரை எட்டியது.
- ❖ தற்போது, இந்தியாவிற்கு சீனா மேற்கொள்ளும் ஏற்றுமதி மதிப்பானது 31 சதவீதம் அதிகரித்து, 89.66 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது.
- ❖ இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 75 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்து உள்ளது.
- ❖ கடந்த ஒன்பது மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பானது, 36.4 சதவீதம் சரிந்து, 13.97 பில்லியன் அமெரிக்க டாலராகப் பதிவானது.
- ❖ இதன் விளைவாக, மொத்த வர்த்தகப் பற்றாக்குறை 75.69 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AVGAS 100 LL

- இந்திய நாடானது, AVGAS 100 LL எனப்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சிறப்பு ரக விமான எரிபொருளினை அறிமுகப்படுத்தியது.
- இந்த எரிபொருளானது உந்துவிசை எந்திரங்கள் கொண்ட விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்களுக்காக இந்தியன் எண்ணெய்க் கழக நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது.
- இது வெடிக்காமல் அழுத்தத்தினை எதிர்கொள்ளும் எரிபொருளின் திறனை அளவிடச் செய்கின்ற அதிக ஆக்டேன் எண் கொண்ட நீல நிற விமானப் பெட்ரோல் ஆகும்.
- இந்தியா தற்போது சிறப்பு ரக விமான எரிபொருளை ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறது.
- இது குஜராத்தின் வடோதராவில் உள்ள இந்தியன் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையில் உற்பத்தி செய்யப்படும்.
- வடோதரா சுத்திகரிப்பு நிலையமானது, தற்போது உள்நாட்டுத் தேவைகள் மற்றும் ஏற்றுமதி தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்குத் திறனை கொண்டுள்ளது.




**Figure 6-32.** *Aviation fuel color-coding system.*

## VSHORADS ஏவுகணை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, மிகக் குறுகிய தூர வரம்பு உடைய வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு (VSHORADS) ஏவுகணையின் இரண்டு வெற்றி கரமான சோதனைகளை மேற்கொண்டுள்ளது.
- இது மனிதனால் எளிதில் சுமந்து செல்லக்கூடிய வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு (MANPAD) ஆகும்.
- இந்த ஏவுகணையானது, குறைந்த உயரத்தில் உள்ள வான்வழி இலக்குகளை குறுகிய தூர வரம்பிலேயே எதிர்கொள்ளும் திறன் கொண்டது.
- இது இரட்டை உந்துதல் திறன் கொண்ட திட விசைப்பொறி மூலம் இயக்கப்படுகிறது.
- MANPADS என்பது குறுகிய தூர, இலகுரக மற்றும் எளிதில் சுமந்து செல்லக்கூடிய தரையிலிருந்து வானை நோக்கிப் பாயக்கூடிய ஏவுகணைகள் ஆகும்.

- விமானம் அல்லது ஹெலிகாப்டர்களை அழிக்கச் செய்வதற்காக தனிநபர்கள் அல்லது சிறு குழுக்களினால் இதனை இயக்க இயலும்.




## செவ்வாய்க் கிரகத்தில் கரிமப் பொருள்

- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள ஒரு பழங்கால நதியின் கழிமுகத்தில் இருந்து பல கரிமப் பாறை மாதிரிகளை பெர்செவரன்ஸ் உலாவிக் கலமானது சேகரித்துள்ளது.
- இந்த மாதிரிகள் தற்சமயம் எதிர்கால செவ்வாய்க் கிரகத்திற்கான ஆய்வு கலங்களால் சேகரிக்கப்பட்டு பூமிக்குக் கொண்டு வரப்பட உள்ள தொகுப்புகளோடுச் சேர்த்து வைப்பதற்காகச் சேமித்து வைக்கப்பட உள்ளது.
- இந்த ஆய்வுப் பணி தொடங்கியதிலிருந்து இதுவரை சேமிக்கப்பட்ட மாதிரிகளில், இந்தப் பாறை மாதிரிகள் அதிக கரிமப் பொருட்களின் செறிவைக் கொண்டுள்ளன.
- சமீபத்தியச் சேகரிப்புடன், இந்த உலாவிக் கலம் தற்போது மொத்தம் 12 மாதிரிகளைச் சேகரித்துள்ளது.



- பெர்செவரன்ஸ் கலம் சேகரித்தப் பாறைகளில் ஒன்றிற்கு வைல்ட்கேட் ரிட்ஜ் என்று பெயரிடப்பட்டது.
- பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, உப்பு நீர் ஏரியில் சேறும் மணலும் ஆவியாகிப் போனதால் இந்தப் பாறை உருவாகியிருக்கலாம் என கருதப்படுகிறது.

## DART ஆய்வுப் பணி – நாசா

- நாசாவின் இரட்டை குறுங்கோள் திசைமாற்றச் சோதனை (DART) என்பது விண்வெளியில் ஒரு குறுங்கோளினைத் தடம் மாற்றுவதற்கான நாசாவின் முதல் முயற்சியாகும்.
- இந்த உலகின் முதல் கிரகப் பாதுகாப்புத் தொழில்நுட்பச் செயல்பாட்டு அமைப்பானது அதன் குறுங்கோள் இலக்கை வெற்றிகரமாகத் தாக்கியது.
- வெறும் 530 அடி (160 மீட்டர்) விட்டம் கொண்ட சிறிய விண்பொருளான டிமார்போஸ் என்ற குறுங்கோளினை DART கலம் குறி வைத்து தாக்கியது.
- இது டிடிமோஸ் எனப்படும் பெரிய, 2,560 அடி (780 மீட்டர்) கொண்ட குறுங்கோளினைச் சுற்றி வருகிறது.
- ஆனால் எந்த குறுங்கோளும் பூமிக்கு அச்சுறுத்தலாக திகழவில்லை.




## இலகுரக போர் ஹெலிகாப்டர் - பிரசந்தா

- பிரசந்தா எனப்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் பல்பயன்பாட்டு இலகு ரக போர் ஹெலிகாப்டர்கள் இந்திய விமானப் படையில் இணைக்கப்பட்டன.
- பிரசந்தா என்றப் பெயருக்கு "கடுமையானது" என்று பொருளாகும்.
- இது அரசுக்குச் சொந்தமான பாதுகாப்பு நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் வடிவமைத்து உருவாக்கப்பட்டது.



## மங்கள்யான் ஆய்வுக் கலம்

- இந்தியாவின் செவ்வாய்க் கிரகச் சுற்றுக் கலமானது, கோள்களுக்கிடையேயான ஆய்வுப் பணியில் மேற்கொண்ட 8 ஆண்டுகள் நீண்ட நெடும் ஆய்வுப் பணியை நிறைவு செய்ததையடுத்து ஓய்வு பெற்றுள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட்டு, 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நுழைந்தது.
- இது வெறும் 6 மாதங்கள் மட்டுமே செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டது, என்றாலும் 8 நீண்ட நெடும் ஆண்டுகள் காலத்திற்கு இது செயல்பாட்டில் இருந்தது.
- இந்தியாவின் மங்கள்யான் கலத்திற்கு முன்னதாக, அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளின் விண்வெளி நிறுவனங்கள் மட்டுமே செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்தன.
- மேற்பரப்பு புவியியல், புற வடிவவியல், வளிமண்டல நடவடிக்கைகள், மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் வளிமண்டல வெளியேற்றச் செயல்முறை போன்றவை உட்பட செவ்வாய்க் கிரக நிலப்பரப்புகளை ஆய்வு செய்ய உதவும் வகையிலும் மங்கள்யான் ஒரு மாபெரும் மைல்கல் சாதனையாகும்.
- மங்கள்யான் இந்தப் பணிக்காக பின்வரும் 5 கருவிகளைப் பயன்படுத்தியது.
    - செவ்வாய்க் கிரக வண்ண ஒளிப்படக்கருவி (MCC)
    - வெப்ப அகச்சிவப்பு உருவரைவு நிறமாலைமானி (TIS)
    - செவ்வாய்க் கிரகத்திற்கான மீத்தேன் உணர்வி (MSM)
    - செவ்வாய்க் கிரக வெளிப்புற நடுநிலை இயைபு மதிப்பீட்டுக் கருவி (MENCA)
    - லைமன் ஆல்பா ஒளிமானி (LAP).




## ஆப்டிமஸ் ரோபோவின் மாதிரி வடிவம்

- எலோன் மஸ்க் தனது டெஸ்லா மின்சார வாகன நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட மனித வடிவிலான ஒரு எந்திர மனிதனின் சமீபத்திய மாதிரி வடிவத்தினை அறிமுகப் படுத்தினார்.

- டெஸ்லா நிறுவனத்தின் இந்த வெகுஜனச் சந்தை எந்திர மனிதன் ஆனது கார் தொழிற் சாலைகளில் மேற்கொள்ளப்படும் வேலைகளில் பணியமர்த்தப்பட்டுச் சோதிக்கப் படும்.



## நிலவில் மிகுதியான சோடியம் இருப்பு




- சந்திரயான்-2 உலாவி கலத்தில் உள்ள 'CLASS' எனப்படும் X - கதிர் நிற மாலை மானி ஆனது முதன்முறையாக நிலவில் ஏராளமான சோடியம் இருப்பதை வரைபடமாக்கி உள்ளது.
- 'CLASS' என்பது சந்திரயான்-2 மாபெரும் பரப்பு மிதரக X - கதிர் நிறமாலைமானி என்பதைக் குறிக்கிறது.
- இந்த சோடியம் அணுக்கள், சந்திர கனிமங்களின் ஒரு பகுதியாக இருப்பதால் சூரியக் காற்று அல்லது புற ஊதாக் கதிர்வீச்சு மூலம் மிக எளிதாக மேற்பரப்பில் இருந்து வெளியேற்றப்படும்.
- சந்திரயான்-1 X கதிர் ஒளிர்வு நிற மாலைமானியானது, (C1XS) X-கதிர்களில் அதன் சிறப்பியல்புப் பொருந்திய ஒளிக்கற்றையின் ஆய்வின் மூலம் சோடியத்தைக் கண்டு அறிந்தது.

## செவ்வாய்க் கிரகத்தைத் தாக்கும் விண்வெளிப் பாறைகள்

- ❖ நாசாவின் இன்சைட் என்ற தரையிறங்கும் கலமானது கடந்த இரண்டு ஆண்டுகளாக செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பைத் தாக்கி வரும் நான்கு விண்வெளிப் பாறைகளின் அதிர்வுகளை 'பதிவு செய்து' கண்டறிந்துள்ளது.
- ❖ ஒரு விண்கலமானது, நில அதிர்வு மற்றும் ஒலி அலைகள் ஆகிய இரண்டையும் ஒரு தாக்கத்தின் மூலம் பதிவு செய்வது இதுவே முதல் முறையாகும்.
- ❖ 2018 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய பிறகு, இன்சைட் கலம் கண்டறிந்த முதல் தாக்கம் இதுவாகும்.
- ❖ இன்சைட் கலம் கண்காணித்த விண்வெளிப் பாறைகள் - ஒன்று 2020 ஆம் ஆண்டில் மோதிய போதும் மற்றொன்று 2021 ஆம் ஆண்டில் மோதிய போதும் கண்டறியப்பட்டது.
- ❖ செவ்வாய்க் கிரகமானது, நமது சூரிய மண்டலத்தின் குறுங்கோள் மண்டலத்திற்கு அருகாமையில் உள்ளது.
- ❖ இது பூமியை விட மிக அதிகமாக விண்வெளிப் பாறைகளால் தாக்கப்பட்டு பாதிக்கப் படக் கூடியதாக உள்ளது.



## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மருந்து பரிசோதனை நுட்பம்




- ❖ செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புதிய மருந்து பரிசோதனை நுட்பத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி, அவர்களது நம்பிக்கைக்குரிய மருந்துகளை அடையாளம் காண்பதில் 97% வரை துல்லியத் தன்மையை அவர்கள் பெற்றனர்.
- ❖ இந்த நுட்பமானது, ஒவ்வொரு புரதப் பிணைப்பு தளத்திற்கும் வார்த்தைகள் மூலமான மருந்து-புரதத் தொடர்புகளை வலுப்படுத்துகிறது.

- இரண்டிற்கும் இடையிலான சிக்கலான தொடர்புகளை நிர்வகிக்கும் அம்சங்களைப் பிரித்தெடுப்பதற்கு இது ஆழமான கற்றல் முறைகளைப் பயன்படுத்துகிறது.

## குவாஃபு-1 தொலைநோக்கி




- மேம்பட்ட விண்வெளி சார்ந்த சூரிய ஆய்வகக் கலமானது (ASO-S) சீன நாட்டினால் லாங் மார்ச்-2டி கேரியர் என்ற விண்கலம் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- சூரியனை உள்ளீர்த்துத் தன்னுள் ஈர்க்க முயன்ற ஒரு புராண இராட்சசனின் பெயரால் இதற்கு குவாஃபு-1 என்று பெயரிடப்பட்டது.
- "சூரிய உச்சநிலை" நேரத்தில் முன்பு கிடைத்திராத சூரியனின் படங்களை எடுத்து மற்றும் ஆய்வு செய்ய அறிவியலாளர்களுக்கு இது உதவும்.
- சூரிய ஒளியின் உச்ச நிலையானது 2025 ஆம் ஆண்டில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ASO-S என்பது சூரியனை ஆராய்ச்சி செய்வதற்கெனவே பிரத்தியேகமாக ஏவப்பட்ட சீனாவின் முதல் முழு அளவிலான செயற்கைக்கோள் ஆகும்.
- இது உலகின் முதல் சூரிய தொலைநோக்கி ஆகும் என்பதோடு, இது சூரியக் கதிர்வீச்சு மற்றும் சூரிய வெளிப்புற வெப்ப வெளியேற்றம் ஆகிய இரண்டு நிகழ்வுகளையும் ஒரே நேரத்தில் கண்காணிக்கும் திறன் கொண்டதாகும்.
- இந்த ஆய்வுப் பணியானது, நாசாவின் பார்க்கர் சூரிய ஆய்வுக் கலம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் சூரிய ஆய்வு சுற்றுக்கலம் ஆகியவற்றைப் போன்றது.
- சூரிய வளிமண்டலத்தை ஆய்வு செய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் ஆதித்யா-L1 என்ற சூரிய ஆய்வுப் பணியை இந்தியா தொடங்க திட்டமிட்டுள்ளது.

## இஸ்ரோவின் அதிக எடை கொண்ட ஏவுகலம்

- மார்க் III - LVM3-M2 என்ற இந்தியாவின் அதிக எடை கொண்ட ஏவுகலமானது ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த வாடிக்கையாளரின் 36 அகலப்பட்டை வரிசை சேவைக்கான செயற்கைக் கோள்களை அதன் துல்லியமான சுற்றுப்பாதையில் செலுத்தியது.
- 8,000 கிலோ வரையிலான எடையுள்ள செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் திறனைக் கொண்டதனால் இந்த வாகனம் மிகவும் கனமான ஏவுகலம் என்றும் அழைக்கப் படுகிறது.
- 5,796 கிலோ எடை கொண்ட முதல் இந்திய ஏவுகலம் இதுவாகும்.
- LVM3-M2 என்பது மூன்று-நிலை ஏவு வாகனம் என்பதோடு அதன் பக்கவாட்டுப் பகுதிகளில் இரண்டு திட உந்துசக்தி S200 மோட்டார்கள் உள்ளன.
- இது மைய நிலை L110 திரவ நிலை மற்றும் C25 கிரையோஜெனிக் நிலை ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ஆறு டன் விண்வெளி பொருட்களை ஏற்றிச் சென்ற முதல் இந்திய ராக்கெட் இது என்பதோடு அதன் முதல் வணிக ஏவுதலை NSIL நிறுவனம் மேற்கொண்டது.
- மேலும், இது LVM3 வாகனத்தின் முதல் தாழ்மட்டச் சுற்றுப்பாதை வரையிலான முதல் பல-செயற்கைக் கோள் ஆய்வுப் பணி மற்றும் NSIL/DoS உடனான முதல் OneWeb ஆய்வுப் பணியாகும்.




## மனித மூளை செல்கள் எலிகளின் உடலில் ஒருங்கிணைப்பு

- அறிவியலாளர்கள், மனித நியூரான்களைப் புதிதாகப் பிறந்த எலிகளில் பொருத்தி அவற்றை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளனர்.
- இந்த எலிகள் மனநலக் கோளாறுகளை ஆராய்ச்சி செய்யவும், அவற்றிற்கு எதிரான சிகிச்சைகள் குறித்து சோதிக்கவும் உதவுகின்றன.

- எலிகளின் உடலில் பொருத்தப்பட்ட இந்த மனித நியூரான்கள் எலியின் உடலுக்கு மீண்டும் சமிக்ஞைகளை அனுப்ப முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்து முடிவு செய்தனர்.
- மனித மூளை வளர்ச்சி மற்றும் நரம்பியல் வளர்ச்சிக் கோளாறுகள் பற்றிய தற்போதையப் புரிதலை மேம்படுத்துவதில் இந்த ஆய்வு முக்கியப் பங்கு வகிக்கும்.




## அக்னி பிரைம் ஏவுகணை

- பாதுகாப்பு மற்றும் இராணுவ மேம்பாட்டு அமைப்பானது, உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட புதிய தலைமுறை தொழில்நுட்பத்தினைச் சார்ந்த அணுசக்தி திறன் கொண்ட, நடுத்தர தொலைவு வரம்புடைய ஏவுகணையான அக்னி பிரைம் (அக்னி-பி) ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்தது.
- இது இரண்டு கட்ட உலோகக் கொள்கல ஏவு அமைப்பு கொண்ட ஏவுகணையாகும்.
- இது அக்னி ரக ஏவுகணை தொடரின் சமீபத்திய மற்றும் ஆறாவது வகையாகும்.
- இது ஒருங்கிணைந்த மற்றும் வழிகாட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டமைக்கப் பட்டது.
- இந்த ஏவுகணையானது, 1,000 - 2,000 கிமீ தொலைவில் உள்ள தனித்தனி இடங்களுக்கு பல போர் ஆயுதங்களை ஏவும் திறன் கொண்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## தேசியத் தூய்மைக் காற்று திட்டத்தின் கீழ் புதிய இலக்கு நிர்ணயம்

- தேசியத் தூய்மைக் காற்றுத் திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டிற்குள் நகரங்களில் காணப்படும் நுண்துகள்களின் செறிவை 40 சதவிகிதமாகக் குறைப்பதற்கு இந்திய அரசு ஒரு புதிய இலக்கை நிர்ணயித்துள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டிற்குள் நுண் துகள்களின் செறிவை 20 முதல் 30 சதவீதம் வரை குறைப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட முந்தைய இலக்கின் ஒரு புதுப்பிப்பாகும்.
- தேசியத் தூய்மைக் காற்று திட்டத்தின் கீழ் உள்ள குறிப்பிட்ட நகரம் சார்ந்த திட்டங்கள் புதிய இலக்குகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கூற்றுப்படி, தேசியத் தூய்மைக் காற்று திட்டத்தின் கீழ் உள்ள இலக்குப் பூர்த்தி செய்யாத 131 நகரங்களில் 95 நகரங்களை 2017 ஆம் ஆண்டு நிலைகளுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் PM10 என்ற நுண்துகள் அளவை அவை குறைத்துள்ளன.
- இலக்குப் பூர்த்தி செய்யாத நகரங்கள் என்பது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளுக்கும் மேலாக தேசியச் சுற்றுப்புறக் காற்றின் தர நிலைகளில் இருந்து பின்தங்கிய நிலையில் உள்ள நகரங்களாகும்.
- 20 நகரங்களானது, ஒரு கன மீட்டருக்கு 60 மைக்ரோகிராம் என்ற அளவில் நிர்ணயிக்கப் பட்ட வருடாந்திரச் சராசரி PM10 செறிவிற்கான தேசியத் தர நிலைகளைப் பூர்த்தி செய்துள்ளன.
- தேசியத் தூய்மைக் காற்று திட்டமானது, 2019 ஆம் ஆண்டில் காலக்கெடுவிற்குட்பட்ட இலக்குடன் காற்றின் தர மேலாண்மைக்கான முதல் தேசியக் கட்டமைப்பாக தொடங்கப் பட்டது.
- இந்தியா முழுவதும் PM10 மற்றும் PM2.5 ஆகிய நுண்துகள்களின் செறிவைக் குறைக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாசுபடுத்திகளின் செறிவை ஒப்பிடுவதற்கான அடிப்படை ஆண்டாக 2017 ஆம் ஆண்டானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## சதுப்புநிலங்களின் மீது சந்திரனின் தாக்கம்

- சந்திரனின் சுற்றுப்பாதையின் அலைவு அல்லது 'சந்திரன் நிலைமாற்றம்' ஆனது உலகிலுள்ள சதுப்பு நிலங்களில் உள்ள மரங்களின் பரவல் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சந்திரனின் ஈர்ப்பு விசையானது பெருங்கடல்கள், கடலோரப் பகுதிகள் மற்றும் பல்லுயிர்களின் வளத்தினை மேம்படுத்துகின்ற ஓதங்களை உருவாக்குகிறது.
- சதுப்புநிலக் காடுகளின் வளர்ச்சி போன்ற அலை சார்ந்த ஈரநில சுற்றுச்சூழல் அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதில், இந்த நீண்ட காலகட்ட ஓதங்களின் சுழற்சி அமைப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாக புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.
- சந்திரனின் நிலைமாற்றம் அதன் குறைந்தபட்ச நிலையில் இருக்கும்போது, சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகள் வறண்டும், சில நாட்களுக்கு அவற்றின் வேர்களில் நீர் உறிஞ்சும் தன்மை நிறைவுற்ற நிலையிலும் மற்றும் அதிக நீர்ப் பற்றாக்குறையுடனும், மரங்களின் மேல் விதானங்களின் பரவல் குறைந்தும் காணப்படுகின்ற நிலைக்கு இது வழி வகுக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- சந்திரனின் நிலைமாற்றம் அதன் அதிகபட்ச நிலையில் இருக்கும் போது, அது கடல் ஓதங்களின் மட்டத்தினை அதிக அளவில் உயரச் செய்து, சதுப்புநிலக் காடுகளின் வளர்ச்சியை அதிகரிக்கும்.
- சதுப்புநிலங்கள் என்பவை மீன்களுக்கு சிறந்த வாழ்விடம் அளிக்கின்ற, கடலோர மண் அரிப்பிலிருந்துப் பாதுகாப்பினை வழங்குகின்ற கடலோரத் தாவரங்கள் ஆகும்.




## நீலக்குறிஞ்சிப் பூக்கள்

- நீலக் குறிஞ்சி மலர்கள் ஆனது மேற்குத் தொடர்ச்சி மலையின் (சந்திர துரோணா மலைகள்) பாபா பூதான்கிரி மலைத் தொடரின் பச்சை வண்ண பகுதிகளை ஊதா-நீல நிறம் நிறைந்த பகுதியாக மாற்றியுள்ளன.
- இது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கின்ற அகந்தேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு புதர் வகைச் செடியாகும்.
- இது கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பரவிக் காணப்படும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மலைச் சரிவுப் பகுதிகளில் காணப் படுகின்றன.



## பந்தேல்கண்ட் பகுதியின் முதல் புலிகள் காப்பகம்

- உத்தரப் பிரதேச அரசு அம்மாநிலத்தின் சித்திரகூட் மாவட்டத்தில் உள்ள ராணிப்பூர் வனவிலங்குச் சரணாலயத்தில் (RWS) நான்காவது புலிகள் காப்பகத்தினை நிறுவ உள்ளதாக ஒரு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- இந்த வனவிலங்குச் சரணாலயத்தில் அந்தப் பகுதியினைச் சேர்ந்தப் புலிகள் வாழ்வது இல்லை.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள பன்னா புலிகள் காப்பகத்தில் இருந்து புலிகள் அடிக்கடி இந்தச் சரணாலயத்திற்கு வந்து செல்கின்றன.
- இது துத்வா, பிலிபிட் மற்றும் அமன்கார் (கார்பெட் புலிகள் காப்பகத்தின் தாங்கு மண்டலம்) ஆகியவற்றுக்குப் பிறகு அந்த மாநிலத்தில் உருவாக்கப்படும் நான்காவது புலிகள் காப்பகமாகும்.
- உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பரவியுள்ள பந்தேல்கண்ட் பகுதியில் உருவாக்கப்படும் முதல் புலிகள் காப்பகம் இதுவாகும்.
- உத்தரப் பிரதேசத்தில் 173 புலிகள் உள்ள நிலையில் துத்வா தேசியப் பூங்காவில் தான் அதிக எண்ணிக்கையில் புலிகள் காணப்படுகின்றன.
- இந்தியாவில் தற்போது 53 புலிகள் காப்பகங்கள் உள்ளன.

## சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான உலகின் மிகப்பெரியப் பூங்கா

- குருகிராமில் அமைந்த ஆரவல்லி மலைத்தொடரில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான உலகின் மிகப்பெரியப் பூங்காவை உருவாக்க இரண்டு சர்வதேச நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள ஹரியானா அரசு முடிவு செய்துள்ளது.
- தற்போது, ஆப்பிரிக்காவினை அடுத்து, சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான மிகப்பெரியப் பூங்கா ஷார்ஜாவில் அமைந்துள்ளது.
- தற்போது முன்மொழியப்பட்டுள்ள இந்த ஆரவல்லி பூங்கா அதை விட ஐந்து மடங்கு பெரியதாக இருக்கும்.
- இதில் ஊர்வன மற்றும் இருவாழ்விட வாழ்விகளுக்கான கண்காட்சித் தளம், பறவைக் கூடம்/ பறவைப் பூங்கா, புலிகளுக்கான நான்கு மண்டலங்கள், தாவர வகைகளுக்கான ஒரு பெரிய பகுதி, வெளிநாட்டுப் பறவைகளுக்கான ஒரு பகுதி, கடல் வாழ் உயிரினங்கள், இயற்கை வழித் தடங்கள், சுற்றுலா மண்டலங்கள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் உயிரியல் பூங்காக்கள் ஆகியவை உள்ளடங்கும்.

## ஸ்டாக்ஹோம் மாநாட்டின் 18வது சந்திப்பு

- ஸ்டாக்ஹோம் மாநாட்டிற்கான நிரந்தரக் கரிம மாசுபடுத்திகளின் (POP) மறு ஆய்வுக் குழுவின் (POPRC-18) 18வது சந்திப்பானது இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்றது.
- இந்த உடன்படிக்கையின் கீழ் பட்டியலிடுவதற்காக மேலும் ஐந்து இரசாயனங்கள் இந்தச் சந்திப்பில் உட்சேர்க்கப்பட்டன.
- இதில் பட்டியலிடப்பட்ட அந்த மூன்று இரசாயனங்கள் (குளோரி பைரிஃபோஸ், குளோரினேட்டட் பாரஃபின் (பரிந்துரைக்கப் படுவதற்கு அப்பாற்பட்ட அளவு) மற்றும் நீண்ட சங்கிலித் தொடர் அமைப்பு கொண்ட பெர்ஃப்ளூரோ கார்பாக்சிலிக் அமிலங்கள்) ஏற்கனவே POPRC-17 மாநாட்டில் பரிந்துரைக்கப்பட்டன.
- ஒரு தீ பரவுத் தடுப்பானான டெக்லோரேன் பிளஸ் மற்றும் சில தனிநபர் பராமரிப்புப் பொருட்களில் பயன்படுத்தப்படும் நிலைப் படுத்தியான UV-328 ஆகிய இரண்டு இரசாயனங்கள் இந்த அமர்வில் மதிப்பீடு செய்யப்படும்.
- குளோர்பைரிஃபோஸ் என்ற இரசாயத்தினை ஒரு நிரந்தரக் கரிம மாசுபடுத்தியாகப் பட்டியலிட ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு மேற்கொண்ட ஒரு முன் மொழிவிற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்தது.
- இதில் இந்தியா வாதிட்ட கருத்துகள்
    - குளோர்பைரிஃபோஸ் ஒரு புற்றுநோய் உண்டாக்கும் காரணி அல்ல, எனவே அதன் செறிவு குறைவாகவே உள்ளது.
    - POPRC-17 சந்திப்பில் வழங்கப்பட்ட சில ஆய்வு அறிக்கைகள் கூறுகின்ற, குளோர் பைரிஃபோஸ் பாதகமான விளைவுகளைக் கொண்டுள்ளன என்ற கருத்தானது சக மதிப்பாய்வு செய்யப் படவில்லை.

***இந்தியாவில் குளோர்பைரிஃபோஸ்***

- 1977 ஆம் ஆண்டு முதல், 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லிச் சட்டத்தின் கீழ் குளோர் பைரிஃபோஸ் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- மேலும், அனுபம் வர்மா குழுவானது 2015 ஆம் ஆண்டில் இதனைத் தொடர்ந்துப் பயன்படுத்தலாம் என்று கூறி தனது மதிப்பாய்வில் பரிந்துரைத்தது.
- 2021 ஆம் ஆண்டில் குளோர்பைரிஃபோஸ் வேளாண்மைப் பயன்பாட்டிற்கு வேண்டி அங்கீகரிக்கப் பட்டது.
- கொண்டைக் கடலை, அரிசி மற்றும் பருத்தி ஆகியவற்றினைப் பாதிக்கும் பூச்சிகளுக்கு எதிராக இதனைப் பூச்சிக் கொல்லியாகப் பயன்படுத்துவதையும் இது உள்ளடக்கியது.
- இந்தியாவில் 18 பயிர்களுக்குப் பயன்படுத்துவதற்காக இது அங்கீகரிக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா அரசாங்கங்களால் தடை செய்யப்பட்ட பத்து பூச்சிக் கொல்லிகளில் இதுவும் ஒன்றாகும்.
- சீனாவும் இந்தியாவும் குளோர்பைரிஃபோஸ் ரசாயத்தினை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

## பேனர்மேன் டுராகோ பறவை

- பேனர்மேன் டுராகோ என்ற பறவை இனத்தின் எண்ணிக்கையானது வீழ்ச்சியடைந்து வருகிறது.

- வசிப்பிட இழப்பு மற்றும் இந்த பறவைகளின் இறகுகளைப் பெறுவதற்கான பண்டைய கால வேட்டைப் பாரம்பரியம் ஆகியவையே இதற்குக் காரணமாகும்.
- இந்தப் பறவை இனமானது IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் அழிந்து வரும் இனங்கள் ஆக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- கேமரூனின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள கிலம்-இஜிம் மலைக் காடுகளில் 1,500 பறவைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தப் பறவைகளின் சிவப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிற இறகுகள் ஆனது கேமரூன் பகுதியில் குறிப்பிடத் தக்க கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.



## உலகின் பாலூட்டிகள் அழிவின் தலைநகரம்

- வரவிருக்கும் பத்தாண்டுகளில் ஏற்பட உள்ள எந்தவொரு விலங்கு அல்லது தாவர அழிவினையும் தடுப்பதற்கு ஆஸ்திரேலியா உறுதி பூண்டுள்ளது.
- ஆஸ்திரேலியாவில் கூடுதலாக 50 மில்லியன் ஹெக்டேர் (124 மில்லியன் ஏக்கர்) நிலம், அதாவது நாட்டின் 30%க்கும் அதிகமான நிலப்பரப்பானது, 2027 ஆம் ஆண்டிற்குள் பாதுகாக்கப்படும்.
- இதற்காக, அரசானது புதிய அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்கள் செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தப் புதிய கொள்கையின் கீழ், அடுத்த 10 ஆண்டுகளில் 110 "முன்னுரிமை இனங்கள்" பாதுகாக்கப்படும்.
- இதில் கோலா, குவாக்கா மற்றும் வடக்கு ஹேரி நோஸ் வொம்பாட் ஆகியவை அடங்கும்.
- அடுத்தப் பத்து ஆண்டுகளில் புதிய அழிவுகள் எதுவும் ஏற்படாது என்றும் அரசாங்கம் உறுதியளிக்கிறது.
- உலகிலேயே அதிகளவில் உயிரினங்கள் அழியும் விகிதங்களைக் கொண்ட நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்றாகும்.
- இது காட்டு விலங்குகளின் பரவல், பருவநிலை மாற்றம் மற்றும் பரவலான காடழிப்பு ஆகியவற்றால் ஏற்படுகிறது.
- பிப்ரவரி மாதத்தில், கோலா கரடிகள் முதன்முறையாக "அழிந்து வரும்" இனமாக அந்த அரசினால் அதிகாரப் பூர்வமாக பட்டியலிடப்பட்டது.



## திருப்புமுனை செயல்பாட்டு நிரல் அறிக்கை 2022

- ❖ இது சர்வதேச எரிசக்தி முகமை (IEA), சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) மற்றும் ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற உயர்நிலை சாம்பியன் ஆகிய அமைப்புகளால் வெளியிடப்பட்டது.
- ❖ மின்சாரம், ஹைட்ரஜன், சாலைப் போக்குவரத்து, எஃகு மற்றும் வேளாண்மை ஆகிய ஐந்து முக்கியத் துறைகளில் உமிழ்வைக் குறைப்பதில் பதிவான முன்னேற்றத்தை இது மதிப்பிடுகிறது.




- ❖ இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற மாநாட்டின் COP26 உச்சி மாநாட்டில் கோரப்பட்ட முதல் வகையான வருடாந்திர முன்னேற்ற அறிக்கையாகும்.
- ❖ இது G7 அமைப்பு, சீனா மற்றும் இந்தியா உட்பட 45 உலக நாடுகளின் தலைவர்களின் ஒப்புதலுடன், உலகப் பொருளாதாரத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் உள்ளடக்கியது.
- ❖ இந்த அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஐந்து துறைகள் ஒருசேர உலகளாவியப் பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றத்தில் கிட்டத்தட்ட 60% ஆகும்.

## நிகர-சுழியக் கார்பன் உமிழ்வு - 2050

- ❖ அனைத்து 193 சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்புகளின் (ICAO) உறுப்பினர்களும் 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர சுழியக் கார்பன் உமிழ்வு என்ற நீண்ட கால விமானப் போக்குவரத்து இலக்கை (LTAG) ஆதரிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

- 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரீஸ் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பல வருட திட்டமிடல் மற்றும் தயார் நிலைககளை அடுத்து, இந்த அறிவிப்பு வந்துள்ளது.
- உலகளாவிய உமிழ்வுகளில் புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டின் மூலமான உமிழ்வில் 2.4% விமானப் போக்குவரத்துத் துறை தற்போது பங்களிக்கிறது

## அசோலா பாட்டி வனவிலங்குச் சரணாலயத்தில் சிறுத்தைகள்




- டெல்லியின் அசோலா பாட்டி வனவிலங்குச் சரணாலயத்தில் 1940 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக சிறுத்தைகள் தென்பட்டன.
- அசோலா பாட்டி வனவிலங்குச் சரணாலயத்தில் 8 சிறுத்தைகள் கண்டறியப்பட்டன.
- இந்த சரணாலயத்தில் 1940 ஆம் ஆண்டு முதல் சிறுத்தைகள் இருந்ததாக பதிவு செய்யப் படவில்லை.
- அசோலா பாட்டி வனவிலங்குச் சரணாலயம், ஆரவல்லி மலைத்தொடரின் தெற்கு டெல்லி மலைமுகட்டுப் பகுதியில் ஹரியானா மற்றும் டெல்லி மாநில எல்லையில் அமைந்துள்ளது.
- இது தெற்கு டெல்லி மற்றும் ஹரியானாவின் ஃபரிதாபாத் மற்றும் குருகிராம் மாவட்டங்களின் வடக்குப் பகுதிகள் முழுவதும் பரவியுள்ளது.
- இது வடக்கு ஆரவல்லி சிறுத்தை வனவிலங்கு வழித்தடத்தின் ஒரு பகுதியாகும்.

## ஜுராசிக் காலத்தில் வாழ்ந்த ஊர்வன இனம்



- டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து, அழிந்து போன பல்லி போன்ற புதிய ஊர்வன இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ஒபிஸ்தியமிமஸ் கிரிகோரி சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஜுராசிக் காலத்தில் வட அமெரிக்காவில் உயிர் வாழ்ந்தது.
- இது டைனோசர்களான ஸ்டெகோசொரஸ் மற்றும் அலோசரஸ் போன்ற இனங்களின் கால கட்டத்தில் வாழ்ந்தன.
- இந்த ஊர்வன இனங்கள் நியூசிலாந்தில் காணப்படும் டுவாடாராவின் அதே வம்சாவளியைச் சேர்ந்தவையாகும்.

## இந்தியாவில் காரீய நச்சின் தாக்கம்




- நிதி ஆயோக் மற்றும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையானது இந்தியாவில் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே காரீய நச்சுத்தன்மையின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையினை எடுத்துக் காட்டுகிறது.
- காரீய நச்சுத்தன்மையினால் ஏற்படும் அதிக சுகாதாரம் மற்றும் பொருளாதாரச் சுமை இந்தியாவில் பதிவாகியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் அறிக்கையானது, உலகம் முழுவதும் காரீய நச்சுத்தன்மையினால் பாதிக்கப்பட்ட மொத்த 800 மில்லியன் குழந்தைகளில் 275,561,163 பேர் இந்தியாவில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளது.
- அதாவது இந்தியாவில் 50 சதவீத குழந்தைகள் காரீய நச்சுத்தன்மையினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இது நாட்டில் 2.3 லட்சம் அளவிலான முன்கூட்டிய மரணங்களுக்கும் வழி வகுத்தது.

- பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை இந்திய மாநிலங்களில் சராசரியாக இரத்தத்தில் அதிக காரீயக் கலப்பு அளவை (BLL) கொண்டிருப்பதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- இது அதிக சராசரி இரத்தத்தில் அதிக காரீயக் கலப்பு அளவைக் கொண்ட மொத்த இந்திய மக்கள்தொகையில் 40% ஆகும்.

## துர்காவதி புலிகள் காப்பகம்

- மத்தியப் பிரதேச வனவிலங்கு வாரியமானது, பன்னா புலிகள் காப்பகத்தில் உள்ள புலிகளுக்காக ஒரு புதிய காப்பகத்தினை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2,339 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்ட இந்தப் புதிய புலிகள் காப்பகம் ஆனது, துர்காவதி புலிகள் காப்பகம் என்று அழைக்கப்படும்.
- இது நரிசிங்பூர், தாமோ மற்றும் சாகர் ஆகிய மாவட்டங்களில் பரவிக் காணப்படும்.
- புலிகள் அந்தப் புதியக் காப்பகத்திற்கு இயற்கையாக இடம் பெயரச் செய்வதற்காக துர்காவதியுடன் பன்னா புலிகள் காப்பகத்தினை இணைக்கும் பசுமை வழிச்சாலை ஒன்று உருவாக்கப் படும்.




## காட்டெருமைகள் மறு அறிமுகம்

- இலங்கையில் காட்டெருமைகளின் எண்ணிக்கையினை மீட்டெடுகச் செய்வதற்காக வேண்டி இந்தியக் காட்டெருமைகளை அங்கு இடம் மாற்றுமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
- இந்த முன்மொழிதலுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்தால், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இந்த வகையிலான முதல் ஒப்பந்தம் இதுவாகும்.
- இது உலகளவில் நிலவி வரும் வனவிலங்கு அல்லது விலங்கியல் சார்ந்த அரசுமுறை பேச்சுவார்த்தைக்கு ஏற்ப உள்ளது.
- குறைந்தது 6 இந்திய காட்டெருமைகளையாவது அங்கு இடம் மாற்றுமாறு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.
- இந்தியக் காட்டெருமை அல்லது கவுர் சிங்கள மொழியில் கவரா என்று அழைக்கப் படுகிறது.

- ஒரு காலத்தில் இலங்கையில் பரவலாக இவை காணப்பட்டாலும் 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அவை அழிந்து விட்டன.
- இந்தியக் காட்டெருமையானது, உலகிலேயே மிகப்பெரிய காட்டு எருது இனமாகும்.
- IUCN அமைப்பின் சிவப்பு நிறப் பட்டியலில் இந்தியக் காட்டெருமையானது, "பாதிக்கப் படக்கூடிய இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.



## ஒட்டகச்சிவிங்கி பற்றிய மரபியல் ஆய்வு

- கொல்கத்தாவில் உள்ள அலிப்பூர் விலங்கியல் பூங்காவில் உள்ள ஒட்டகச்சிவிங்கிகள் பெரும்பாலும் நுபியன் ஒட்டகச்சிவிங்கிகள் அல்லது ரோத்ஸ்சைல்ட் ரக ஒட்டகச் சிவிங்கிகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- இந்தியாவின் வடக்கத்திய ஒட்டகச்சிவிங்கி இனங்களின் (29 ஒட்டகச் சிவிங்கிகள்) மிகப் பெரியக் கூட்டமானது கொல்கத்தாவில் உள்ள அலிப்பூர் விலங்கியல் பூங்காவில் உள்ளது.
- சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகள் ஆப்பிரிக்காவில் உள்ள மற்ற காலனித்துவப் பகுதிகளிலிருந்து வடக்கத்திய ஒட்டகச் சிவிங்கிகளைக் கொண்டு வந்தனர்.




- நுபியன் ஒட்டகச்சிவிங்கியானது, ஒட்டகச்சிவிங்கிகளின் ஒரு கிளையினமாகும்.
- இது வடகிழக்கு ஆப்பிரிக்காவில் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்பட்டது.
- இருப்பினும், நுபியன் ஒட்டகச்சிவிங்கிகளின் 95% எண்ணிக்கையானது கடந்த 30 ஆண்டுகளில் குறைந்துள்ளது.

- ரோத்ஸ்சைல்ட்ஸ் ஒட்டகச் சிவிங்கியானது, 6 மீ உயரம் வரை வளரக்கூடிய மிக உயரமான கிளை உயிரினங்களில் ஒன்றாகும்.
- மற்ற ஒட்டகச்சிவிங்கிகளுடன் ஒப்பிடும்போது அதன் நிறம் தனித்துவமானது, ஏனெனில் அவற்றின் உடல் அடையாளக் குறியீடுகள் அவற்றின் கால்களில் பாதி வரை மட்டுமே காணப்படும்.
- நுபியன் மற்றும் ரோத்ஸ்சைல்ட் ஒட்டகச்சிவிங்கிகள் IUCN அமைப்பினால் 'மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளவை' மற்றும் 'ஆபத்தான நிலையில் உள்ள உயிரினம்' என பட்டியலிடப் பட்டுள்ளன.

## பருவநிலை வெளிப்படைத்தன்மை அறிக்கை – 2022




- 8வது பருவநிலை வெளிப்படைத்தன்மை அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- சீனா, இந்தோனேசியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை புதைபடிவ எரி பொருட்களுக்கான அதிக மொத்த மானியங்களைக் கொண்ட G20 அமைப்பின் உறுப்பினர்கள் நாடுகள் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டில், மின்சாரம் மற்றும் மனை விற்பனைத் துறையில் மாசு உமிழ்வு பெருந் தொற்றுக் காலத்திற்கு முந்தைய அளவை விட அதிகமாக இருந்தது.
- சீனா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில், இந்தத் துறைகளில் பதிவான தனிநபர் உமிழ்வு தற்போது 2019 ஆம் ஆண்டின் அளவை விட அதிகமாக உள்ளது.
- ஐக்கியப் பேரரசு (67 சதவீதம்), ஜப்பான் (48 சதவீதம்) மற்றும் மெக்சிகோ (40 சதவீதம்) ஆகியவை புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பங்கில் அதிக அதிகரிப்பு கொண்ட நாடுகள் ஆகும்.
- ரஷ்யா (16 சதவீதம்) மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் (14 சதவீதம்) மிகக் குறைந்த அதிகரிப்பு ஆனது பதிவானது.
- 2021 ஆம் ஆண்டில் பதிவான கடுமையான வெப்பம் காரணமாக சேவை, உற்பத்தி, விவசாயம் மற்றும் கட்டுமானத் துறைகளில் இந்தியா 159 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வருமான இழப்பைச் சந்தித்துள்ளது.
- இது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீதமாகும்.

- இந்தியாவில் பதிவான அதிக வெப்ப வெளிப்பாடு 1990-1999 ஆகிய ஆண்டுகளில் இருந்து 39 சதவீதம் அளவிலான அதிகரிப்புடன், 167 பில்லியன் அளவிலான திறன்மிகு உழைப்பு நேரத்தை இழக்கச் செய்தது.
- உலக வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால், நாட்டில் தொழிலாளர் உற்பத்தித் திறன் 1986-2006 ஆம் ஆண்டுகளில் இருந்த அளவில் இருந்து 5 சதவீதம் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## புதிய வகை ஆழ்கடல் மீன் இனங்கள்

- அட்டகாமா அகழியில் புதிய வகை ஆழ்கடல் மீன் இனங்களை அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர்.
- அவர்கள் மூன்று வகையான ஆழ்கடல் நத்தை மீன்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ள நிலையில் அவற்றுள் ஒரு வகை இதுவரை அறிவியல் துறைக்கே அறிமுகமாகாத மீன் வகையாகும்.
- 6,000 முதல் 7,000 மீட்டர் ஆழத்தில் பாராலிபாரிஸ் செல்டி என பெயரிடப்பட்ட புதிய இனமானது கண்டுபிடிக்கப்பட்டது.
- பெரிய கண்கள் மற்றும் தனித்துவமான நிறம் கொண்ட இது ஆழமற்ற நீரில் வாழும் நத்தை மீனை ஒத்துள்ளது.
- இது பரலிபாரிஸ் இனத்தைச் சேர்ந்தது.
- இந்த இனத்தினைச் சேர்ந்த மீன் இனங்கள் பெரும்பாலும் அண்டார்டிக் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் காணப் படுவதோடு அது அரிதாகவே 2,000 மீட்டர் ஆழத்திற்குக் கீழ் காணப் படுகின்றன.
- பாராலிபாரிஸ் இனம் ஆழ்கடல் மண்டலத்தில் பதிவானது இதுவே முதல் முறையாகும்.
- அட்டகாமா பாலைவனத்தில் வாழும் பழங்குடியினரின் குன்சா மொழியில் பராலிபரிஸ் செல்தி என்ற பெயருக்கு நீலம் என்று பொருள்படும்.
- இந்தப் புதிய இனமானது தெற்குப் பெருங்கடலின் குளிர்ந்த பகுதிக்கு ஏற்ற வகையிலான இனத்திலிருந்து உருவாகியுள்ளது.
- இவற்றின் கண்டுபிடிப்பானது, குளிர் வெப்பநிலை மற்றும் உயர் அழுத்த ஏற்பு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு குறித்த புதிய கேள்விகளை முன் வைக்கிறது.
- அடகாமா அகழி அல்லது பெரு-சிலி அகழி என்பது கிழக்கு பசிபிக் பெருங்கடலில் பெரு மற்றும் சிலி கடற்கரையிலிருந்து 160 கிமீ தொலைவில் அமைந்துள்ள ஒரு கடல் அகழி ஆகும்.



## உமிழ்வு இடைவெளி அறிக்கை 2022

- "உமிழ்வு இடைவெளி அறிக்கை 2022-இறுதி அறிக்கை" என்ற தலைப்பிலான அறிக்கை என்பது சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் (UNEP) வெளியிடப் பட்டது.
- உமிழ்வு இடைவெளி அறிக்கைகள், உமிழ்வைக் குறைப்பதற்காக நாடுகள் மேற் கொண்ட உறுதிப்பாடுகளுக்கும், 2100 ஆம் ஆண்டிற்குள் உலக வெப்பநிலை அதிகரிப்பை 2 டிகிரி செல்சியஸுக்கும் கீழே குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை மதிப்பிடுகின்றன.
- இந்த அறிக்கையானது, 2030 ஆம் ஆண்டில் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகள் எந்த அளவில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதற்கும் பருவநிலை மாற்றத்தின் பேரழிவு மிக்க விளைவுகளைத் தடுக்க அவற்றின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தினைப் பகுப்பாய்வு செய்கிறது.
- தற்போதையக் கொள்கைகள் 2100 ஆம் ஆண்டில் 2.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்வுக்கு வழிவகுக்கும்.
- தற்போதையப் பருவநிலை உறுதிப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதால் இந்த நூற்றாண்டின் இறுதியில் 2.4 முதல் 2.6 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பநிலை உயர்வை மட்டுமே குறைக்கும்.
- பாரீஸ் உடன்படிக்கை இலக்குகளை அடைவதற்குப் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுகள் 2030 ஆம் ஆண்டிற்குள் 45 சதவிகிதம் குறைக்கப்பட வேண்டும்.
- சமீபத்திய அறிக்கையானது மின்சாரம், தொழில், போக்குவரத்து மற்றும் கட்டிடத் துறைகள் மற்றும் உணவு மற்றும் நிதி அமைப்புகள் ஆகிய 6 பகுதிகளில் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைத்தது.
- குறைந்த கார்பன் பொருளாதாரத்தினை நோக்கி உலகைக் கொண்டு செல்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் 4 முதல் 6 டிரில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு தேவைப்படும் என்று இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.



# மாநிலச் செய்திகள்

## காண்டாமிருகங்களுக்கான நினைவகம்

- காண்டாமிருகங்களின் கொம்புகளைக் கொண்டு சேகரிக்கப்பட்ட சாம்பலால் செய்யப் பட்ட நினைவுச் சின்னம் அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்காவில் திறக்கப் பட்டது.
- மூன்று காண்டாமிருகச் சிற்பங்களைக் கொண்ட இந்த நினைவுச் சின்னத்திற்கு "ஒற்றைக் கொம்புடைய விலங்குகளின் உறைவிடம்" என்று பெயரிடப்பட்டது.
- இதில் ஒரு ஆண் காண்டாமிருகம், ஒரு பெண் காண்டாமிருகம் மற்றும் ஒரு கன்று ஆகியவற்றின் உருவமானது இடம் பெற்றுள்ளது.
- வெவ்வேறு பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வனக் காவலர்களின் மூன்று உருவங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.
- தீ வைக்கப்பட்ட சுமார் 2,500 காண்டாமிருகக் கொம்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட சாம்பலைப் பயன்படுத்தி அசாம் மாநில அரசால் இந்தக் காண்டாமிருகச் சிலைகள் உருவாக்கப் பட்டன.
- கடந்த ஆண்டு (செப்டம்பர் 22) உலக காண்டாமிருக தினத்தையொட்டி, காசிரங்கா தேசியப் பூங்காவில் காண்டாமிருகத்தின் கொம்புகளை ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி தொலைதூரக் கருவி மூலம் அவை இயக்கப் பட்டு எரிக்கப்பட்டன.
- அவை கடந்த 40 ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டவை அல்லது கைப்பற்றப்பட்டவை.
- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்காவில் உலகிலேயே அதிகளவில் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் உள்ளன.



## முழுமையான கன்னட மொழி மேம்பாட்டு மசோதா

- இந்த மசோதா கர்நாடக அரசு வேலைகளில் கன்னட மொழியினருக்கு முன்னுரிமை அளிப்பதோடு அம்மாநிலத்தில் உருவாக்கப்படும் தனியார் வேலைகளில் உள்ளூர் மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கவும் செய்கிறது.
- கன்னட மொழியினைப் படிக்கவும் எழுதவும் தெரிந்த, குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் கர்நாடகாவில் வசிக்கும் பெற்றோர்களைக் கொண்ட தனிநபர்களை இந்த மசோதா கன்னட மொழியினர் என வரையறுக்கிறது.

- இந்த மசோதாவின் கீழ், உயர்தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறைக் கல்வி போன்ற படிப்புகளில் கன்னட மொழியின் நடைமுறை மற்றும் செயல்பாட்டு அறிவு கற்பிக்கப் படும்.
- அங்கு கன்னட மொழியினை முதன்மையாகக் கொண்டுள்ளப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வியில் இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- அங்கு குறைந்தபட்ச அளவு கூட கன்னட மொழியினரைப் பணியமர்த்தாத தனியார் நிறுவனங்களுக்கு நிலச்சலுகை, வரிச்சலுகை மற்றும் பிற சலுகைகள் போன்றவை மறுக்கப்படும் என இந்த மசோதா கூறுகிறது.
- கன்னட மொழி தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அம்மாநிலத்தில் அரசு வேலைகள் வழங்கப் படும்.



## ஒடிசாவின் பழங்குடியினர் பற்றிய கலைக் களஞ்சியம்

- ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அவர்கள் ஒடிசாவின் பழங்குடியினர் பற்றிய கலைக் களஞ்சியத்தை வெளியிட்டார்.
- இது ஐந்து தொகுதிகளைக் கொண்டுள்ளது
- பழங்குடிச் சமூகங்கள் பற்றிய கலைக்களஞ்சியத்தைத் தொடங்கி அவர்களின் வரலாறு மற்றும் தனித்துவமான பாரம்பரியங்களை ஆவணப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக ஒடிசா மாறியுள்ளது.



- இந்த கலைக்களஞ்சியமானது பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCSTRTI) மற்றும் ஒடிசா மாநிலப் பழங்குடியினர் அருங்காட்சியகம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்டது.
- ஒடிஸா மாநிலத்தில் வேகமாக மாறி வரும் பழங்குடிச் சமூகங்களின் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாப்பதே இந்நூலின் நோக்கமாகும்.
- ஒடிசாவின் மொத்த மக்கள்தொகையில் 22.85 சதவிகிதம் பழங்குடியினர் என்பதோடு அம்மாநிலத்தில் 62 வகை பழங்குடியினர் வசிக்கின்றனர்.
- இந்த மாநிலமானது, இந்தியாவிலேயே பல்வேறு வகையான பழங்குடி சமூகங்களைக் கொண்டுள்ளது.

## சுர்ஜாபுரி மற்றும் பஜ்ஜிகா பேச்சுவழக்கு மொழிகள்

- பீகார் மாநில அரசானது, சுர்ஜாபுரி மற்றும் பஜ்ஜிகா பேச்சுவழக்குகளை மேம்படுத்தச் செய்வதற்காக கல்விக் கூடங்களை நிறுவுமாறு அந்த மாநிலக் கல்வித் துறையிடம் ஆணை ஒன்றைப் போட்டுள்ளது.
- சுர்ஜாபுரி என்பது இந்தி, உருது மற்றும் வங்காளம் ஆகியவற்றின் கலவையாகும்.
- இது 'கிஷாங்கஞ்சியா' என்ற மற்றொருப் பெயராலும் அழைக்கப் படுகிறது.
- மைதிலி மொழியைப் போலவே பஜ்ஜிகாவும் வடமேற்குப் பீகாரில் அதிகம் பேசப் படுகின்ற ஒரு மொழியாகும்.
- பஜ்ஜிகா மற்றும் சுர்ஜாபுரிக்கான இரண்டு புதிய கல்விக் கூடங்கள் ஏற்கனவே உள்ள எட்டு மொழிகளுக்கான மையங்களின் வரிசையில் ஒன்றாக நிறுவப்பட்டுள்ளன.
- பீகாரில் ஏற்கனவே எட்டு மொழிக் கல்விக் கூடங்கள் உள்ளன.




## பதுகம்மா திருவிழா

- பதுகம்மா எனப்படும் மாநில மலர்த் திருவிழாவானது தெலுங்கானா மாநிலத்தில் தொடங்கியது.
- 'தாய் தெய்வம் உயிர் பெற்று வந்தாள்' என்று பொருள்படும் இந்தப் பதுகம்மா திருவிழாவானது பருவமழைக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் கொண்டாடப்படுகிறது.
- இந்தத் திருவிழாவானது மஹாளய அமாவாசை நாளில் தொடங்கி, ஒன்பது நாட்கள் வரை கொண்டாடப் படுகிறது.

## அசாமிய அகராதி ஹேம்கோஷ்

- ஹேம்கோஷ் எனும் அசாமிய அகராதியின் ஒரு பிரெய்லி வடிவப் பிரதியைப் பிரதமர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.
- ஹெம்கோஷ் அகராதியானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட முதல் அசாமிய அகராதிகளில் ஒன்றாகும்.
- சமஸ்கிருத எழுத்துருக்களை அடிப்படையாகக் கொண்ட முற்காலத்திய அசாமிய சொற்பிறப்பியல் அகராதியானது அசாமிய அகராதி ஹெம்கோஷ் என்று அழைக்கப் படுகிறது.

## முழுவதும் டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற இந்தியாவின் முதல் பஞ்சாயத்து

- கேரளாவின் புல்லம்பாறை என்ற பஞ்சாயத்தானது, அதன் குடியிருப்பாளர்கள் மத்தியில் முழு டிஜிட்டல் கல்வியறிவைப் பெற்ற இந்தியாவின் முதல் கிராமப் பஞ்சாயத்து ஆக மாறியது.
- அம்மாநில அரசு 800 அரசு சேவைகளை இணைய வழியில் கிடைக்கச் செய்துள்ளது.
- மேலும், எண்ணிமக் கல்வியறிவு பெற்ற மக்கள் அவற்றை வெகு அதிகபட்சமாகப் பயன்படுத்திட வழி வகையும் செய்துள்ளது.

## பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில் உயர்வு

- தெலுங்கானா அரசானது, பட்டியலிடப்பட்டப் பழங்குடியினச் சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை 6 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- பட்டியலிடப்பட்டப் பழங்குடியின மக்களின் இடஒதுக்கீட்டை 10 சதவீதமாக உயர்த்தச் செய்வதற்கான ஒரு மசோதாவை தெலுங்கானா சட்டசபை 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறைவேற்றியது.
- அதே ஆண்டில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக இந்த மசோதா இந்திய அரசிடம் அனுப்பப்பட்டது.
- ஆனால் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும், இந்த மசோதா இன்னும் குடியரசுத் தலைவரின் முன் நிலுவையில் உள்ளது.

## 'புகழ் மன்றம்' விருது

- விரிவானச் சுற்றுலா மேம்பாட்டுப் பிரிவில் தேசிய விருதை வென்றதன் மூலம் கேரளா தொடர்ந்து நான்காவது முறையாக 'புகழ் மன்ற' விருதை வென்றுள்ளது.
- தேசியச் சுற்றுலா விருதை ஒரே பிரிவில் தொடர்ந்து மூன்று முறை பெற்ற மாநிலங்களுக்கு இந்தக் கௌரவ விருதானது வழங்கப்படுகிறது.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா விருதுகளில் நாட்டின் சிறந்த மாவட்டச் சுற்றுலா மேம்பாட்டுச் சபையாக கோழிக்கோடு நகரம் தேர்வு செய்யப் பட்டுள்ளது.

## மத்தியப் பிரதேசம் - தேசியச் சுற்றுலா விருதுகள்

- 2018-19 ஆம் ஆண்டு 'தேசியச் சுற்றுலா விருதுகளின்' கீழ் 8 வெவ்வேறு பிரிவுகளில் மத்தியப் பிரதேசம் விருதுகளை பெற்றது.
- நாட்டின் தூய்மையான நகரமான இந்தூர் - 'இந்தியாவில் சுற்றுலாத் தலத்தின் முறையான மேலாண்மை' (வகை A) விருதை வென்றது.
- 'ஸ்வச் சுற்றுலாத் தலம் - மேற்கு மண்டலம்' என்ற பிரிவில் உஜ்ஜயின் மாநகராட்சிக் கழகம் விருதினைப் பெற்றது.
- போஜ்பூரில் உள்ள ஷிவ் மந்திர் - 'சிறந்த நோக்கம் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையில் அமைந்த நினைவுச் சின்னம்' என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளது.
- இந்தூரில் உள்ள தேவி அஹில்யா பாய் விமான நிலையமானது, 'இந்தியாவின் மற்றப் பகுதிகளை ஒப்பிடச் செய்கையில் - 'சிறந்த விமான நிலையம்' தொடர்ந்து மூன்றாவது முறையாக விருதினை வென்றுள்ளது.
- மால்வாவின் சுவரோவியமானது, ' இந்தி மொழி வெளியீட்டில் சிறந்து விளங்குதல்' என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளது.
- போபால் சிற்றேடு - சிறந்தச் சுற்றுலா மேம்பாட்டு விளம்பரப் பொருள் என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளது.
- பென்ச் புலிகள் காப்பகத்தின் வழிகாட்டியான சுபாஷ் பாவ்ரே - 'சிறந்த வனவிலங்கு வழிகாட்டி, மேற்கு - மத்திய மண்டலம்' என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளார்.
- 'கோட்யார்ட் ஹவுஸ்', மாண்ட்லா மாவட்டத்தில் உள்ள கன்ஹா தேசியப் பூங்காவில் உள்ள பட்பரா கிராமத்தின் தங்குமிட வசதி - மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட வியத்தகு இந்தியா இரவு நேர விடுதி மற்றும் காலை உணவு நிறுவனங்கள்' என்ற பிரிவில் விருதினை வென்றுள்ளது.

## சர்வேக்சன் கிராமின் 2022

- 2022 ஆம் ஆண்டு ஸ்வச் சர்வேக்சன் கிராமின் மதிப்பீட்டில் (SSG), பெரிய மாநிலங்கள் பிரிவின் கீழ் தெலுங்கானா முதல் பரிசை வென்றது.
- இதில் ஹரியானா இரண்டாவது இடத்திலும், தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும் தேர்வு செய்யப் பட்டன.
- பிவானி (ஹரியானா), ஜக்தியால் (தெலுங்கானா) மற்றும் நிஜாமாபாத் (தெலுங்கானா) ஆகியன இந்தியாவின் மூன்று முன்னணி மாவட்டங்கள் ஆகும்.

## பஹல்காமில் பறவை திருவிழா

- ஜம்மு மற்றும் காஷ்மீர் பஹல்காமில் 2022 ஆம் ஆண்டிற்கான பறவைத் திருவிழா என்ற விழாவினைத் தொடங்கியது.
- இந்த ஒன்றியப் பிரதேசத்தில் நடைபெறும் முதல் பறவைத் திருவிழா இதுவாகும்.
- சுற்றுலாத் துறை மற்றும் சரணாலய அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் இவ்விழா நடத்தப் படும்.

## ஜம்மு & காஷ்மீர் - பஹாரி சமூகம்

- ஜம்மு மற்றும் காஷ்மீரில் வசிக்கும் பஹாரி என்ற பழங்குடிச் சமூகத்திற்குப் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்து வழங்கப்பட உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 370 மற்றும் 35A ஆகிய சட்டப் பிரிவுகள் ரத்து செய்யப் பட்டதனால் ஜம்மு மற்றும் காஷ்மீரின் விளிம்பு நிலைப் பிரிவினருக்கு இட ஒதுக்கீடு வழங்க இது வழி வகுத்தது.
- ஜம்மு & காஷ்மீரில் உள்ள அரசு வேலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் ஒதுக்கீடானது 7% ஆக உள்ளது.
- குஜ்ஜார் மற்றும் பேக்கர்வால் சமூகத்தினர் 1991 ஆம் ஆண்டு முதல் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினருக்கான சலுகைகளைப் பெற்று வருகின்றனர்.
- பஹாரிகளுக்கு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவில் 4 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- மத்திய அரசானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நீதிபதி சர்மா ஆணையத்தினை நியமித்தது.

## பிலாஸ்பூர் AIIMS

- இமாச்சலப் பிரதேசத்தின் பிலாஸ்பூரில் அமைக்கப்பட்டுள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தை (AIIMS) பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இது மத்திய அரசின் திட்டமான பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்சா யோஜனாவின் கீழ் நிறுவப் பட்டுள்ளது.

## பாரத ராஷ்டிர சமிதி

- தெலுங்கானா ராஷ்டிர சமிதியானது தனது பெயரைப் பாரத ராஷ்டிர சமிதி என மாற்றுவதற்கான ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியது.
- தெலங்கானாவிற்கு தனி மாநிலம் கோரி 21 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அமைப்பு உருவாக்கப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் இந்த அமைப்பு அதன் இலக்கை அடைந்தது.

## சத்தீஸ்கர் ஒலிம்பிக்

- சத்தீஸ்கர் மாநிலத்தின் ஒலிம்பிக் போட்டியை அம்மாநில முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இது கிராம அளவிலான விளையாட்டுகளுக்கு ஒரு மைய அரங்கை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதால், இதன் மூலம் கலாச்சாரத்தின் பெருமையை இது ஊக்குவிக்கிறது.
- மேலும், இது பழங்காலப் பாரம்பரிய விளையாட்டுகளான 'லாங்டி', 'பௌரா', 'பாடி' (கஞ்சா) மற்றும் 'பித்துல்' ஆகியவற்றைப் புதுப்பிக்கிறது.

- 2022-23 ஆம் ஆண்டு சத்தீஸ்கர் ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தம் 14 வகையான பாரம்பரிய விளையாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன.




## மிக அதிக எண்ணிக்கையிலான குழந்தை திருமணம் பதிவு

- மத்திய உள்துறை அமைச்சகமானது சமீபத்தில் ஒரு மக்கள்தொகை குறித்த ஒரு கணக்கெடுப்பினை மேற்கொண்டது.
- இந்தத் தரவுகளின்படி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் தான் குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட சிறுமிகளுக்கு அதிக எண்ணிக்கையில் திருமணம் செய்து வைக்கப் படுவதாக பதிவாகியுள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில், 18 வயதிற்குள் திருமணம் செய்து வைக்கப்படும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையானது அதிகபட்சமாக 5.8 சதவீதமாக உள்ளது.
- 18 வயதை அடையும் முன் திருமணம் செய்து வைக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை தேசிய அளவில் 1.9% ஆகவும், கேரளாவில் 0.0 % முதல் ஜார்க்கண்டில் 5.8 % வரையிலும் பதிவாகியுள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில் பதிவாகும் குழந்தை திருமணங்கள் கிராமப்புறங்களில் 7.3 சதவீதமும், நகர்ப்புறங்களில் மூன்று சதவீதமும் பதிவாகியுள்ளன.
- ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய இரண்டு மாநிலங்களில் மட்டுமே பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 21 வயதை அடைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப் படுகின்றனர்.
- மேற்கு வங்காளத்தில் 54.9 சதவீதப் பெண்கள் 21 வயதை அடைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்படுகின்ற நிலையில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் இது 54.6 சதவீதமாக பதிவாகியுள்ளது.
- இதன் தேசிய சராசரி அளவு 29.5 சதவீதம் ஆகும்.

## கர்நாடக ஹிஜாப் தடை மீதான தீர்ப்பு

- கர்நாடகாவில் உள்ள கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிவதற்கு விதிக்கப்பட்ட தடை குறித்து உச்ச நீதிமன்றம் கருத்தொற்றுமை இல்லாத ஒரு தீர்ப்பினை வழங்கி உள்ளது.
- நீதிபதி ஹேமந்த் குப்தா பிப்ரவரி 05 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட கர்நாடக அரசின் தடை உத்தரவினை உறுதி செய்தார்.

- இவர் அரசு நிதியில் இருந்து பராமரிக்கப்படும் மதச்சார்பற்றப் பள்ளிகளுக்கு மத நம்பிக்கையின் வெளிப்படையான சின்னங்களைக் கொண்டிருக்க முடியாது என்று கூறியுள்ளார்.
- நீதிபதி சுதன்ஷு துலியா தனது மாறுபட்ட கருத்தில், மதச்சார்பின்மை என்பது "பன்முகத் தன்மைக்கான" சகிப்புத் தன்மையைக் குறிக்கிறது என்று கூறினார்.
- பள்ளிக்கு ஹிஜாப் அணிவது அல்லது அணியாதது ஆகிய இரண்டும் "அவரவர் விருப்பம்" ஆகும் என்று அவர் கூறியுள்ளார்.




## உலகப் பசுமை நகர விருது 2022

- தெலுங்கானாவின் ஹைதராபாத் நகரமானது, ஒட்டு மொத்த ‘உலகப் பசுமை நகர விருது 2022’ மற்றும் ‘பொருளாதார மீட்சி மற்றும் உள்ளார்ந்த வளரச்சிக்கான உயிர்ப்புள்ள நகரம்' என்ற விருதை வென்றது.

- இந்தப் பிரிவினைச் சார்ந்த விருதை மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த 'உலகப் பசுமை நகரம் 2022' என்ற அதாவது ஆறு பிரிவுகளிலும் சிறந்த நகரம் என்ற விருதையும் வென்றது.
- சர்வதேச மேடையில் விருதுகளை வென்ற ஒரே இந்திய நகரமாகவும் ஹைதராபாத் மாறியது.




## சிறந்த ஆளுமை கொண்ட மாநிலம்

- 7வது பொது விவகாரக் குறியீடானது (2022), பெங்களூருவைச் சேர்ந்த இலாப நோக்கற்ற சிந்தனைக் குழுவான பொது விவகார மைய அமைப்பினால் தயாரிக்கப் பட்டது.
- இந்தியாவில் உள்ள 18 பெரிய மாநிலங்களில் சிறந்த ஆளுமை கொண்ட மாநிலமாக ஹரியானா உருவெடுத்துள்ளது.
- இந்தியாவிலேயே சிறிய மாநிலங்களில் சிறந்த ஆளுமை கொண்ட மாநிலமாக சிக்கிம் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது
- சமூக நீதி, பொருளாதார நீதி மற்றும் அரசியல் நீதி போன்ற கருத்துருக்களில் ஹரியானா முன்னணியில் உள்ளது.
- மேலும் தமிழ்நாடு, கேரளா, சத்தீஸ்கர், பஞ்சாப் மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்களின் மத்தியில் ஹரியானா முதலிடத்தில் உள்ளது.
- தொழிலாளர் உற்பத்தித் திறன், கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்தல், மேம்பாட்டிற்கான பொதுச் செலவினங்கள், சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின் பரவல் மற்றும் வேலை வாய்ப்புகள் போன்ற குறிகாட்டிகளில் பொருளாதார நீதி மதிப்பிடப்பட்டது.

## அயோத்தி தீப உத்ஸவம்

- உத்தரப் பிரதேசத்தில் 6வது 'தீப உத்சவ' கொண்டாட்டம் நடைபெற்றது.
- அயோத்தியா நகரம் 15.76 லட்சத்திற்கும் அதிகமான மண் விளக்குகளை ஏற்றி 'பெரிய அளவில் எண்ணெய் விளக்குகள் ஏற்றப்பட்ட நிகழ்வு' என்ற கின்னஸ் உலக சாதனையைப் படைத்தது.
- சோட்டி தீபாவளியை முன்னிட்டு, மதிப்பிற்குரிய சரயு நதிக்கரையில் உள்ள ராம் கி பைடியில் இந்தப் பிரம்மாண்டமான கொண்டாட்டம் நடைபெற்றது.

## நேர்மைக் கடைகள்

- கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள 15 பள்ளிகளில் நேர்மைக் கடைகள் (ஆளில்லாக் கடைகள்) திறக்கப் பட்டுள்ளன.
- மாணவர்களுக்கு உண்மை மற்றும் ஒருமைப்பாடு குறித்த மதிப்புமிக்க பாடங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மாணவர் காவல் படைப்பிரிவு (SPC) திட்டத்தின் ஒரு பகுதியாக நேர்மைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.
- இந்த நேர்மையானக் கடைகளில் கட்டணப் பிரிவுகளில் விற்பனையாளர் நிற்க மாட்டார்கள் என்பதால் மாணவர்கள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கானப் பணத்தைக் கடையில் வைக்கப்பட்டுள்ள கட்டண வசூல் பெட்டியில் போடலாம்.

## காத்தி பிஹு

- அசாமிய நாட்காட்டியின் காத்தி மாதத்தின் முதல் நாளில் காத்தி பிஹு அறுவடைத் திருவிழா கொண்டாடப் படுகிறது.
- இந்தத் திருவிழா கொங்கலி பிஹு என்றும் அழைக்கப்படுகிறது.
- அசாம் மாநிலம் முழுவதும் காத்தி பிஹு திருவிழா மிகவும் ஆடம்பரமாக கொண்டாடப் பட்டாலும், ஒவ்வொரு பழங்குடியினருக்கும் அவரவர்களுக்கெனச் சொந்த வழக்கம் மற்றும் சடங்குகள் உள்ளன.

## இந்தியாவின் வனப்பகுதிகளுக்கு வெளியே மரங்கள் வளர்ப்பு திட்டம்

- அசாம் அரசு மற்றும் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை (USAID) ஆகியவை இணைந்து இந்தியாவின் வனப்பகுதிகளுக்கு வெளியே மரங்கள் வளர்ப்பு திட்டத்தினை (TOFI) தொடங்கியுள்ளன.
- இது வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பாரம்பரிய வனப்பகுதிகளுக்கு வெளியே மரங்களின் பரவலை விரிவுபடுத்துகிறது.
- சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளுடன் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை ஒருங்கிணைப்பதற்காக நவீன முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மாநிலத்தில் வேளாண் காடு வளர்ப்பின் பாரம்பரிய நடைமுறையை மேம்படுத்துவதற்கும் மதிப்பிடுவதற்கும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அறிமுகம் – பஞ்சாப்

- பஞ்சாப் அரசு தனது ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர ஒரு கொள்கை ரீதியான முடிவை எடுத்துள்ளது.
- இதன் கீழ் ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தில் சேர வாய்ப்பு அளிக்கப் படும்.
- முன்னர் இத்திட்டமானது 2004 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

## வாயு அம்ரித்’ திட்டம்

- இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பானது இந்தியன் எண்ணெய்க் கழகம் என்ற நிறுவனத்துடன் இணைந்து பஞ்சாபின் சங்ரூரில் ‘வாயு அம்ரித்’ என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- 'வாயு அம்ரித்' திட்டம் என்பது பயிர்த் தாளடி மேலாண்மை முன்னெடுப்பாகும்.
- இந்திய தொழில்துறை கூட்டமைப்பானது ஏற்கனவே பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்காக வேண்டி பயிர்த் தாளடிகளை எரிப்பதைக் குறைப்பதற்காக பயிர்த்தாளடி மேலாண்மை திட்டத்தை மேற்கொண்டு வந்துள்ளது.

## சிறைச்சாலை லோக் அதாலத் முன்னெடுப்பு

- சத்தீஸ்கர் மாநில சட்ட சேவைகள் ஆணையம் (CGSLSA) சிறைச்சாலை லோக் அதாலத் மன்றங்களை நடத்துவதற்கான முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ஜாமீன் வழங்கப்பட்ட போதிலும் சிறையிலேயே வாடும் கைதிகள் அல்லது கொடூரமான குற்றங்களைச் சாராத குற்றங்களுக்காக முதல் முறையாக சிறையில் அடைக்கப்பட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படுவதை எளிதாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அக்டோபர் 15 ஆம் தேதியன்று மாநிலத்தில் உள்ள 33 சிறைகளிலும் முதல் முறையாக சிறைச்சாலை லோக் அதாலத் நடத்தப்பட்டு, இதில் 448 கைதிகள் விடுவிக்கப் பட்டனர்.

## சௌர்யா திவாஸ்

- பாதுகாப்பு அமைச்சகமானது, ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரில், ‘சௌர்யா திவாஸ்’ கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.
- இது 1947 ஆம் ஆண்டில் புட்காம் விமான நிலையத்தில் இந்திய இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட விமானம் சார்ந்த நடவடிக்கையின் 75வது ஆண்டு நிறைவினை நினைவு கூருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதியன்று, ஜம்மு மற்றும் காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் அரசின் ஆதரவு பெற்ற பழங்குடி படையெடுப்பாளர்களை வெளியேற்றச் செய்வதற்காக இந்திய இராணுவமானது இந்திய விமானப் படை மூலம் விமானத்தில் ஏற்றப்பட்டு, புட்காம் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 52வது தாதாசாகேப் பால்கே விருது

- புகழ்பெற்ற பழம்பெரும் இந்தி சினிமா நடிகை ஆஷா பரேக் அவர்களுக்கு 2020 ஆம் ஆண்டிற்கான தாதாசாகேப் பால்கே விருது வழங்கப்பட்டுள்ளது.
- இதை விருதினைப் பெறும் 52வது நபர் இவர் ஆவார்.
- இவர் 95க்கும் மேற்பட்ட படங்களில் பணியாற்றியுள்ளார்.
- மேலும், 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் மத்தியத் திரைப்படச் சான்றிதழ் வழங்கீட்டு வாரியத்தின் தலைவராகவும் பணியுள்ளார்.
- திரைத்துறையில் அவர் ஆற்றியச் சேவைகளுக்காக, இந்திய அரசானது இவருக்கு 1992 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதினை வழங்கிக் கௌரவித்தது.

## இத்தாலியின் முதல் பெண் பிரதமர்

- இத்தாலியின் முதல் பெண் பிரதமராக ஜியோர்ஜியா மெலோனி பதவியேற்க உள்ளார்.
- 21 வயதில், அவர் தான் பங்கு பெற்ற முதல் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றார்.
- 31 வயதில் இத்தாலியின் இளம் அமைச்சராகவும் இவர் விளங்கினார்.



## சர்வதேச விண்வெளி நிலையத்தின் தலைமை

- சமந்தா கிறிஸ்டோஃபோரெட்டி என்பவர் சர்வதேச விண்வெளி நிலையத்தின் புதிய தலைமை விண்வெளி வீராங்கனையாகப் பொறுப்பேற்ற முதல் ஐரோப்பியப் பெண் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- விண்வெளி நிலையத்தின் குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகளை மேற்பார்வையிடுவது இவருடையப் பொறுப்பாகும்.
- இவர் இத்தாலிய விமானப் படையின் முன்னாள் போர் விமானி ஆவார்.
- 2000 ஆம் ஆண்டில் இந்தப் பொறுப்பு உருவாக்கப்பட்டது முதல் இந்தப் பொறுப்பினை வகிக்க உள்ள முதலாவது அமெரிக்கர் அல்லாத பெண் மற்றும் ஐந்தாவது பெண்மணி சமந்தா ஆவார்.

- 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 199 நாட்கள் சுற்றுப்பாதையில் பயணித்தப் பிறகு, அதிக நேரம் விண்வெளியில் தங்கியப் பெண்மணி என்ற பெருமையினையும் இவர் பெற்றுள்ளார்.




## இந்திய அரசின் புதிய தலைமை வழக்கறிஞர்

- இந்திய அரசின் புதிய தலைமை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் R.வெங்கடரமணி நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் அக்டோபர் 01 ஆம் தேதி முதல் மூன்று வருடக் காலத்திற்கு இந்தப் பதவியில் நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய அரசின் புதிய தலைமை வழக்கறிஞர் இந்திய அரசாங்கத்தின் தலைமை சட்ட ஆலோசகர் மற்றும் நீதிமன்றங்களில் அரசின் தலைமை வழக்கறிஞர் ஆவார்.
- அரசியலமைப்பின் 76வது சட்டப் பிரிவின் கீழ் மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின் படி இந்திய குடியரசுத் தலைவரால் இவர் நியமிக்கப்படுகிறார்.
- குடியரசுத் தலைவரின் விருப்பத்தின் பேரில் இவர் இப்பதவியினை வகிக்கிறார்.

## எட்வர்ட் ஸ்னோடனுக்கு ரஷ்யக் குடியுரிமை

- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அவர்கள், முன்னாள் அமெரிக்க உளவுத்துறை ஒப்பந்த தாரர் எட்வர்ட் ஸ்னோடனுக்கு ரஷ்யக் குடியுரிமையை வழங்கியுள்ளார்.
- தேசியப் பாதுகாப்பு முகமையின் (NSA) இரகசியக் கண்காணிப்பு நடவடிக்கைகளின் மதிப்பீட்டினை அவர் வெளிப்படுத்தினார்.
- உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் குற்றவியல் விசாரணையை எதிர்கொள்ள அவர் அமெரிக்காவிற்குத் திரும்ப வேண்டும் என்று பல ஆண்டுகளாக அவரை அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.



## ஆயுஷ்மான் உத்கிரிஷ்தா விருது 2022

- ❖ ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி - ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) திட்டத்தினைச் செயல்படுத்துவதில் சிறந்து விளங்கும் மாநிலங்களுக்கு இந்த விருது வழங்கப் பட்டது.
- ❖ சுகாதாரச் சேவைப் பதிவேட்டில் பல சுகாதார வசதிகளைச் சேர்த்ததற்காக உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு 2022 ஆம் ஆண்டிற்கான ஆயுஷ்மான் உத்கிரிஷ்தா விருதானது வழங்கப் பட்டுள்ளது.

***மற்ற விருதுகள்***

- ❖ சிறப்பாகச் செயலாற்றும் மாநிலம்/ஒன்றியப் பிரதேசம்: ஆந்திரப் பிரதேசம்
- ❖ சிறப்பாகச் செயலாற்றும் மாவட்டம்: ஆந்திரப் பிரதேசத்தின் பார்வதிபுரம் மான்யம்
- ❖ சிறப்பாகச் செயலாற்றும் அரசு சுகாதார மையம்: கர்நாடகாவில் உள்ள தார்வாட் மாவட்ட மருத்துவமனை
- ❖ சிறப்பாகச் செயலாற்றும் மாநிலங்கள்: கேரளா, மேகாலயா, குஜராத், மணிப்பூர், ஜார்க்கண்ட், உத்தரகாண்ட், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம்
- ❖ சிறப்பாகச் செயலாற்றும் ஒன்றியப் பிரதேசங்கள்: சண்டிகர் மற்றும் ஜம்மு & காஷ்மீர்
- ❖ ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குடன் இணைக்கப்பட்ட அதிக எண்ணிக்கையில் சுகாதார ஆவணங்களைக் கொண்ட சிறந்த அரசாங்க ஒருங்கிணைப்பாளர்: தேசியத் தகவல் மையம்
- ❖ ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குடன் இணைக்கப்பட்ட அதிக எண்ணிக்கையில் சுகாதார ஆவணங்களைக் கொண்ட சிறந்த தனியார் ஒருங்கிணைப்பாளர்: ஈகா கேர்
- ❖ AB PMJAY திட்டமானது 018 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- ❖ ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு (ABHA) என்பது தேசிய சுகாதார ஆணையத்தால் (NHA) தொடங்கப்பட்ட ஒரு தனிப்பட்ட சுகாதார அடையாளக் குறியீடு ஆகும்.
- ❖ இது ஆதார் அட்டை அல்லது கைபேசி எண்ணைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 14 இலக்க அடையாள எண்ணைப் பயன்படுத்துகிறது.
- ❖ இது மருத்துவமனைகள், தனி மருத்துவமனைகள், காப்பீட்டு வழங்குநர்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்டப் பங்குதாரர்களுடன் பயனர்கள் தங்கள் உடல்நலம் சார்ந்தப் பதிவுகளை எண்ணிம முறையில் பகிர்ந்து கொள்ள வழிவகை செய்கிறது.




## 'சேஞ்ச்மேக்கர்' விருது

- இந்தியாவைச் சேர்ந்த பெண்கள் உரிமை ஆர்வலரான சிருஷ்டி பக்சி 'சேஞ்ச்மேக்கர்' (புதுமையான சமூக நடவடிக்கையாளர்) விருதைப் பெற்றுள்ளார்.
- பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சமத்துவமின்மை பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக சிருஷ்டி பக்சி மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இவர் கிராஸ்போ மைல்ஸ் இயக்கத்தின் நிறுவனர் ஆவார்.

## சுதந்திரத்தின் தங்க எழுதுகோல் விருது

- கேசட்டா விபோர்க்ஸ்சா எனப்படும் போலந்து செய்தித்தாள் நிறுவனத்திற்கு உலகச் செய்தி வெளியீட்டாளர் சங்கம் என்ற சங்கத்தினால் வழங்கப்படும் சுதந்திரத்தின் தங்க எழுதுகோல் விருதானது வழங்கப்பட்டது.
- தற்போது ஸ்பெயினின் சராகோசா நகரில் நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டு உலக செய்தி ஊடக மாநாட்டின் போது இந்த விருதானது அறிவிக்கப்பட்டது.
- சுதந்திரத்தின் தங்க எழுதுகோல் விருது என்பது WAN-IFRA அமைப்பின் வருடாந்திர விருதாகும்.
- பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் தனி நபர்கள் அல்லது நிறுவனங்களை இது அங்கீகரிக்கிறது.

## ஜெயந்தி பட்நாயக்

- நான்கு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும், மறைந்த ஒடிசா முதல்வர் J.B.பட்நாயக் அவர்களின் மனைவியுமான ஜெயந்தி பட்நாயக் சமீபத்தில் காலமானார்.
- இவர் 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி 03 ஆம் தேதி முதல் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி வரை தேசிய மகளிர் ஆணையத்தின் முதல் தலைவராகப் பணியாற்றினார்.

## 32வது பிஹாரி புரஸ்கார்

- எழுத்தாளர் மாதவ் ஹடாவிற்கு 32வது பிஹாரி புரஸ்கார் விருது வழங்கப்பட உள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டில் அவர் எழுதிய இலக்கிய விமர்சன நூலான 'பச்ராங் சோலா பஹார் சாகி ரி' என்ற நூலிற்காக வழங்கப்படுகிறது.
- இந்நூல் இடைக்காலப் பக்தி இயக்க கவிஞர் மீராவின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது.
- இவர் சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினராகவும் மற்றும் இந்தி ஆலோசனைக் குழுவின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

## சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா ராமானுஜன் பரிசு யுன்கிங் டாங்க் என்பவருக்கு வழங்கப்பட உள்ளது.
- யுன்கிங் டாங் அமெரிக்காவின் பெர்க்லி என்னுமிடத்தில் அமைந்த கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் உதவிப் பேராசிரியராக பணியாற்றுகிறார்.
- இந்த விருதானது 2005 ஆம் ஆண்டில் சண்முகா கலை, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அகாடமியினால் (சாஸ்த்ரா) நிறுவப்பட்டது.
- கணிதத் துறையில் சிறந்தப் பங்களிப்பினை ஆற்றிய 32 வயது மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய நபர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.

## மருத்துவத்துக்கான நோபல் பரிசு




- ஸ்வான்டே பாபோ என்பவருக்கு 2022 ஆம் ஆண்டிற்கான, மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- நவீன கால மனிதர்கள், அழிந்து போன அதன் மூதாதையரான நியாண்டர்தால்கள் மற்றும் டெனிசோவன்களுடன் டிஎன்ஏ தொடர்பைக் கொண்டுள்ளனர் என்பதை நிரூபித்த அவரது மகத்தானக் கண்டுபிடிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.

- சுவீடன் நாட்டைச் சேர்ந்த இந்த அறிவியலாளர் நமது நோயெதிர்ப்பு அமைப்பு மற்றும் அழிந்து போன நமது மூதாதையர்களுடன் ஒப்பிடும் போது நவீன கால மனித அமைப்பினை எந்த அமைப்பு தனித்துவமாக்குகிறது என்பது பற்றிய முக்கியத் தகவல்களை வழங்கினார்.
- ஸ்வான்டே பாபோ 1982 ஆம் ஆண்டில் மருத்துவத்திற்கான நோபல் பரிசை வென்ற சுனே பெர்க்ஸ்ட்ரோமின் மகன் ஆவார்.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு

- 2022 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு அலைன் ஆஸ்பெக்ட், ஜான் F கிளாசர் மற்றும் அன்டன் ஜீலிங்கர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- இது "சிக்கலான ஃபோட்டான்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள், பெல் தேற்றத்தின் ஏற்றத்தாழ்வு விதிமுறைகள் மீறப்படுவதை நிரூபித்தல் மற்றும் குவாண்டம் தகவல் அறிவியலின் முன்னோடியாக திகழ்தல்" ஆகியவற்றிற்காக வேண்டி வழங்கப் படுகிறது.
- இரண்டு துகள்கள் பிரிக்கப்பட்டாலும் அவை ஒற்றை அலகு போல செயல்படுகின்ற, சிக்கலான குவாண்டம் நிலைகளைப் பயன்படுத்திச் சோதனைகளை அவர்கள் மேற் கொண்டுள்ளனர்.




## வேதியியலுக்கான நோபல் பரிசு

- வேதியியலுக்கான நோபல் பரிசு கரோலின் பெர்டோஸி, மார்டன் மெல்டல் மற்றும் பேரி ஷார்ப்லெஸ் ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.
- இது க்ளிக் கெமிஸ்ட்ரி எனப்படுகின்ற மூலக்கூறுகளை ஒன்றாக இணைக்கும் செயல் முறைக்காக வழங்கப்படுகிறது.
- "கிளிக் கெமிஸ்ட்ரி" என்பது நமது உயிரணுக்களில் உள்ள மூலக்கூறுகளை ஒன்றாக இணைப்பதாகும்.

- இவர்களின் இந்த ஆய்வுப் பணியானது, செல்களை ஆராய்வதற்கும் உயிரியல் செயல் முறைகளைக் கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது மற்றும் புற்றுநோய்ச் சிகிச்சை மருந்துகளில் பயன்படுத்தப்படலாம்.
- இதற்கு முன்பு 2001 ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற ஷார்ப்லெஸ் தற்போது இரு முறை விருதைப் பெறும் ஐந்தாவது நபர் ஆவார்.




## இலக்கியத்திற்கான நோபல் பரிசு

- பிரெஞ்சு எழுத்தாளர் அன்னி எர்னாக்ஸ் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்று உள்ளார்.
- இலக்கியப் பரிசை வென்ற முதல் பிரெஞ்சுப் பெண்மணி எர்னாக்ஸ் ஆவார்.
- "பாலினம், மொழி மற்றும் வர்க்கம் தொடர்பான வலுவான வேறுபாடுகளால் நிறைந்த வாழ்க்கையினை ஆய்வு செய்யும்" எர்னாக்ஸ் தனது சுயசரிதை சார்ந்த உரைநடைப் படைப்புகளுக்குப் புகழ் பெற்றவர் ஆவார்.



## அமைதிக்கான நோபல் பரிசு

- 2022 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு பின்வரும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - பெலாரஸைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர் அலெஸ் பியாலியாட்ஸ்கி
    - ரஷ்ய மனித உரிமைகள் அமைப்பு – மெமோரியல் மற்றும்
    - உக்ரேனிய மனித உரிமைகள் அமைப்பு சிவில் உரிமைகளுக்கான மையம்




## நான்சென் விருது

- ஜெர்மனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் சமீபத்தில் நான்சென் அகதி விருதைப் பெற்றார்.
- 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மெர்க்கல் அதிபராக இருந்த போது, ஜெர்மனி 1.2 மில்லியனுக்கும் அதிகமான அகதிகளையும் புகலிடக் கோரிக்கையாளர்களையும் குறிப்பாக சிரியாவிலிருந்து வரவேற்றது.
- நான்சென் விருதுக் குழு நான்குப் பிராந்திய வெற்றியாளர்களையும் கௌரவித்தது.
- இதன் இதர வெற்றியாளர்கள்
    - அமெரிக்காவின் கோஸ்டாரிகாவில் உள்ள அகதிகள் ஆதரவு கோக்கோ கூட்டுறவு அமைப்பு
    - மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொரீஷியாவில் தன்னார்வ அகதிகள் தீயணைப்பு குழு
    - ஆசியா மற்றும் பசிபிக் மற்றும் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் மனிதாபிமான அமைப்பான மெய்க்ஸி மியான்மர்.
    - வட ஆப்பிரிக்கா மற்றும் மத்தியக் கிழக்கில் உள்ள யாசிடி பெண்கள் மற்றும் பெண்களுக்கு மருத்துவ மற்றும் உளவியல் உதவிகளை வழங்கும் ஈராக்கிய மகப்பேறு மருத்துவர்.
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையரால் ஒவ்வொரு வருடமும் நான்சென் விருது வழங்கப்படுகிறது.

## நோபல் பரிசு – பொருளாதாரம்

- பென் S. பெர்னான்கே, டக்ளஸ் W. டயமண்ட் மற்றும் பிலிப் H. டிப்விக் ஆகியோர் வங்கிகள் மற்றும் நிதி நெருக்கடிகள் குறித்த ஆராய்ச்சிக்காக 2022 ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.
- இவர்களின் இந்த நவீன வங்கியியல் ஆராய்ச்சி என்பது, வங்கிகள் ஏன் உள்ளன, நெருக்கடிகளில் அவற்றை எவ்வாறு குறைவான தாக்கத்துடன் மீளச் செய்வது மற்றும் வங்கியின் வீழ்ச்சிகள் எவ்வாறு நிதி நெருக்கடிகளை அதிகப்படுத்தச் செய்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது.
- 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் பென் பெர்னான்கே, டக்ளஸ் டயமண்ட் மற்றும் பிலிப் டைப்விக் ஆகியோரால் இந்த ஆராய்ச்சியின் தொடக்கமானது நிறுவப்பட்டது.
- நிதிச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவதிலும் நிதி நெருக்கடிகளைக் கையாள்வதிலும் அவர்களின் பகுப்பாய்வுகள் மிகப்பெரிய அளவில் நடைமுறை சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவை.




## சுப்பு ஆறுமுகம்

- தென் மாவட்டங்களின் நாட்டுப்புறக் கலையான வில்லுப்பாட்டை தமிழகம் முழுவதும் பிரபலப்படுத்திய கவிஞர் சுப்பு ஆறுமுகம் சமீபத்தில் காலமானார்.
- சுடலை மாடன், எசக்கி அம்மன், முத்தாரம்மன் போன்ற நாட்டுப்புறத் தெய்வங்களின் கோவில்களில் கோடைக் காலத்தில் நடைபெறும் திருவிழாவின் போது வில்லுப்பாட்டு நடத்தப் படுகிறது.
- சுப்பு ஆறுமுகம் பாடும் முறைகள், நூல்கள் மற்றும் சமூகக் கருப்பொருள்களுடன் கூடிய கதைகளை இதில் அறிமுகப்படுத்தினார்.
- முக்குடப்பள்ளு, விறலிவிடு தூது போன்ற சிறு இலக்கியப் படைப்புகளில் வில்லுப் பாட்டு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## முலாயம் சிங் யாதவ்

- சமாஜ்வாதி கட்சியின் நிறுவனர் முலாயம் சிங் யாதவ் சமீபத்தில் காலமானார்.
- இவர் 10 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், ஏழு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.
- இவர் பாதுகாப்பு அமைச்சராகவும், மூன்று முறை உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வராகவும் பணியாற்றினார்.

## விண்வெளிக்கு சென்ற முதல் அமெரிக்கப் பூர்வீக பெண்மணி

- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது அதன் குழுவினர் அடங்கிய விண்கலத்தினை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பியது.
- இந்தக் குழுவில் ஒரு ரஷ்ய விண்வெளி வீரர், இரண்டு அமெரிக்கர்கள் மற்றும் ஒரு ஜப்பானிய விண்வெளி வீரர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
- கடந்த இருபதாண்டுகளில் அமெரிக்க மண்ணில் இருந்து ஒரு ரஷ்ய நபருடன் விண்ணில் ஏவப்பட்ட முதல் விண்கலம் இதுவாகும்.
- இந்த பயணக் குழுவின் தலைவர் நிக்கோல் மான் ஆவார்.
- இவர் விண்வெளிக்குச் செல்லும் முதல் அமெரிக்கப் பூர்வீகப் பெண்மணி ஆவார்.

## பாராளுமன்ற அமைப்புகளுக்கு இடையிலான ஒன்றியத்தின் உறுப்பினர்

- 145வது பாராளுமன்ற அமைப்புகளுக்கு இடையிலான ஒன்றியத்தின் பேரவை தற்போது ருவாண்டாவின் கிகாலி நகரில் நடைபெற்று வருகிறது.
- ஒடிசாவின் மக்களவை உறுப்பினர் அபராஜிதா சாரங்கி, இந்தப் பாராளுமன்ற அமைப்புகளுக்கு இடையிலான ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கடந்த 20 ஆண்டுகளில் ஒரு சர்வதேசக் குழுவில் இந்தியா தனது பிரதிநிதியைக் கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.
- 1887 ஆம் ஆண்டில் பாராளுமன்ற அமைப்புகளுக்கு இடைப்பட்ட ஒன்றியமானது நிறுவப் பட்டது.
- தேசியப் பாராளுமன்றங்களின் இந்த உலகளாவிய அமைப்பு மொத்தம் 178 தேசிய உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

## மாற்று மருத்துவத்திற்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் விருது

- அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் வஜாஹத் ஹுசைன் பாரம்பரியம், பங்களிப்பு மற்றும் மாற்று மருத்துவத்துக்கான சர்வதேச விருதினை வென்றுள்ளார்.
- சயீத் தொண்டு மற்றும் மனிதநேய அறக்கட்டளையின் இரண்டாவது ஷேக் சயீத் சர்வதேச விருதினை அவர் பெற்றுள்ளார்.

- ஏற்கனவே ஹுசைனுக்கு இரண்டு முறை வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒருமுறை பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் ஆயுஷ் அமைச்சகம் ஆகியவை இணைந்தும் மற்றும் பின்னர் இந்திய வனவிலங்கு நிறுவனம் மற்றும் வனவிலங்கு அறிவியல் துறை ஆகியவை இணைந்தும் அதனை வழங்கின.

## சர் சையத் தனிச்சிறப்பு விருது

- பேராசிரியர் பார்பரா மெட்கால்ஃப் அவர்களுக்கு அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான சர் சையத் தனிச்சிறப்பு விருதானது வழங்கப் பட்டது.
- இந்த விருதானது அந்த நிறுவனத்தின் நிறுவனர் சர் சையத் அகமது கான் அவர்களின் 205வது பிறந்த நாளன்று வழங்கப்படுகிறது.
- பேராசிரியர் மெட்கால்ஃப் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் முஸ்லீம் மக்களின் வரலாற்றைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

## புக்கர் பரிசு

- இலங்கை எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலகா "The Seven Moons of Maali Almeida" என்ற அவரது புதினத்திற்காக புக்கர் பரிசை வென்றுள்ளார்.
- மைக்கேல் ஒண்டாட்ஜேவுக்குப் பிறகு, இந்த விருதினைப் பெற்ற இலங்கை நாட்டினைச் சேர்ந்த இரண்டாவது எழுத்தாளர் என்ற பெருமையை இவர் பெற்று உள்ளார்.

## டாக்டர் திலீப் மஹலனோபிஸ்

- டாக்டர் திலீப் மஹலனோபிஸ் சமீபத்தில் காலமானார்.
- 1971 ஆம் ஆண்டு வங்காளதேச விடுதலைப் போரின் போது, நிரம்பி வழியும் அகதிகள் முகாம்களில் அவர் ORS என்ற குடிநீரை அறிமுகம் செய்து பலருக்குத் தனது சேவையை வழங்கி வந்தார்.
- அந்த காலக் கட்டத்தில் அங்குப் பரவலாக பரவி வந்த காலரா மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் அவரை ORS என்ற குடிநீரைக் கண்டுபிடிப்பதற்கு வழி வகுத்தது.



- அவரது இந்தச் சிறப்பு மருந்தானது "20 ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான மருத்துவக் கண்டுபிடிப்பு" என்று தி லான்செட் அமைப்பினால் அழைக்கப்படுகிறது.
- 2002 ஆம் ஆண்டில், டாக்டர் திலீப் மஹாலனாபிஸ் மற்றும் டாக்டர் நதானியேல் எஃப் பியர்ஸ் ஆகியோர் வாய்வழி நீர்ச்சத்து இழப்பீட்டினை ஈடு செய்தல் சிகிச்சையைக் கண்டுபிடித்துச் செயல்படுத்தியதற்காக கொலம்பியா பல்கலைக்கழகத்தினால் வழங்கப் பட்ட பொலின் பரிசினைப் பெற்றனர்.

## பலோன் டி'ஓர் அல்லது ஃபெமினின் விருது

| Award | Winner |
|---|---|
| **Ballon d'Or (Men)** | Real Madrid's Karim Benzema |
| **Ballon d'Or (Women)** | Alexia Putellas (Barcelona) |
| **Kopa Award** | Gavi (Barcelona) |
| **Gerd Muller Award** | Robert Lewandowski (Barcelona) |
| **Yashin Trophy** | Thibaut Courtois (Real Madrid) |
| **Club of the Year Award** | Manchester City |
| **Socrates Award** | Sadio Mane (Liverpool) |

- பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த தொழில்முறைக் கால்பந்து வீரரான ரியல் மாட்ரிட் அணியின் கரீம் பென்சிமா, 2022 ஆம் ஆண்டிற்கான ஆடவருக்கான பலோன் டி'ஓர் (தங்கப் பந்து விருது) விருதினை வென்றுள்ளார்.
- இவர் இந்தப் பரிசை வென்ற 5வது பிரெஞ்சுக்காரர் ஆவார்.
- ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த ஒரு தொழில்முறைக் கால்பந்து வீராங்கனையான பார்சிலோனா கால்பந்து அணியின் அலெக்ஸியா புட்டெல்லாஸ், 2வது முறையாக பெண்களுக்கான பலோன் டி'ஓர் விருது அல்லது பலோன் டி'ஓர் ஃபெமினின் விருதை வென்றுள்ளார்.



## '101 ஊஞ்சல்' உலக சாதனைப் புத்தகம்

- சவுத் இந்தியன் வங்கியானது, 101 ஊஞ்சல்களை நிறுவி அவற்றை இயக்கச் செய்ததற்காக உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது.

- அந்த வங்கியானது 'ஒன்னிச்சிருக்கம் ஊஞ்சலாடம்' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்து உள்ளது.
- மேலும் அது 101 ஊஞ்சல்களை நிறுவி ஊஞ்சலாடியதற்காக உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- 'ஒன்னிச்சிருக்கம் ஊஞ்சலாடம்' என்ற நிகழ்வில் தற்போது நடைபெற்று வரும் திருவிழா காலங்களில் ஒற்றுமை மற்றும் செழிப்பைக் கொண்டாடுவதற்காக மக்கள் பெரும் அளவில் கூடினர்.
- இதற்காகப் பாரம்பரிய முறையில் மரம் மற்றும் கயிறு ஆகியவை பயன்படுத்தி ஊஞ்சல் செய்யப்பட்டது.

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் திரைப்படம்

- ஹாலிவுட் நடிகர் டாம் குரூஸ் விண்வெளியில் படம் எடுத்த முதல் நடிகர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- பிரம்மாண்ட செலவில் உருவாகி வரும் இப்படத்தின் காட்சிகள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் படமாக்கப்படவுள்ளது.
- இந்தக் குழு தற்போது நாசா மற்றும் எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சுமூகமான படத் தயாரிப்பினை மேற்கொள்வதனை உறுதி செய்வதற்காக பணியாற்றி வருகிறது.
- விண்வெளியில் திரைப்படம் எடுக்கும் முதல் ஹாலிவுட் ஸ்டுடியோ நிறுவனம் இதுவாகும்.

## சியோல் சாரங் திருவிழா

- சியோலில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வருடாந்திர முதன்மையானக் கலாச்சார நிகழ்ச்சியான 8வது 'சாரங்-கொரியக் குடியரசில் இந்தியாவின் திருவிழா' ஆனது சமீபத்தில் நிறைவடைந்தது.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சாரங் ஒரு முக்கிய இந்தியக் கலாச்சார விழாவாக உருவெடுத்துள்ளது.
- சாரங் என்ற சொல் கொரியர்கள் மற்றும் இந்தியர்கள் இருவருக்கும் பொருந்தும் வகையில் மிகவும் அர்த்தமுள்ள விளக்கத்தைக் கொண்டுள்ளது.
- கொரிய மொழியில் சாரங் என்றால் 'அன்பு' என்றும் இந்தியாவினைப் பொருத்தவரை இந்த சொல் 'இந்தியாவின் வெவ்வேறு நிறங்களைக் குறிக்கும் பன்முகத் தன்மை' என்றும் பொருள்படும்.

## 14வது உலக நறுமணப் பொருட்கள் மாநாடு

- 14வது உலக நறுமணப் பொருட்கள் மாநாடானது அடுத்த ஆண்டு மகாராஷ்டிராவின் மும்பை நகரில் நடைபெற உள்ளது.
- இது நறுமணப் பொருட்கள் துறையின் நிலை மற்றும் சவால்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்கும் வகையிலான உலகளாவிய நறுமணப் பொருட்கள் துறையின் சந்திப்பாகும்.
- இது முதன்முறையாக 1990 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- அதன் பின்னர், கடந்த 30 ஆண்டுகளில் 13 மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- இந்த 14வது மாநாட்டினை இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் ஏற்பாடு செய்ய உள்ளது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "குறிக்கோள் 2030: SPICES (நிலைத்தன்மை – உற்பத்தித் திறன் - புதுமை - ஒத்துழைப்பு - சிறப்பு மற்றும் பாதுகாப்பு)" என்பதாகும்.
- 2023 ஆம் ஆண்டு உலக நறுமணப் பொருட்கள் மாநாடானது, G20 நிகழ்வாக ஏற்பாடு செய்யப் பட உள்ளது.




## K.P. அஸ்வினி



- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் (UNHRC) ஒரு சிறப்பு அறிக்கையாளராக K.P. அஸ்வினி நியமிக்கப்பட்டுள்ளார்.
- இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதல் இந்திய மற்றும் ஆசியப் பெண் இவர் ஆவார்.
- ஜெனீவா நகரில் அமைந்துள்ள, 47 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையமானது ஆறு வருடக் காலத்திற்கான டாக்டர் அஷ்வினியின் பதவி நியமனத்தை அங்கீகரித்துள்ளது.

## அமெரிக்க இந்திய உத்திசார் கூட்டாண்மை மன்றத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது

- அமெரிக்க இந்திய உத்திசார் கூட்டாண்மை மன்றத்தின் (USISPF) வாழ்நாள் சாதனையாளர் விருதானது HCL நிறுவனத்தின் நிறுவனர் ஷிவ் நாடார்க்கு வழங்கப் பட்டுள்ளது.
- இது தொழில்நுட்பத் துறையில் அவரது பங்களிப்பு மற்றும் கல்வித் துறையில் அவர் மேற்கொண்ட முன்னெடுப்புகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.
- இவர் தனது ஷிவ் நாடார் அறக்கட்டளை மூலம் 1.1 பில்லியன் அமெரிக்க டாலர்களை சமுதாய நலத் திட்டங்களில், குறிப்பாக கல்வித் துறையில் முதலீடு செய்துள்ளார்.
- அவரது அறக்கட்டளை நிறுவனங்களின் தாக்கமானது, தாழ்மையான, புவியியல் ரீதியாக, தொலைதூரப் பகுதிகள் போன்ற பகுதிகளில் இருந்து தங்கள் பயணத்தை தொடங்கிய திறன்மிக்க மாணவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறது.

## ஆல்பர் டோட்ஜர் அறிவியல் குறியீடு

- 2023 ஆம் ஆண்டு ஆல்பர் டோட்ஜர் (AD) அறிவியல் குறியீட்டில் ஐம்பத்திரண்டு இந்திய விஞ்ஞானிகள் உலகின் முன்னணி இரண்டு சதவீத அறிவியலாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- உலகின் முன்னணி 2 சதவீத அறிவியலாளர்கள் பட்டியலில் இந்தியா 21வது இடத்தில் உள்ள நிலையில் உலகின் தலைசிறந்த அறிவியலாளர்கள் பட்டியலில் 4,935 நபர்களுடன் அமெரிக்கா இடம் பெற்றுள்ளது.
- 50,245 இந்திய அறிவியலாளர்களுடன் 216 நாடுகளின் அறிவியலாளர்கள் "பொதுத் தர வரிசையில்" பட்டியலிடப்பட்டுள்ளனர்.
- இது தனிநபர் அறிவியலாளர்களின் அறிவியல் செயல்திறன் மற்றும் அறிவியல் உற்பத்தித் திறன் மதிப்பு கூட்டலின் அடிப்படையிலான தரவரிசை மற்றும் பகுப்பாய்வு அமைப்பு ஆகும்.
- உலகின் முன்னணி 2 சதவீத அறிவியலாளர்கள் பட்டியலில் ஹார்வர்டு பல்கலைக் கழகம் அதிக எண்ணிக்கையிலான அறிவியலாளர்களைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் ஆகியவை உள்ளன.

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய அணியின் வரலாற்றுச் சாதனை

- 2022-25 ஆம் ஆண்டு ICC மகளிர் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற ஆறு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று புதிய வரலாறு ஒன்றைப் படைத்து உள்ளது.
- இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிரான இரு தரப்புத் தொடரில் 23 ஆண்டுகளில் இந்திய அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.
- 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான வெளிநாட்டு ஒருநாள் தொடரை வென்ற இந்திய மகளிர் அணியின் தலைவராக சந்தர்காந்தா அஹீர் விளங்கினார்.




## ஜூலன் கோஸ்வாமி

- மகளிர் கிரிக்கெட் வீராங்கனையான மேற்கு வங்காளத்தின் ஜூலன் கோஸ்வாமி அனைத்து வகையானப் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துளார்.
- அவர் 204 ஆட்டங்களில் 255 விக்கெட்டுகளுடன் அவர் தனது விளையாட்டுத் துறை வாழ்க்கையை நிறைவு செய்தார்.
- இது ஒருநாள் மகளிர் போட்டியில் இவர் மேற்கொண்ட சாதனையாகும்.
- இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அவரது விளையாட்டுத் துறை வாழ்க்கை நீள்கிறது.
- பெண்கள் சர்வதேச கிரிக்கெட் துறையில் மிக நீண்ட காலம் பங்கேற்ற இரண்டாவது பெண்மணி இவர் ஆவார்.
- அவர் 12 டெஸ்ட் போட்டிகள், 204 ஒருநாள் போட்டிகள் மற்றும் 68 டி20 போட்டிகளில் இந்தியா சார்பாக பங்கேற்று அனைத்து வடிவப் போட்டிகளிலும் சேர்த்து மொத்தம் 355 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- அவர் 2005, 2009, 2013, 2017 மற்றும் 2022 ஆகிய ஐந்து ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

- மகளிர் உலகக் கோப்பைப் போட்டியின் வரலாற்றில் அதிக விக்கெட்களை வீழ்த்திய முன்னணி வீராங்கனையாக இவர் திகழ்கிறார்.
- மகளிர் கிரிக்கெட் போட்டியின் ஒருநாள் போட்டிகளில் 250க்கும் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரே வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.




## 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்

- குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் நடைபெற உள்ள 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகளைப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
- இந்தப் போட்டியில் 28 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- லடாக் மற்றும் தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகிய இரண்டு புதிய ஒன்றியப் பிரதேசங்கள் இந்த ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் முறையாகப் பங்கேற்க உள்ளது.
- இந்த விளையாட்டு போட்டிகளின் முந்தையப் பதிப்பானது 2015 ஆம் ஆண்டில் கேரளாவில் நடைபெற்றது.

## பெர்லின் மாரத்தான் 2022

- எலியுட் கிப்சோஜ் பெர்லின் மாரத்தான் போட்டியில் 2:01:09 என்ற நேரத்தில் கடந்து தனது சொந்த உலகச் சாதனையை முறியடித்தார்.
- ஜெர்மனியின் தலைநகரில் நடைபெற்ற இந்தப் பந்தயத்தில் கென்யாவின் ஓட்டப் பந்தய வீரர், ஆண்களுக்கான போட்டியில் உலகச் சாதனையைப் படைத்தது இது இரண்டாவது முறையாகும்.
- 42.2 கிமீ பந்தயத்தில் கிப்சோஜின் முந்தைய சிறந்தச் சாதனைப் பதிவானது 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 2:01:39 என்ற சாதனையாகும்.

- எத்தியோப்பியாவின் டிஜிஸ்ட் அசெபா, 2:15:37 என்ற சாதனையில் பெண்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- இது வரலாற்றில் மூன்றாவது வேகமான ஓட்டப் பதிவாகும்.




## டி20 போட்டியில் அதிகப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்




- டி20 போட்டிகளின் வரலாற்றில் 400 போட்டிகளில் விளையாடிய முதல் இந்தியர் என்றப் பெருமையை ரோஹித் சர்மா பெற்றார்.
- அவரைத் தொடர்ந்து 368 டி20 போட்டிகளில் விளையாடியப் பெருமையினை தினேஷ் கார்த்திக் பெற்றுள்ளார்.
- தோனி 361 போட்டிகளில் விளையாடியதன் மூலம் 3வது இடத்தில் உள்ளார்.
- விராட் கோலி தனது 354வது டி20 போட்டியில் பங்கேற்று வருகிறார்.
- 614 போட்டிகளில் பங்கேற்றதன் மூலம் கீரன் பொல்லார்ட் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- இவரைத் தொடர்ந்து ட்வைன் பிராவோ (556), ஷோயப் மாலிக் (481), கிறிஸ் கெய்ல் (463), சுனில் நரைன் (435), ரவி போபாரா (429), ஆண்ட்ரே ரசல் (428), டேவிட் மில்லர் (403) ஆகியோர் ரோஹித்துக்கு முன்னதாக இடம் பெற்றுள்ளனர்.

## FIH மகளிர் போட்டியின் இந்த ஆண்டிற்கான எழுச்சி நாயகி

- 2021-22 ஆம் ஆண்டு FIH ஸ்டார் விருது விழாவில் இந்திய ஹாக்கி அணியின் மும்தாஜ் கான் FIH மகளிர் போட்டியின் இந்த ஆண்டிற்கான எழுச்சி நாயகியாக அறிவிக்கப் பட்டார்.
- 2022 ஆம் ஆண்டு FIH மகளிர் ஹாக்கி போட்டிகளில் இந்தியாவிலேயே அதிகளவு கோல் அடித்த வீராங்கனையாக மும்தாஜ் உருவெடுத்தார்.
- பிரான்சின் திமோதி கிளெமென்ட் FIH ஆண்களுக்கான ஆண்டின் சிறந்த எழுச்சி நாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




## மல்லாகம்ப் போட்டி

- மல்லாகம்ப் என்பது 36வது தேசிய விளையாட்டுப் போட்டியின் ஒரு பகுதியாக உள்ள இந்திய உள்நாட்டு விளையாட்டு ஆகும்.
- இந்த ஆண்டு 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்ட ஐந்து புதிய விளையாட்டுகளில் இதுவும் ஒன்றாகும்.
- கேலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டியில் இந்த விளையாட்டு அறிமுகமானது.



## இரானி டிராபி 2022

- 2019-2020 ஆண்டின் ரஞ்சிக் கோப்பைச் சாம்பியனான சவுராஷ்டிரா அணியை வீழ்த்தி இரானிக் கோப்பைப் பட்டத்தை ரெஸ்ட் ஆஃப் இந்தியா அணி வென்றது.
- இரானி டிராபி மாஸ்டர்கார்டு இரானி டிராபி என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்தியாவில் நடைபெறும் டெஸ்ட் போட்டி வடிவ கிரிக்கெட் போட்டியாகும்.
- இது தற்போதைய ரஞ்சி டிராபி வெற்றியாளருக்கும் எஞ்சிய மற்ற இந்தியக் கிரிக்கெட் அணிக்கும் இடையே ஆண்டுதோறும் விளையாடப் படுகிறது.
- இது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## FIH ஆண்டின் சிறந்த கோல்கீப்பர்கள்

- இந்திய மகளிர் ஹாக்கி அணியின் தலைவரான சவிதா புனியா, மகளிர் பிரிவில் FIH ஆண்டின் சிறந்த கோல்கீப்பர் பட்டத்தைப் பெற்றார்.
- ஆடவர் பிரிவில் மூத்த கோல்கீப்பர் P.R. ஸ்ரீஜேஷ் ஆண்டின் ஆண்டின் சிறந்த கோல் கீப்பர் பட்டத்தைப் பெற்றார்.
- FIH ஆண்டின் சிறந்த கோல்கீப்பர் பட்டத்தை இரண்டு முறை பெற்ற மூன்றாவது நபர் ஸ்ரீஜேஷ் ஆவார்.
- இந்தப் போட்டித் தொடரின் போது ஸ்ரீஜேஷ் 250 சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்றார்.
- இவர் இந்த சாதனையைப் படைத்த எட்டாவது இந்தியர் மற்றும் கோல் கீப்பர் ஆவார்.
- 2014 ஆம் ஆண்டில் இந்த விருது அறிமுகப் படுத்தப்பட்டதில் இருந்து, இந்தப் பட்டத்தினை வென்ற மூன்றாவது தடகள வீராங்கனை சவிதா ஆவார்.

## 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2022

| Rank | Team | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Services | 61 | 35 | 32 | 128 |
| 2 | Maharashtra | 39 | 38 | 63 | 140 |
| 3 | Haryana | 38 | 38 | 40 | 116 |
| 4 | Karnataka | 27 | 23 | 38 | 88 |
| 5 | Tamil Nadu | 25 | 22 | 27 | 74 |

- 2022 ஆம் ஆண்டில் 36வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை குஜராத் மாநிலம் முதல் முறையாக ஏற்பாடு செய்து நடத்தியது.
- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் சிறந்த மாநிலப் பட்டத்தினை மகாராஷ்டிரா பெற்றது.
- சஜன் பிரகாஷ் சிறந்த ஆண் தடகள வீரராக (5 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம்) தேர்வு செய்யப் பட்டார்.
- கர்நாடகாவைச் சேர்ந்த வெறும் 14 வயதே ஆன ஹஷிகா ராம்சந்திரா, 6 தங்கம் மற்றும் 1 வெண்கலத்துடன் சிறந்தப் பெண் தடகள வீராங்கனைக்கானப் பட்டத்தை வென்றார்.

- குஜராத்தின் 10 வயது சௌர்யஜித் கைரே (மல்லகாம்ப்) விளையாட்டுப் போட்டிகளின் 'அதிகம் புகழப்படும்' நாயகராக உருவெடுத்து, பதக்கம் வென்ற இளம் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.
- அடுத்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 37வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை கோவா நடத்த உள்ளதாக இந்திய ஒலிம்பிக் சங்கம் உறுதி செய்துள்ளது.

## 700வது கிளப் கோல்

- கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது வாழ்க்கையில் 700வது கிளப் கோலை அடித்ததன் மூலம் மற்றொருச் சாதனையை முறியடித்தார்.
- இந்தத் தற்போதையத் தலைமுறையில் கால்பந்து வரலாற்றில் ஏழு முறை நூறு கோல்களை அடித்த முதல் மற்றும் ஒரே வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- அவரது 700வது கிளப் கோல், 691 கோல்களை அடித்த அர்ஜென்டினாவினைச் சேர்ந்த முன்னணி வீரர் லியோனல் மெஸ்ஸியை விட இவரை முன்னேறச் செய்தது.




## ஜோதி யார்ராஜி

- ஜோதி யர்ராஜி 2022 தேசிய விளையாட்டுப் போட்டியில் 13 வினாடிகளுக்கு குறைவான நேரத்தில் ஓடி, மகளிருக்கான 100 மீட்டர் தடை ஓட்டத்தில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்று வரலாறு படைத்துள்ளார்.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் சார்பாக பங்கேற்று, இறுதிப் போட்டியில் 12.79 வினாடிகளில் கடந்து தனது சொந்த தேசியச் சாதனையை முறியடித்தார்.
- முன்னதாக, ஜோதி யர்ராஜி மகளிருக்கான 100 மீட்டர் போட்டியில் ஸ்ப்ரிண்டர் வீரர்களான லைம் டுட்டி சந்த் மற்றும் ஹிமா தாஸ் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி, தங்கம் வென்றார்.

## தொம்மராஜு குகேஷ்

- இந்திய இளம்பெண் டோனாரும்மா குகேஷ் தற்போது நடைபெற்று வரும் எயிம்செஸ் ரேபிட் ஆன்லைன் போட்டியில் மேக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்து வரலாறு படைத்தார்.
- உலக சாம்பியனான அவரைத் தோற்கடித்த இளம் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- முன்னதாக 19 வயதான சக போட்டியாளரான அர்ஜுன் எரிகைசி உலக சாம்பியனை வீழ்த்தி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தார்.
- 16 வயதுடைய மற்றொரு இந்திய இளைஞரான R. பிரக்ஞானந்தா, ஏற்கனவே இந்த ஆண்டில் இரண்டு முறை கார்ல்சனை வீழ்த்தியுள்ளார்.

## கேரம் உலக சாம்பியன்

- மலேசியாவின் லங்காவியில் நடைபெற்ற 8வது உலக கேரம் சாம்பியன்ஷிப் போட்டியில் பீகாரின் ராஷ்மி குமாரி அமோக வெற்றியினைப் பெற்றுள்ளார்.
- சந்தீப் டைவ் ஆடவர்களுக்கான இரட்டையர் பிரிவில் அப்துல் ரஹ்மானை வீழ்த்திப் பட்டத்தை வென்றார்.
- இந்தியா இதற்கு முன்பு இலங்கை மற்றும் அமெரிக்கா அணிகளை வீழ்த்தி முறையே ஆண்கள் மற்றும் பெண்கள் அணி பட்டங்களை வென்றிருந்தது.
- கடந்த முறை இலங்கை அணியிடம் இந்திய அணி பட்டத்தைத் தவற விட்டது.

## செப்டம்பர் மாதத்தின் சிறந்த ICC வீரர்

- சர்வதேச கிரிக்கெட் சபையானது, 2022 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர்களுக்கான விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இந்திய மகளிர் அணியின் தலைவர் ஹர்மன்ப்ரீத் கவுர் ICCயின் இந்த மாதத்தின் சிறந்த வீராங்கனைக்கான விருதைப் பெற்றுள்ளார்.
- பாகிஸ்தான் வீரர் முகமது ரிஸ்வான் ICCயின் இந்த மாதத்தின் சிறந்த வீரர்க்கான விருதை வென்றுள்ளார்.
- ஹர்மன்ப்ரீத் கவுர் இந்த விருதினை வென்ற இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

## 2023 ஆம் ஆண்டு FIFA மகளிர் உலகக் கோப்பை போட்டியின் உருவச் சின்னம்

- 2023 ஆம் ஆண்டு FIFA மகளிர் உலகக் கோப்பை ஆஸ்திரேலியா & நியூசிலாந்து போட்டியின் அதிகாரப்பூர்வ உருவச் சின்னமாக தசுனி எனப்படும் ஒரு வேடிக்கையான விலங்கினமான, கால்பந்துப் போட்டியை விரும்புகின்ற வகையில் அமைந்த பென்குயின் வெளியிடப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு FIFA மகளிர் உலகக் கோப்பைப் போட்டியானது 9வது போட்டித் தொடராகும்.
- 2 நாடுகள் இணைந்து இந்தப் போட்டியை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

- இந்தப் போட்டியானது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே பிரித்து வழங்கப்பட்டுள்ளது.




# முக்கிய தினங்கள்

## உணவு வீணடித்தல் மற்றும் கழிவுகள் பற்றிய சர்வதேச விழிப்புணர்வு தினம் – செப்டம்பர் 29

- இந்த தினம் அனுசரிக்கப்படுவதால் உணவு வீணடித்தல் மற்றும் உணவுக் கழிவுகளை குறைத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அளிக்கும் என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்தத் தினத்தினை அங்கீகரித்து உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் ஊட்டச்சத்து அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) ஆகியவை இந்தத் தினத்தை அனுசரிப்பதற்காக ஒன்றிணைந்துள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மக்கள் மற்றும் கிரகத்திற்காக உணவுகளை வீணடித்தல் மற்றும் கழிவுகளை நிறுத்துங்கள்' என்பதாகும்.
- உலகின் 14 சதவீத உணவானது அறுவடைக்கும் சில்லறை விற்பனைக்கும் இடைப் பட்ட செயல்முறைகளில் இழக்கப் படுகிறது.



- ❖ சில்லறை விற்பனையிலும் நுகர்வு அளவிலும் 17 சதவீத உணவு வீணடிக்கப்படுகிறது.
- ❖ இந்த உணவு வீணடித்தல் மற்றும் கழிவுகள் ஆனது மொத்த உலகளாவியப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் 8-10 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.

## சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01

- ❖ 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 01 ஆம் தேதியினை சர்வதேச முதியோர் தினமாக அறிவித்தது.
- ❖ 1982 ஆம் ஆண்டு முதுமை பற்றிய உலகச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, முதுமை குறித்த வியன்னா சர்வதேச செயல் திட்டம் போன்ற முன்னெடுப்புகள் இதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்டன.
- ❖ இந்தத் தினத்திற்கான முதன்மை கருத்துரு, "மாறி வரும் உலகில் முதியோர்களின் நெகிழ்திறன்" என்பதாகும்.

## தேசியத் தன்னார்வ இரத்த தான தினம் - அக்டோபர் 01

- ❖ இரத்தத் தானம் செய்வதன் முக்கியத்துவம் பற்றியும், இந்த உன்னத நோக்கத்துடன் தொடர்புடைய நன்மைகள் பற்றியும் விழிப்புணர்வைப் பரப்புவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தத் தினமானது டாக்டர் ஜெய் கோபால் ஜாலி அவர்கள் ஆற்றிய மகத்தானப் பங்களிப்பை அங்கீகரித்து அவருடையப் பிறந்தநாளினை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இவர் இந்தியாவில் தன்னார்வ இரத்தத் தான இயக்கத்திற்கு ஒரு முன்னோடியாக திகழ்ந்தார்.
- ❖ மேலும், இவர் இரத்த மாற்றத் துறையில் சர்வதேச அளவில் பிரபலமாக அறியப்பட்ட நிபுணர் ஆவார்.
- ❖ இவர் "இந்தியாவில் இரத்தமாற்ற மருத்துவத்தின் தந்தை" என்று கருதப்படுகிறார்.
- ❖ இந்திய இரத்தமாற்று மற்றும் நோய் தடுப்பூக்கி ஆய்வியல் சங்கமானது 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை முதன்முறையாக அனுசரித்தது.

## உலக சைவ தினம் - அக்டோபர் 01

- ❖ சைவ வாழ்க்கை முறையின் நெறிமுறை, சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மனிதம் சார்ந்த நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அக்டோபர் மாதமானது சைவ விழிப்புணர்வு மாதமாகவும் அனுசரிக்கப்படுகிறது
- ❖ உலக சைவ தினமானது 1977 ஆம் ஆண்டில் வட அமெரிக்க சைவ சங்கத்தினால் (NAVS) நிறுவப் பட்டது.
- ❖ 1978 ஆம் ஆண்டில் சர்வதேச சைவ உணவு முறை பின்பற்றுவோர் சங்கத்தினால் இந்தத் தினம் அங்கீகரிக்கப் பட்டது.

## உலக கடல்சார் தினம் - செப்டம்பர் 29

- இந்தத் தினமானது செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமையன்று சர்வதேச கடல் சார் அமைப்பினால் அனுசரிக்கப்படுகிறது.
- கடல் பாதுகாப்பு மற்றும் கடல் சூழல் குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதில் இந்த தினம் கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பசுமையான கப்பல் போக்குவரத்துக்கான புதிய தொழில்நுட்பங்கள்' என்பதாகும்.

## தேசிய ஓய்வூதிய அமைப்பிற்கான தினம் - அக்டோபர் 01

- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது அக்டோபர் 01 ஆம் தேதியைத் தேசிய ஓய்வூதிய அமைப்பு தினமாக (NPS திவாஸ்) அனுசரிக்கிறது.
- இந்தியக் குடிமக்கள் மத்தியில், அவர்களின் ஓய்வுக்குப் பிறகு நிதிச் சுதந்திரத்துடன் வாழ்வது குறித்து தெரியப்படுத்தி, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை அதிகம் பரவச் செய்வது அதனை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02

- 2007 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் காந்தி அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 02 ஆம் தேதியன்று இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது "கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு உள்ளிட்டவை மூலமாக அகிம்சை குறித்துப் பரப்புவதை" நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நோபல் பரிசு பெற்ற ஈரானியக் குடிமகனான ஷிரின் எபாடி, 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், உலகம் முழுவதும் அகிம்சைக்கென்று ஒரு நாளினைப் பிரத்தியேகமாக அனுசரிக்க வேண்டும் என்றக் கருத்தினை முதன் முதலில் முன்வைத்தார்.

## உலகப் பண்ணை விலங்குகள் தினம் - அக்டோபர் 02

- உணவுக்காக வளர்க்கப்படும் விலங்குகளை நினைவு கூரும் வகையிலும், இந்த விலங்குகளை மனிதாபிமானத்துடன் நடத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்யவும் வேண்டி இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்தத் தினமானது விலங்குகள் நல நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

## 68வது தேசிய வனவிலங்கு வாரம் - அக்டோபர் 02 முதல் 08 வரை

- 68வது தேசிய வனவிலங்கு வாரமானது 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 02 முதல் 08 ஆம் தேதி வரை இந்தியா முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம் என்பது விலங்குகளின் வளங்காப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதாகும்.
- இந்திய வனவிலங்கு வாரியமானது 1952 ஆம் ஆண்டில் வனவிலங்கு வாரத்தை நிறுவியது.

- வனவிலங்குத் தினமானது முதன்முதலில் 1955 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- பின்னர் 1957 ஆம் ஆண்டில் இது வனவிலங்கு வாரம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

## உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 04 முதல் 10 வரை

- இந்தத் தினமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மனித நிலையை மேம்படுத்துவதில் அவற்றின் பங்களிப்பைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, விண்வெளி மற்றும் நிலைத்தன்மை என்பதாகும்.
- அக்டோபர் 04 ஆம் தேதி, மனிதனால் உருவாக்கப்பட்ட பூமியின் முதல் செயற்கைக் கோளான ஸ்புட்னிக் 1 1957 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- பத்தாண்டுகளுக்குப் பிறகு, 1967 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதியன்று, விண்வெளியின் ஆய்வு மற்றும் பயன்பாடு குறித்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது முதன்முதலில் 2000 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்

- அக்டோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகும்.
- இது அமெரிக்கப் புற்றுநோய் சங்கத்தால் 1985 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது மார்பகப் புற்றுநோயைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கான ஒரு வருடாந்திரப் பிரச்சாரமாகும்.
- மார்பகப் புற்றுநோயானது புற்றுநோயின் மிகவும் பொதுவான வடிவமாகும்.
- இந்த நோய் இந்தியா உட்பட உலகம் முழுவதும் பெரும் பிரச்சனையாக மாறியுள்ளது.

## ஸ்வச் பாரத் திவாஸ் - அக்டோபர் 02



- சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவின் ஒரு பகுதியாக ஸ்வச் பாரத் மிஷன் கிராமின் 2 ஆம் கட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி நாடு முழுவதும் இது கொண்டாடப்பட்டது.
- ஜல் சக்தித் துறை அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை (DDWS), ஸ்வச் பாரத் மிஷன் கிராமின் (SBMG) கட்டம் 2 என்பதின் கீழ் முக்கியமான நடவடிக்கைகள் / பிரச்சாரங்களை ஏற்பாடு செய்தது.
- இது ODF பிளஸ் நிலையை அடையும் வேகத்தை விரைவுபடுத்துவது மற்றும் கிராமங்களில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலை (ODF) சாதனைகளை நிலை நிறுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக வாழ்விடத் தினம் - அக்டோபர் 03

- இது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் திங்கட்கிழமை குறிக்கப்படுகிறது.
- இது முதன்முதலில் 1986 ஆம் ஆண்டில் கென்யாவின் நைரோபியில் கொண்டாடப் பட்டதோடு, இது ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.
- இது நமது நகரங்கள் மற்றும் நகரங்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சக்தியும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உள்ளது என்பதை உலகுக்கு நினைவூட்டும் நோக்கம் கொண்டது.
- இந்த ஆண்டுக்கான கருத்துரு 'இடைவெளியை மனதில் கொள்ளுங்கள். எந்தவொரு தனி நபரையும் இடத்தையும் விட்டு விடாதீர்' என்பதாகும்.
- இந்த ஆண்டு கோவிட்-19, காலநிலை மற்றும் மோதல் எனும் மூன்று 'சி' நெருக்கடிகளால் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பாதிப்புகள் குறித்து கவனத்தை ஈர்க்க முயல்கிறது.

## உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05

- 1994 ஆம் ஆண்டு முதல் இது உலகெங்கிலும் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் கொண்டாட ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.
- இது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO), UNICEF மற்றும் Education International (EI) ஆகியவற்றுடன் இணைந்து அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு கல்வியின் மாற்றம் ஆசிரியர்களிடம் இருந்து தொடங்குகிறது என்பதாகும்.

## உலகப் பெருமூளை வாதம் தினம் – அக்டோபர் 06

- பெருமூளை வாதம் என்பது வாழ்நாள் முழுதும் குணப்படுத்த முடியாத நோய் ஆகும்.
- 2012 ஆம் ஆண்டில், செரிப்ரல் பால்சி கூட்டணி இந்த நாளை உருவாக்கியது.
- இந்த ஆண்டின் கருத்துரு "மில்லியன் கணக்கான காரணங்கள்" ஆகும்.
- இது பன்முகத் தன்மையைத் தழுவி, அனைவருக்கும் அணுகக் கூடிய எதிர்காலத்தை உருவாக்க உதவுவதாகும்.

## உலக விலங்குகள் தினம் - அக்டோபர் 07

- இது விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே அமைதியான சகவாழ்வை மேம்படுத்துவதையும், இந்த உலகத்தை விலங்குகளுக்குப் பாதுகாப்பான இடமாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விலங்குகளுக்கு ஆதரவுக் குரல் எதுவும் இல்லாததால் அது வெகுவாக சுரண்டப் படுகிறது.
- இந்த நாள் வளர்ப்பு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகள், அழிந்து வரும் உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பேரழிவால் அச்சுறுத்தப்பட்டவை என அனைத்திற்குமானது ஆகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'பகிரப்பட்ட கோள்' என்பதாகும்.
- இது 1925 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு அதன் முதல் நிகழ்வை பெர்லினில் ஹென்ரிச் சிம்மர்மேன் என்பவர் ஏற்பாடு செய்தார்.
- ஜெர்மனிய விலங்குப் பிரியர்களின் இதழான "மனிதனும் நாயும்" என்ற ஒரு பத்திரிகையின் வெளியீட்டாளராக ஜிம்மர்மேன் இருந்தார்.
- அக்டோபர் 4, விலங்குகளின் புரவலரான அசிசியின் புனித பிரான்சிஸின் பண்டிகை நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- புனித பிரான்சிஸ் விலங்குகள் மற்றும் அனைத்து உயிரினங்களுக்காகவும் அவரது அணுகுமுறைக்காகப் பிரபலமாக அங்கீகரிக்கப்பட்டார்.

## உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07

- 2022 ஆம் ஆண்டு சர்வதேச நிகழ்வின் மூன்றாம் ஆண்டு கொண்டாட்டத்தைக் குறிக்கிறது.
- உலகில் அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.
- 2022 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "பருத்திக்கு சிறந்த எதிர்காலத்தை நெசவு செய்தல்" என்பதாகும்.
- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் (FAO) வெளியிடப் பட்டது.
- முதல் உலகப் பருத்தி தினம் அக்டோபர் 7, 2019 அன்று உலக வர்த்தக அமைப்பால் முன் மொழியப் பட்டது.
- நான்கு துணை-சஹாரா ஆப்பிரிக்க பருத்தி உற்பத்தியாளர்களான பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி ஆகியவை கூட்டாக காட்டன் ஃபோர் (Cotton Four) என்று அழைக்கப் படுகின்றன.

## உலக இடம்பெயரும் பறவைகள் தினம் - அக்டோபர் 08

- 2006 ஆம் ஆண்டில் இது உருவாக்கப்பட்டதிலிருந்து, இந்த நாள் ஆண்டுக்கு இருமுறை நினைவு கூறப்படுகிறது.
- இது மே மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் அக்டோபர் இரண்டாவது சனிக் கிழமைகளில் கொண்டாடப்பட வேண்டும்.
- இது இந்த ஆண்டில், முன்பு மே 14 அன்று கொண்டாடப்பட்டதோடு இது இரண்டாவது முறையாக, அக்டோபர் 8 அன்று மீண்டும் இந்த நாளைக் குறிக்கிறது.

- புலம்பெயர்ந்த பறவைகள் சந்திக்கும் பிரச்சினைகள், அவற்றின் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கு உலகளாவிய ஒத்துழைப்பின் அவசியம் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை அதிகரிப்பதாகும்.
- வனவிலங்குகளில் புலம்பெயர்ந்த இனங்கள் (சிஎம்எஸ்) பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் செயலகத்துடன் இணைந்து ஆப்பிரிக்க-யூரேசிய புலம்பெயர்ந்த நீர்ப் பறவைகளைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் விளைவாக இது நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு "ஒளி மாசுபாடு" என்பதாகும்.




## இந்திய விமானப்படைத் தினம் - அக்டோபர் 08

- இந்திய விமானப்படை 1932 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் தேதி தொடங்கப்பட்டு 90 ஆண்டுகள் நிறைவடைகிறது.
- இந்திய குடியரசுத் தலைவர் இந்திய விமானப்படையின் தலைமை தளபதி ஆவார்.
- இந்த முறை சண்டிகரில் உள்ள சுக்னா ஏரியின் மீது விமானப்படைத் தின சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றது.
- முதன்முதலாக வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விமானப்படை தினத்தின் அணிவகுப்பு மற்றும் சாகச நிகழ்ச்சி இந்திய விமானப்படையால் தேசிய தலைநகரப் பகுதிக்கு வெளியே நடத்தப்பட்டது.
- இந்திய விமானப்படை அதிகாரப்பூர்வமாக 8 அக்டோபர் 1932 அன்று இங்கிலாந்துப் பேரரசால் ராயல் இந்திய விமானப் படையாக நிறுவப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டில் இந்திய விமானப்படை எனப் பெயர் மாற்றப்பட்டது.

## உலக நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்புப் பராமரிப்பு தினம் - அக்டோபர் 08




- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, இதயங்களையும் சமூகங்களையும் குணப்படுத்துதல் என்பதாகும்.
- உலக நல்வாழ்வு மற்றும் நோய்த் தடுப்புப் பராமரிப்பு நலக் கூட்டமைப்பினால் (WHPCA) இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- நோய்த் தடுப்புச் சிகிச்சை என்பது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையாகும்.

## தரைப் படை இராணுவத்தின் 73வது எழுச்சி தினம் - அக்டோபர் 09

- 1949 ஆம் ஆண்டில் இந்த நாளில் முதல் தலைமை ஆளுநர் ராஜகோபாலாச்சாரி அவர்களால் இந்த படை எழுப்பப்பட்டதன் நினைவாக இத்தினமானது கொண்டாடப் படுகிறது.
- தரைப் படை இராணுவமானது நம் நாட்டில் சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்காக பத்து சுற்றுச் சூழல் படைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

## உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 09



- இது 1874 ஆம் ஆண்டில், சுவிட்ஸர்லாந்து தலைநகரான பெர்னில் உலகளாவிய தபால் ஒன்றியம் (UPU) நிறுவப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இது 1969 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற உலகளாவிய தபால் ஒன்றிய மாநாட்டில் உலக அஞ்சல் தினமாக அறிவிக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'புவிக்கான தபால்' என்பதாகும்.
- அக்டோபர் 09 முதல் 13 வரை தேசிய அஞ்சல் வாரமானது அனுசரிக்கப்படுகிறது.

## இந்திய வெளியுறவுப் பணி (IFS) தினம் - அக்டோபர் 09

- 1946 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், இந்திய அரசாங்கம் இந்திய வெளியுறவுப் பணியை நிறுவியது.
- இது ஆங்கிலேயர் ஆட்சியின் போது தோற்றுவிக்கப் பட்டதாகும்.
- பின்னர் "வெளிநாட்டு ஐரோப்பிய நாடுகளுடன்" வணிகத்தை மேற்கொள்வதற்காக வெளியுறவுத் துறையானது உருவாக்கப்பட்டது.




## மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10

- 2022 ஆம் ஆண்டானது, இத்தினத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் குறிக்கிறது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் மரண தண்டனைக்கு எதிரான உலகக் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டு அனுசரிக்கப்பட்டது.



## உலக வீடற்றோர் தினம் - அக்டோபர் 10

- இத்தினமானது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- உலகெங்கிலும் உள்ள வீடற்ற மக்களின் அவல நிலையை கவனத்தில் கொள்வதற்காக இந்தத் தினமானது உருவாக்கப்பட்டது.
- இந்த ஆண்டு, டெல்லி அரசானது தனது முதல் குடிசை விழாவை ஏற்பாடு செய்தது.

## உலக மனநல தினம் - அக்டோபர் 10

- லான்செட் அமைப்பானது, "மனநலம் குறித்த பல்வேறு தவறான கருத்துக்கள் மற்றும் பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இத்தினமானது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'அனைவருக்குமான மனநலத்தை உலகளாவிய முன்னுரிமையாக மாற்றுதல்' என்பதாகும்.

## சர்வதேச பெண் குழந்தைகள் தினம் - அக்டோபர் 11

- இந்த ஆண்டானது இத்தினத்தின் 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2011 ஆம் ஆண்டில், இது தொடர்பான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "இது நமது நேரம் -நமது உரிமைகள், நமது எதிர்காலம்" என்பதாகும்.
- வரலாற்றில் முதல் முறையாக, 1995 ஆம் ஆண்டில் பெய்ஜிங் பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான தளம் என்ற அமைப்பானது, பெண் குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தை முன்மொழிந்தது.

## உலக முடக்குவாத தினம் - அக்டோபர் 12



- இது முடக்கு வாதம் மற்றும் தசைக்கூட்டு நோய்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுகின்ற ஒரு உலகளாவிய சுகாதார விழிப்புணர்வுத் தினமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "யாவும் உங்கள் கையில் உள்ளது, நடவடிக்கை எடு" என்பதாகும்.
- இது முடக்கு வாதம் மற்றும் ருமாடிசம் இன்டர்நேஷனல் (ARI) அமைப்பு மூலம் நிறுவப் பட்டது.
- முதலாவது உலக முடக்குவாதத் தினமானது 1996 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப் பட்டது.

## உலக தேன் உண்ணும் கரடி தினம் - அக்டோபர் 13




- முதல் உலக தேன் உண்ணும் கரடி தினமானது 2022 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- இருபதாண்டுகளுக்கும் மேலாக தேனுண்ணும் கரடியின் வளங்காப்பு மற்றும் அதன் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள வனவிலங்கு SOS இந்தியா நிறுவனத்தால் இது முன் மொழியப் பட்டது.
- IUCN (சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம்) – உயிர் இனங்கள் உய்த்தல் என்ற ஆணையத்தின் (SSC) தேனுண்ணும் கரடி நிபுணர் குழுவானது இத்தினத்தினை ஏற்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்ற நாளாக இதனை அறிவித்தது.
- தேனுண்ணும் கரடி என்பது உலகம் முழுவதும் காணப்படும் 8 கரடி இனங்களில் ஒன்று ஆகும்.

- தேன்னுண்ணும் கரடிகள் குளிர்காலத்தில் நீண்ட நாட்கள் வரை உறங்குவதில்லை.
- அதன் மற்றொரு பெயர் "தேன் கரடி" என்பதாகும்.
- தற்போது தேனுண்ணும் கரடிகள் இந்திய துணைக் கண்டம், நேபாளம் ஆகிய நாடுகளிலும், இலங்கையில் அதன் ஒரு துணை இனமும் மட்டுமே காணப்படுகின்றன.
- உலக தேனுண்ணும் கரடிகளின் எண்ணிக்கையில் சுமார் 90% இந்தியாவில் காணப் படுகின்றன.

## உலக கண் பார்வை தினம் - அக்டோபர் 13

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உங்கள் கண்களை நேசியுங்கள்" என்பதாகும்.
- ஒவ்வோர் ஆண்டின் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சர் ஜான் வில்சன் மற்றும் பலர் உலகளவில் நிலவும் கண்பார்வையின்மை பிரச்சினை குறித்து சர்வதேசச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்தனர்.

## பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான சர்வதேச தினம் - அக்டோபர் 13

- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு- 'முன்னெச்சரிக்கை' என்பதாகும்.
- இது "2030 ஆம் ஆண்டிற்குள் மக்களுக்கு பல்வகை ஆபத்துகளுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் பேரிடர் ஆபத்து தகவல் மற்றும் மதிப்பீட்டு வசதிகள் கிடைப்பதையும் அதற்கான அணுகல் வாய்ப்புகள் கிடைப்பதையும் கணிசமாக அதிகரித்தல்" என்ற சென்டாய் கட்டமைப்பின் இலக்கில் கவனம் செலுத்துகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் அழைப்பின் பேரில் 1989 ஆம் ஆண்டில் இது தொடங்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில், ஜப்பானின் சென்டாய் நகரில் நடைபெற்ற பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான மூன்றாவது ஐக்கிய நாடுகள் உலக மாநாட்டில் சென்டாய் கட்டமைப்பானது வெளியிடப்பட்டது.

## சர்வதேச மின் கழிவு தினம் - அக்டோபர் 14

- சர்வதேச மின் கழிவு தினமானது, 2018 ஆம் ஆண்டில் மின் மற்றும் மின்னணு உபகரண கழிவு மறுசுழற்சி (WEEE) மன்றத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது மின்சார மற்றும் மின்னணு உபகரணக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதன் பொது சுய விவரத்தை மேம்படுத்துவதையும், மறுசுழற்சி செய்ய நுகர்வோரை ஊக்குவிக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டானது, 5வது சர்வதேச மின் கழிவு தினமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவுடன், "எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அனைத்தையும் மறுசுழற்சி செய்யுங்கள்" என்ற முழக்கத்தின் கீழ், சிறிய மின்னணு கழிவுகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது.




## உலகத் தரநிலை தினம் - அக்டோபர் 14

- இந்தத் தினமானது நுகர்வோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு தர நிலைப்படுத்தலின் மதிப்பைப் பற்றி கற்பிக்க முயற்சிக்கிறது.
- இந்த நாள் 1956 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெற்ற 25 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் முதல் கூட்டத்தை நினைவு கூறுகிறது.
- தரநிலைப்படுத்தலை மேற்கொள்ளச் செய்வதற்காக வேண்டி ஒரு சர்வதேச அமைப்பு தொடங்கப் பட்டதை இந்தத் தினம் குறிக்கிறது.
- தரநிலைப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பானது (ISO) 1947 ஆம் ஆண்டில் 67 தொழில் நுட்பக் குழுக்களுடன் நிறுவப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ‘ஒரு சிறந்த உலகத்திற்கான பகிரப் பட்ட பார்வை " என்பதாகும்.

## உலக முட்டை தினம் - அக்டோபர் 14

- உலக முட்டை தினமானது வியன்னாவில் 1996 ஆம் ஆண்டில் சர்வதேச முட்டை ஆணையத்தினால் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது, மனித ஊட்டச்சத்திற்கு முட்டைகளின் முக்கியத்துவம் குறித்து தெரியப் படுத்தி ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் உலக முட்டை தினத்தின் கருத்துரு, 'சிறந்த வாழ்க்கைக்கான முட்டை சார்ந்த உணவுகள்' என்பதாகும்.

## உலக மாணவர் தினம் - அக்டோபர் 15

- இந்தத் தினமானது முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் APJ அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூருகிறது.
- பல மாணவர்களுக்குச் சாதிக்கவும், குறிப்பிடத்தக்க ஒரு இலக்கை அடையவும் அவர் உத்வேகமாகத் திகழ்ந்தார்.

- இந்தியக் குடியரசுத் தலைவராக அவரது பதவிக் காலம் முடிந்ததும், இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் - ஷில்லாங், இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்- இந்தூர் மற்றும் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம்- அகமதாபாத் ஆகியவற்றில் அவர் வருகைப் பேராசிரியராக திகழ்ந்தார்.

## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15

- இது கிராமப்புறங்களில் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நம் தொலைதூரக் கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் சாதனைகள் மற்றும் பங்களிப்புகளை இத்தினம் கொண்டாடுகிறது.
- பெய்ஜிங் நகரில் 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டின் போது, கிராமப்புறப் பெண்களுக்கான சர்வதேச தினத்தை உருவாக்கச் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் பரிந்துரை செய்தது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று இந்த நாளை அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கிராமப்புறப் பெண்கள், பசி மற்றும் வறுமை இல்லாத உலகிற்கான திறவுகோல்" என்பதாகும்.

## உலக கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15

- நோய்களைத் தடுப்பதற்கும் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் பயனுள்ள மற்றும் மலிவான வழியாக கருதப்படும் சோப்பினைக் கொண்டு கை கழுவுவதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உலகளாவிய கை சுகாதாரத்திற்காக ஒன்றுபடுங்கள்" என்பதாகும்.
- இந்தத் தினமானது உலக கை கழுவுதல் கூட்டாண்மை அமைப்பு மூலம் நிறுவப்பட்டது.

## உலக உணவு தினம் - அக்டோபர் 16

- 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) நிறுவப்பட்ட ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- உலகளவில் நிலவும் பசி நிலைமையினை எதிர்த்துப் போராடுவதும், அதை ஒழிக்கச் செய்வதும் இத்தினத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலக உணவு தினத்தின் கருத்துரு, "ஒருவரும் விடுபடக் கூடாது" என்பதாகும்.
- இந்தத் தினமானது முதலில் 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறுவப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் உலகப் பசிக் குறியீட்டில், இடம் பெற்ற 121 நாடுகளில் இந்தியா 107வது இடத்தைப் பெற்றது.




## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் - அக்டோபர் 17

- இது உலகளாவியப் பிரச்சினையான வறுமை பற்றியும், அது மனித உரிமைகள் மற்றும் மனித மாண்புகளை எவ்வாறு மீறுகிறது என்பது பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கான தினமாகும்.
- பாரீஸ் நகரில் நடைபெற்ற, கடும் வறுமை, வன்முறை மற்றும் பட்டினியால் பாதிக்கப் பட்டவர்களின் நினைவேந்தல் நிகழ்வானது இத்தினத்தின் முதல் சம்பவமும் வரலாற்றுப் பின்னணியும் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தின் கருத்துரு, "நடைமுறையில் அனைவருக்கும் மரியாதை" என்பதாகும்.
- இந்த ஆண்டு சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தின் 30வது ஆண்டு விழாவாகும்.

## உலக அதிர்ச்சி தினம் - அக்டோபர் 17

- உலகம் முழுவதும் அதிகரித்து வரும் விபத்துகள் மற்றும் இறப்பு மற்றும் இயலாமைக்குக் காரணமான காயங்களின் விகிதத்தைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது 2011 ஆம் ஆண்டில் இந்தியாவின் புது டெல்லியில் உருவாக்கப் பட்டது.
- நாட்டில் ஒவ்வொரு நாளும் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பதாக மதிப்பிடப் பட்டு உள்ள நிலைமையில் நாட்டில் சாலை விபத்துக்களால் ஏற்படும் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளின் விளைவாக இது உருவாக்கப்பட்டதாகும்.
- சாலைப் போக்குவரத்து விபத்து தான் உலகம் முழுவதும் நிலவும் பேரதிர்ச்சிக்கான ஒரு முக்கியக் காரணமாகும்.

## உலகப் புள்ளியியல் தினம் - அக்டோபர் 20

- உலகப் புள்ளியியல் தினமானது 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் புள்ளியியல் ஆணையத்தால் நிறுவப்பட்டது.
- புள்ளி விவரங்களின் முக்கியத்துவம் மற்றும் குடிமைச் சமூகம் மற்றும் வணிகத்தின் மேம்பாட்டில் கல்வி சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் புள்ளியியல் தினத்தின் கருத்துரு, "நிலையான மேம்பாட்டிற்கான தரவு" என்பதாகும்.

## உலக எலும்புப் புரை நோய் தினம் - அக்டோபர் 20




- எலும்புப் புரை நோய் மற்றும் வளர்சிதை மாற்றம் சார்ந்த எலும்பு நோய்க்கான தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சை பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- எலும்புப் புரை நோயினால் ஏற்ப டும் எலும்பு முறிவுகள் ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 மில்லியன் இந்தியர்களைப் பாதிக்கின்றன.
- எலும்பு ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஐக்கியப் பேரரசின் தேசிய எலும்புப் புரை நோய் சமூக அமைப்பானது 1996 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை அறிமுகப்படுத்தியது.
- எலும்புப் புரை நோயானது மனித உடலில் உள்ள எலும்புகளைப் பலவீனமாகவும், மிக எளிதாக உடையக் கூடியதாகவும் ஆக்குகிறது.
- இதனால் அவை திடீர் அசைவு, சிறிய வீழ்ச்சி, தும்மல் அல்லது கட்டி போன்ற காரணிகளினால் கூட எளிதில் உடைந்து போகும் தன்மையுள்ளதாக மாறும்.
- 2022 ஆம் ஆண்டின் உலக எலும்புப் புரை நோய் தினத்தின் கருத்துரு, 'எலும்பு ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்' என்பது ஆகும்.

## சர்வதேச சமையல் கலைஞர்கள் தினம் - அக்டோபர் 20

- சர்வதேச சமையல் கலைஞர்கள் தினம் 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது புகழ்பெற்ற சமையல் கலைஞரும் தொழிலதிபருமான மறைந்த டாக்டர் பில்லி கல்லாகரால் உருவாக்கப்பட்டது.
- இவர் தென்னாப்பிரிக்க சமையல் கலைஞர்கள் சங்கத்தின் தலைவராக 21 ஆண்டுகள் பணியாற்றினார்.
- இவர் 1996 ஆம் ஆண்டில் உலக சமையல் கலைஞர்கள் சங்கங்களின் (WACS) தலைவராகவும் பொறுப்பேற்றார்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு ‘ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்தினை நோக்கி முன்னேறுவது’ என்பது ஆகும்.

## உலகளாவிய கண்ணியம் தினம் - அக்டோபர் 19

- இது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி உலகளாவிய கண்ணியம் தினம் அனுசரிக்கப் பட்டது.
- இந்த நாள் இளைஞர்கள் தங்கள் சுய மதிப்பு மற்றும் குறிக்கோள்கள் பற்றி கற்பிப்பதற்கும் ஊக்கமளிப்பதற்கும் அவை பற்றியப் புரிதலை ஏற்படுத்துவதற்கும் அவர்களுக்கு உதவும் ஒரு முன்னெடுப்பாகும்.
- இது 2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதோடு தொடர்ந்து இதன் பிரபலம் அதிகரித்து வருகிறது.

## தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 20

- ஆயுதப் படைகளைக் கௌரவிக்கும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இது 1962 ஆம் ஆண்டில் சீனா இந்தியா மீது தாக்குதல் நடத்திய நாள் ஆகும்.
- இந்தியத் தேசத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி மேற்கொள்ளப்பட்டப் போர்களின் போது நாட்டு மக்களின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் மகத்துவத்தினைக் கொண்டாடுவதே இந்த நாளின் நோக்கமாகும்.

## காவல்துறை நினைவு தினம் - அக்டோபர் 21

- 1959 ஆம் ஆண்டு இந்தியா-சீனா எல்லைகளுக்கு இடையே பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.
- அக்டோபர் 21 ஆம் தேதியன்று லடாக்கில் 20 இராணுவ வீரர்கள் மீது சீனா துப்பாக்கிச் சூடு நடத்தியததில் 10 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர்.
- அன்று முதல் அக்டோபர் 21ஆம் தேதியன்று காவல்துறை நினைவு தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## உலக அயோடின் குறைபாட்டுத் தினம் - அக்டோபர் 21

- 2022 ஆம் ஆண்டின் உலக அயோடின் குறைபாட்டுத் தினத்தின் கருத்துரு, 'தைராய்டு மற்றும் தொடர்பு' என்பதாகும்.
- அயோடின் என்பது வளர்சிதை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உடலால் பயன்படுத்தப்படும் ஒரு கனிமமாகும்.
- இது தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்குத் தேவையான ஒரு உறுப்பாகும்.
- உடலில் தானாக அயோடின் சுரக்காது.
- உலகளவில், 2 பில்லியன் மக்கள் அயோடின் குறைபாட்டு நோய்களால் பாதிக்கப் படுகின்றனர்.
- 1992 ஆம் ஆண்டில், இந்தியாவில் மனித நுகர்வுக்கு அயோடின் கலந்த உப்பு பயன்படுத்த வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது.

## சர்வதேச பேச்சுத் திணறல் விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 22

- ❖ பேச்சுத் திணறல் அல்லது திக்குதல் எனப்படும் பேச்சுக் கோளாறு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- ❖ திணறல் என்பது பேச்சின் சரளத்தில் ஏற்படும் இடையூறுகளைக் குறிக்கிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பார்க்கப்படுதல், கேட்கப்படுதல்: முக்கியப் பேச்சுவார்த்தையில் ஏற்படும் தடுமாற்றத்தைக் குறிப்பிடுதல் மற்றும் அதனை இயல்பாக்குதல்" என்பதாகும்.

## தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 23

- ❖ இந்த தினமானது 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தன்வந்திரி ஜெயந்தி (தந்தேராஸ்) அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ தன்வந்தரி என்பவரே ஆயுர்வேதத்தின் புனித ஆரம்பமாகக் கருதப் படுகின்றார்.
- ❖ இந்த ஆண்டு 7வது தேசிய ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுகிறது.
- ❖ இந்தியாவில் இந்த ஆண்டு ஆயுர்வேத தினமானது "ஹர் தின் ஹர் கர் ஆயுர்வேதம்" என்ற கருத்துருவின் கீழ் கொண்டாடப்படுகிறது.
- ❖ ஆயுர்வேதமானது நீண்ட காலமாக மிகவும் பழமையான மற்றும் நன்கு ஆவணப் படுத்தப் பட்ட மருத்துவ முறைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச பனிச்சிறுத்தை தினம் - அக்டோபர் 23



- ❖ பனிச்சிறுத்தைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிஷ்கெக் பிரகடனத்தை 12 நாடுகள் ஏற்றுக் கொண்டதன் மூலம் இந்த தினமானது உருவாக்கப் பட்டது.
- ❖ 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதியன்று 12 நாடுகள் ஒன்றிணைந்து பனிச் சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கான பிஷ்கெக் பிரகடனத்திற்கு ஒப்புதல் அளித்தன.
- ❖ பனிச் சிறுத்தை 12 நாடுகளில் காணப்படுகிறது.
- ❖ அவை இந்தியா, நேபாளம், பூடான், சீனா, மங்கோலியா, ரஷ்யா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியனவாகும்.

## சர்வதேச கிப்பன் குரங்கு தினம் - அக்டோபர் 24




- 2015 ஆம் ஆண்டில் IUCN விலங்கினச் சிறப்பு குழுவானது கிப்பன் குரங்கு வகைகளைப் பாதுகாப்பது குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்தத் தினத்தை நிறுவியது முதல் இத்தினமானது அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- மொத்தம் 20 வெவ்வேறு வகையான கிப்பன் இனங்கள் உள்ள நிலையில், அவை சிறிய மனிதக் குரங்குகள் (குரங்குகள் அல்ல) என்றும் அழைக்கப்படுகின்றன.
- அவை வங்காளதேசம், இந்தியா, சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் மழைக் காடுகளில் காணப்படுகின்றன.

## உலக மேம்பாட்டுத் தகவல் தினம் - அக்டோபர் 24

- பல்வேறு நாடுகளின் முன்னேற்றத்தினைச் சுற்றியுள்ளப் பிரச்சனைகள் குறித்தும், அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- மேம்பாட்டுப் பிரச்சனைகளை நோக்கி உலகின் கவனத்தை ஈர்ப்பதும் அதற்கான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- குறிப்பிடத்தக்க வகையில், இந்த தேதியானது அக்டோபர் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படும் ஐக்கிய நாடுகள் சபை தினத்துடன் ஒத்துப் போகிறது.

## ஐக்கிய நாடுகள் சபை தினம் - அக்டோபர் 24

- இந்தத் தினமானது 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சாசனம் நடைமுறைக்கு வந்த ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் உட்பட அதன் கையொப்பதார பெரும்பான்மை உறுப்பினரால் இந்த ஸ்தாபன ஆவணத்திற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- இந்த சாசனமானது 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப் பட்டது.

## சர்வதேச அரசுமுறை அதிகாரிகள் தினம் - அக்டோபர் 24

- பண்டைய காலத்திலிருந்தே உலகை வடிவமைப்பதிலும், நமது புவியை வாழ்வதற்குச் சிறந்த இடமாக மாற்றுவதிலும் அரசுமுறை அதிகாரிகள் ஆற்றியப் பங்களிப்பை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.

- பொது மக்களிடையே அரசுமுறை அதிகாரிகளின் வாழ்க்கையின் கண்ணோட்டம் மற்றும் சகவாழ்வு ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் சர்வதேச அரசுமுறை அதிகாரிகள் தினமானது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று பிரேசிலியாவில் கொண்டாடப்பட்டது.
- இந்தத் தினமானது இந்தியக் கவிஞர்-அரசுமுறை அதிகாரி K.அபய் அவர்களால் முன் மொழியப் பட்டது.

## உலக போலியோ தினம் - அக்டோபர் 24

- உலக போலியோ தினமானது, 1985 ஆம் ஆண்டு ஜோனாஸ் சால்க் என்பவரின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் ரோட்டரி இன்டர்நேஷனல் நிறுவனத்தால் நிறுவப் பட்டது.
- இவர் போலியோவுக்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கிய குழுவின் ஒரு முன்னணி மருத்துவ ஆராய்ச்சியாளராக இருந்தார்.
- முதன்முதலில் 1955 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்த இந்த செயலிழந்த போலியோ வைரஸ் கொண்ட தடுப்பூசியை அவர் உருவாக்கினார்.
- இது ஆல்பர்ட் சபின் என்பவரால் வாய்வழி போலியோ தடுப்பூசியாக உருமாற்றப்பட்டு 1961 ஆம் ஆண்டில் பயன்பாட்டுக்கு வந்தது.
- இந்த ஆண்டு உலக போலியோ தினத்தின் கருத்துரு, "உலக போலியோ தினம் 2022 மற்றும் அதற்கு அப்பால்: தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்" என்பதாகும்.

## இந்தியத் திபெத்திய எல்லைக் காவல் படை எழுச்சி தினம் - அக்டோபர் 24




- இந்தியா-சீனா போரின் போது, 1962 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று இந்திய திபெத்திய எல்லை காவல் படை நிறுவப்பட்டது.
- உயரமான பகுதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்ற வகையில் இது ஒரு எல்லைக் காவல் படையாகும்.
- தற்போது, லடாக்கின் காரகோரம் கணவாய் முதல் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஜசெப் லா வரையிலான 3488 கிமீ நீள இந்திய-சீனா எல்லையை உள்ளடக்கிய எல்லைப் பாதுகாப்புப் பணிகளில் இந்திய திபெத்திய எல்லைக் காவல் படை நிலை நிறுத்தப் பட்டுள்ளது.

- இந்திய திபெத்திய எல்லைக் காவல் படையானது, ஆரம்பத்தில் 1949 ஆம் ஆண்டு மத்திய சேமக் காவல் படை (CRPF) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இருப்பினும், 1992 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் மத்திய சேமக் காவல் படை சட்டத்தை இயற்றியதோடு, அதற்கான விதிகளை 1994 ஆம் ஆண்டில் உருவாக்கியது.

## உலக ஒலிகட்புலப் பாரம்பரியத் தினம் - அக்டோபர் 27




- இது ஒலிகட்புலப் பொருட்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உறுதி செய்வதற்குமான ஒரு முயற்சியாகும்.
- உலக ஒலிகட்புலப் பாரம்பரியத் தினம் (WDAH) என்பது 1980 ஆம் ஆண்டில் நகரும் படங்களைப் பாதுகாத்தல் மற்றும் வளங்காப்பதற்கான 21வது பொது மாநாட்டின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் நினைவாக மேற்கொள்ளப்படுகிறது.
- "உள்ளார்ந்த, நீதி நிறைந்த மற்றும் அமைதியானச் சமூகங்களை உருவாக்குவதில் ஆவணப் படப் பாரம்பரியத்தைக் குறிப்பிடுதல்" என்பது இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு ஆகும்.

## காலாட்படை தினம் - அக்டோபர் 27

- நாட்டிற்காகப் போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- முதல் இந்திய காலாட்படை வீரர்கள் நாட்டின் எல்லையை வெளிப்புற ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாத்ததன் நினைவாக அக்டோபர் 27 ஆம் தேதியானது இதற்கான தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ஜம்மு காஷ்மீர் மகாராஜா ஹறி சிங், 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையடுத்து, இப்பகுதி இந்திய ஆட்சியின் ஒரு பகுதியாக மாறியது.
- விரைவிலேயே, சீக்கியப் படைப்பிரிவின் முதல் படைப்பிரிவானது பாகிஸ்தான் படையெடுப்பாளர்களுக்கு எதிராக போரிட ஸ்ரீநகர் விமானப்படைத் தளத்தை அடைந்தது.




## ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் குறைப்பு வாரம் 2022 - அக்டோபர் 24/30

- இது ஆயுதக் குறைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதிலுள்ள சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அது குறித்தப் புரிதலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது நிறுவப்பட்ட ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதமாக இந்த வாரமானது அக்டோபர் 24 ஆம் தேதியன்று தொடங்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதிலிருந்து, ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு ஆகியவை அதன் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒன்றாக உள்ளது.
- ஆயுத மோதல்களை ஆதரிக்கும் அனைத்துப் பொருட்களையும் நீக்குவதற்கு அச்சபை அழைப்பு விடுக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் குறைப்பு ஆணையம் (UNDC) 1952 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- ஆயுதக் குறைப்பு வாரமானது முதல் முறையாக 1995 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டில், ஆயுதக் குறைப்பு வாரம் முதல் முறையாக பெண்கள் தலைமையில் அனுசரிக்கப்பட்டது.

## சர்வதேச இயக்கப் படங்கள் தினம் - அக்டோபர் 28

- இயக்கப் படங்கள் முதல் முறையாக மக்கள் மத்தியில் அறிமுகமான தினத்தை இது நினைவு கூருகிறது.
- இது 1892 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் தேதியன்று, பாரீஸில் உள்ள கிரெவின் அருங் காட்சியகத்தில், சார்லஸ்-எமைல் ரெய்னாட், அவரது தியேட்ரே ஆப்டிக் மூலம் தனது முதல் தயாரிப்பான "பாண்டோமிம்ஸ் லுமினியஸ்" என்ற படத்தினை வெளியிட்டார்.
- இது இயக்கப்படக் கலையைக் கொண்டாடுவதையும், அவற்றின் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள கலைஞர்கள், அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோரை அங்கீகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு 20வது சர்வதேச இயக்கப்படங்கள் தினத்தைக் குறிக்கிறது.
- சர்வதேச இயக்கப்படங்கள் திரைப்படச் சங்கமானது (ASIFA) 2002 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தினை உருவாக்கியது.

## உலக ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு வாரம் - அக்டோபர் 24 முதல் 30 வரை

- மக்கள், ஊடகங்கள், எண்ணிம தளங்கள், அரசுகள், தனியார் துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் தொடர்புடைய நம்பிக்கை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மீது இது கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டு உலக ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு வாரத்திற்கான கருத்துரு, "நம்பிக்கையை உருவாக்குதல்: ஒரு ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவின் அவசியம்" என்பதாகும்.
- 11வது உலக ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு (MIL) வாரம் நைஜீரியா நாட்டினால் ஏற்பாடு செய்யப்படுவதோடு அபுஜா நகரில் அனுசரிக்கப்படுகிறது.
- முதல் உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் கல்வியறிவு வாரம் ஆனது 2011 ஆம் ஆண்டில் மொராக்கோவின் ஃபெஸ் நகரில் அனுசரிக்கப்பட்டது.




## உலக பக்கவாதம் தினம் - அக்டோபர் 29

- இந்தத் தினமானது பக்கவாதத்தின் தீவிர இயல்பு மற்றும் உயர் பாதிப்பு விகிதங்கள் குறித்து வலியுறுத்துகிறது.
- பக்கவாதத்தைத் தடுப்பது மற்றும் அதற்கான சிகிச்சைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்றவற்றிற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலக பக்கவாதம் தினமானது 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று கனடாவின் வான்கூவரில் நடைபெற்ற பக்கவாதம் குறித்த உலக மாநாட்டில் நிறுவப் பட்டது.
- பின்னர் 2006 ஆம் ஆண்டில், பொது விழிப்புணர்வுக்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "#விலைமதிப்பற்ற நேரம்" என்பதாகும்.



## உலக சிக்கன தினம் / உலக சேமிப்புத் தினம் - அக்டோபர் 30




- இது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1924 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதியன்று நடைபெற்ற முதல் சர்வதேச சேமிப்பு வங்கி மாநாட்டின் போது உலக சேமிப்பு தினம் நிறுவப்பட்டது.
- இத்தாலியப் பேராசிரியர் ஃபிலிபோ ரவிசா என்பவர் இந்தத் தினத்தினை அனுசரிக்கச் செய்வதற்கான முன்மொழிதலை முன் வைத்தார்.
- சிக்கனத்தின் மூலம் பணத்தைச் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதே இந்த நாளின் பின்னணியில் உள்ள கருத்தாக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "சேமிப்புப் பழக்கம் உங்களை எதிர் காலத்திற்கு தயார்படுத்துகிறது" என்பதாகும்.

## ஜம்மு காஷ்மீர் இணைப்பு தினம் - அக்டோபர் 26




- 1947 ஆம் ஆண்டில் மகாராஜா ஹரி சிங், ஜம்மு மற்றும் காஷ்மீரை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தினத்தை இது நினைவு கூருகிறது.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் இணைப்புத் தினமானது, 2020 ஆம் ஆண்டில் ஜம்மு மற்றும் காஷ்மீரில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் பொது விடுமுறை நாளாக மாற்றப் பட்டது.

- முதலில், மகாராஜா ஹரி சிங் தனது மாநிலத்தின் சுதந்திரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிவு செய்து, இரு அண்டை நாடுகளுடனும் நிலைத்தன்மை ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.
- இருப்பினும், பதான் பழங்குடியினர் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த இராணுவ வீரர்களின் தாக்குதல்களை எதிர் கொண்ட அவர், இந்தியாவின் உதவியை நாடினார்.
- இவ்வாறு, மகாராஜா 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று, இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

## தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 31

- ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் அல்லது தேசிய ஒற்றுமை தினமானது, 2014 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- இது இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- இவர் சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும், துணைப் பிரதமராகவும் விளங்கினார்.
- பர்தோலி பகுதியைச் சேர்ந்த பெண்கள் வல்லபாய் படேல் அவர்களுக்கு 'தலைவர்' என்று பொருள்படும் வகையில் 'சர்தார்' என்ற பட்டத்தை வழங்கினர்.

## உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31

- உலகின் நகர்ப்புறச் சவால்களை வலியுறுத்தச் செய்வதையும், புதிய நகர்ப்புறச் செயல்பாட்டு நிரலை நோக்கி சர்வதேசச் சமூகத்தை ஈடுபடுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "உலகில் முன்னேறிச் செல்ல உள்ளூர் சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கை" என்பதாகும்.



# இதரச் செய்திகள்

## ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் 2022

- கௌதம் அதானி மற்றும் குடும்பத்தினர் 2022 ஆம் ஆண்டு IIFL ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளனர்.
- இந்தியாவின் 2வது பணக்காரர்களாக முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பத்தினர் இடம் பெற்றுள்ளனர்.
- நைக்கா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, ஃபல்குனி நாயர் இந்தியாவின் சுயமாக முன்னேறிய பணக்காரப் பெண்மணி மற்றும் இந்தியாவின் பணக்காரப் பெண்மணி ஆனார்.
- நிகர மதிப்பில் பயோகான் நிறுவனத்தின் தலைவர் கிரண் மசூம்தார் ஷாவை இவர் முந்தினார்.
- ஃபல்குனியை அடுத்து, ரேகா ஜுன்ஜுன்வாலா இடம் பெற்றுள்ளார்.
- இந்தியாவில் 221 கோடீஸ்வரர்கள் உள்ளனர்.
- அதில் 283 நபர்களுடன் இந்தியப் பணக்காரர்கள் பட்டியலில் மும்பை முதலிடத்தில் உள்ளது.
- அதனைத் தொடர்ந்து புது டெல்லி (185) மற்றும் பெங்களூரு (89) ஆகியவை இடம் பெற்றுள்ளன.



India's richest people
Wealth as released by Hurun India Rich List 2022

| Rank | Name | Wealth (Rs crore) | Change in wealth | Company |
|---|---|---|---|---|
| 1 | Gautam Adani | 1,094,400 | 116% | Adani |
| 2 | Mukesh Ambani | 794,700 | 11% | Reliance Industries |
| 3 | Cyrus S Poonawalla | 205,400 | 25% | Serum Institute of India |
| 4 | Shiv Nadar | 185,800 | -21% | HCL |
| 5 | Radhakishan Damani | 175,100 | 13% | Avenue Supermarts |

## வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை

- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அதன் விளைவாக கடுமையாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 44.5% குறைந்துள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் 2.74 மில்லியன் ஆக இருந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கையானது, 2021 ஆம் ஆண்டில் 1.52 மில்லியனாக குறைந்தது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களின் வருகையானது 2020 ஆம் ஆண்டினை விட 2021 ஆம் ஆண்டில் 52.6% அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 10.93 மில்லியன் ஆக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவிற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பட்டியலில் முதல் 15 இடங்களில் இடம் பெற்ற நாடுகளுள் அமெரிக்கா, இங்கிலாந்து, வங்காளதேசம், கனடா, நேபாளம், ஆப்கானிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும்.
- கடந்த ஆண்டில் இந்தியாவிற்கு வருகை வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் கிட்டத்தட்ட 81% பேர் இந்த நாடுகளில் இருந்து வருகை தந்துள்ளனர்.
- 87.5% வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு விமானப் பயணம் ஆனது மிகவும் விருப்பமிக்க பயண வசதியாக இருந்தது.
- இந்திய நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்திய மக்களின் எண்ணிக்கை என்பது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 7.29 மில்லியனாக இருந்த வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்திய மக்களின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 7.3% அதிகரித்து, 8.55 மில்லியன் ஆக இருந்தது.




- 2021 ஆம் ஆண்டில் இந்தியர்கள் அதிகம் பயணிக்கும் நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகம் முதலிடத்தில் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து அமெரிக்கா, கத்தார், ஓமன் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.
- இந்தியாவில் உள்நாட்டுச் சுற்றுலா 11.05% என்ற நிலையில் அதிகரித்ததுடன் சிறிய முன்னேற்றத்தினையும் இத்துறை கண்டது.
- 2020 ஆம் ஆண்டில் 610.22 மில்லியனாக இருந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 677.33 மில்லியனாக இருந்தது.

- இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் ஜக்தீப் தன்கர் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தேசியச் சுற்றுலா விருதுகளில் முதலிடம் பிடித்தமைக்காக உத்தரகாண்ட், மகாராஷ்டிரா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களுக்கு அந்த விருதுகளை வழங்கினார்.

## 32வது உலக நிதி மையக் குறியீடு

The top 20 centres in GFCI 30 are shown in the table below.

| Centre | GFCI 30 | | GFCI 29 | | Change In | Change In |
|---|---|---|---|---|---|---|
| | Rank | Rating | Rank | Rating | Rank | Rating |
| New York | 1 | 762 | 1 | 764 | 0 | ▼2 |
| London | 2 | 740 | 2 | 743 | 0 | ▼3 |
| Hong Kong | 3 | 716 | 4 | 741 | ▲1 | ▼25 |
| Singapore | 4 | 715 | 5 | 740 | ▲1 | ▼25 |
| San Francisco | 5 | 714 | 12 | 718 | ▲7 | ▼4 |
| Shanghai | 6 | 713 | 3 | 742 | ▼3 | ▼29 |
| Los Angeles | 7 | 712 | 13 | 716 | ▲6 | ▼4 |
| Beijing | 8 | 711 | 6 | 737 | ▼2 | ▼26 |
| Tokyo | 9 | 706 | 7 | 736 | ▼2 | ▼30 |
| Paris | 10 | 705 | 25 | 699 | ▲15 | ▲6 |
| Chicago | 11 | 704 | 15 | 714 | ▲4 | ▼10 |
| Boston | 12 | 703 | 24 | 703 | ▲12 | 0 |
| Seoul | 13 | 702 | 16 | 713 | ▲3 | ▼11 |
| Frankfurt | 14 | 701 | 9 | 727 | ▼5 | ▼26 |
| Washington DC | 15 | 700 | 14 | 715 | ▼1 | ▼15 |
| Shenzhen | 16 | 699 | 8 | 731 | ▼8 | ▼32 |
| Amsterdam | 17 | 698 | 28 | 695 | ▲11 | ▲3 |
| Dubai | 18 | 694 | 19 | 710 | ▲1 | ▼16 |
| Toronto | 19 | 693 | 29 | 694 | ▲10 | ▼1 |
| Geneva | 20 | 692 | 20 | 709 | 0 | ▼17 |

- உலகின் முதல் மூன்று நிதி மையங்களாக நியூயார்க், இலண்டன் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை திகழ்கின்றன.
- இலண்டனில் உள்ள Z/யென் குழுமமும், ஷென்செனில் உள்ள சீன மேம்பாட்டு நிறுவனமும் கூட்டாக இணைந்து இதனை வெளியிட்டுள்ளன.
- இது ஆண்டிற்கு இருமுறை வெளியிடப் படுகிறது.
- இதில் கடந்த நான்கு ஆண்டுகளாக நியூயார்க் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் ஹாங்காங்கைப் பின்னுக்குத் தள்ளி சிங்கப்பூர் மூன்றாவது இடத்தைப் பிடித்து உள்ளது.
- அதே சமயம் இதில் ஹாங்காங் நான்காவது இடத்தில் உள்ளது.
- இந்தத் தரவரிசையில் சான் பிரான்சிஸ்கோ ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- இதில் டோக்கியோ நகரைப் பின்னுக்குத் தள்ளி பாரீஸ் நகரம் முதல் 10 இடங்களுக்குள் மீண்டும் இடம் பெற்றுள்ளது.
- இதில் மாஸ்கோ 22 இடங்கள் சரிந்து 73வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில், புது டெல்லி மற்றும் மும்பை ஆகியவை முறையே 68வது மற்றும் 70வது இடத்தில் உள்ளன.

## உலகப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு (GOOS) அறிக்கை

- இது நமது உலகப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பின் (GOOS) நிலை, திறன் மற்றும் மதிப்பு பற்றிய ஒரு ஆழ்ந்த ஆய்வறிக்கையினை வழங்குகிறது.
- உலகப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு என்பது பெருங்கடல் கண்காணிப்புத் தேவைகளை வரையறுக்கச் செய்யவும், கண்காணிப்பு வலையமைப்புகளை ஒருங்கிணைக்கவும், தரவு மற்றும் முன்னறிவிப்புகளின் பரிமாற்றங்களை உறுதிப் படுத்தவும் உதவும் ஆறு முக்கியக் கூறுகளைக் கொண்ட ஒரு கூட்டுத் தளமாகும்.
- உலகப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு என்பது அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையத்தின் (IOC) தலைமையிலான ஒரு திட்டமாகும்.
- அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையமானது யுனெஸ்கோ அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- இந்த அறிக்கையின்படி, உலகப் பெருங்கடல்களில் உள்ள கார்பன் செறிவைக் கண்காணிப்பதற்கான அமைப்பானது, கடல்சார் கார்பன் பற்றிய தகவல்களுக்கான வளர்ந்து வரும் மற்றும் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்ய மிகவும் போதுமானதாக இல்லை.
- மனித நடவடிக்கைகளால் ஆண்டுதோறும் வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும் 40 ஜிகா டன் கார்பனில் 26 சதவீதம் பெருங்கடல்களால் உறிஞ்சப்படுகிறது.

## TIME100 Next அறிக்கை

- ஆகாஷ் அம்பானி, டைம் பத்திரிக்கையின் உலகளாவிய வளர்ந்து வரும் 100 முன்னணி நட்சத்திர நாயகர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- TIME இதழ் ஆனது ஒவ்வோர் ஆண்டும் TIME100 Next அறிக்கையினை வெளியிடுகிறது.
- இது இதன் முதன்மை வெளியீடான, உலகளாவில் வளர்ந்து வரும் 100 முன்னணி நட்சத்திர நாயகர்கள் அங்கீகரிக்கின்ற TIME100 அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்தியர் ஆகாஷ் அம்பானி தான் என்று கூறப்படுகிறது.

## உலகப் புத்தாக்கக் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டின் உலகப் புத்தாக்கக் குறியீட்டில் (GII) இடம் பெற்றுள்ள 132 நாடுகளில் இந்தியா 40வது இடத்தைப் பிடித்தது.
- இது உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "புதுமை சார்ந்த மேம்பாட்டின் எதிர் காலம் என்ன?" என்பதாகும்.
- சுவிட்சர்லாந்து நாடானது, 2022 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 12வது ஆண்டாக உலகில் மிகவும் புதுமை மிக்க பொருளாதாரமாக உள்ளது.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா, சுவீடன், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

- சீனா முதல் 10 இடங்களுக்குள் இடம்பெறும் வாய்ப்பினை நெருங்கி உள்ளது.
- துருக்கி மற்றும் இந்தியா ஆகியன முதல் முறையாக முதல் 40 இடங்களுக்குள் இடம் பெறுகின்றன.




## ஹுருன் இந்தியா 40 மற்றும் அதற்குட்பட்ட வயதினைச் சேர்ந்தச் சுயமாக முன்னேறியப் பணக்காரர்கள் பட்டியல் 2022

| Rank | Name | Wealth INR Cr |
|---|---|---|
| 1 | Nikhil Kamath | 17,500 |
| 2 | Bhavish Aggarwal | 11,700 |
| 3 | DivyankTurakhia | 11,200 |
| 4 | Nakul Aggarwal | 9,900 |
| 4 | Ritesh Arora | 9,900 |
| 6 | Binny Bansal | 8,100 |
| 7 | Ritesh Agarwal | 6,300 |
| 8 | HarshilMathur | 5,500 |
| 8 | Shashank Kumar | 5,500 |
| 10 | Neha Narkhede& family | 4,700 |

- 2022 ஆம் ஆண்டிற்கான IIFL சொத்து ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ஸெரோதா நிறுவனத்தின் இணை நிறுவனர் நிகில் கமத், இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- ஓலா நிறுவனத்தின் நிறுவனர் பவிஷ் அகர்வால் இரண்டாம் இடத்தினைப் பிடித்து உள்ளார்.
- மீடியா.நெட் நிறுவனத்தின் தலைவர் திவ்யாங்க் துராக்கியா மூன்றாவது இடத்தில் பெற்றுள்ளார்.

## இந்தியாவின் 50 முக்கியமான ஜவுளி வகைகள்

- சமீபத்தில், யுனெஸ்கோ அமைப்பானது நாட்டின் 50 பிரத்தியேக மற்றும் முக்கியமான பாரம்பரிய ஜவுளி வகைகளின் பட்டியலை வெளியிட்டது.
- தெற்காசியாவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் உள்ள முக்கிய சவால்களில் ஒன்று, அவை குறித்தத் தகவல்களின் முறையான காப்பகம் மற்றும் ஆவணங்கள் இல்லாததே ஆகும்.
- இந்த இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த வெளியீடானது, தேர்ந்தெடுக்கப் பட்ட 50 ஜவுளிகள் பற்றிய பல வருட ஆராய்ச்சிகளை ஒன்றிணைக்கச் செய்கிறது.
- பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஜவுளி வகைகள்
  - தமிழ்நாட்டைச் சேர்ந்த சிக்கல்நாயக்கன்பேட்டை கலம்காரி
  - தமிழ்நாட்டைச் சேர்ந்த தோடா பூவேலைப்பாடுகள் மற்றும் சுங்குடி
  - ஹைதராபாத்தினைச் சேர்ந்த ஹிம்ரூ நெசவு வகைகள்
  - ஒடிசாவின் சம்பல்பூர் நகரைச் சேர்ந்த பந்தா கழுத்துப் பட்டி மற்றும் சாயமிட்டு மேற்கொள்ளப்படும் நெசவு வகைகள்
  - கோவாவினைச் சேர்ந்த குன்பி நெசவு வகை
  - குஜராத்தைச் சேர்ந்த மஷ்ரு நெசவு மற்றும் படோலா
  - மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஹிம்ரூ
  - மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த கரட்-கோரியல்
  - கர்நாடகாவினைச் சேர்ந்த இல்கல் மற்றும் லம்பாடி அல்லது பஞ்சாரா பூ வேலைப் பாடுகள்.

## ICIMOD அமைப்பின் அறிக்கை




- தெற்காசியா மற்றும் இந்து குஷ் இமயமலை (HKH) பிராந்தியத்தில் பாலினச் சமத்துவ நிலை மற்றும் பருவநிலை மாற்றம்" என்ற அறிக்கையினை ஒருங்கிணைந்த மலைப் பிரதேச வளர்ச்சிக்கான சர்வதேச மையம் (ICIMOD) அமைப்பானது வெளியிட்டது.

- இது வேளாண்மை, நீர் மற்றும் எரிசக்தி போன்ற பருவநிலையினால் பாதிக்கப்பட்ட துறைகளில் பாலின சமத்துவம் மற்றும் பருவநிலை மாற்றத்தின் நிலையை மதிப்பீடு செய்தது.
- ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூட்டான், சீனா, இந்தியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய 10 நாடுகளில் இந்த அறிக்கை மதிப்பீட்டினை மேற்கொண்டது.
- பருவநிலை மாற்றத்தால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதை இந்த நாடுகளின் தேசியக் கொள்கை வெளிப்படுத்துகின்றன.
- சீனா, இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட ஆண்களின் இடப் பெயர்வுகள் அதிகம் பதிவாகியுள்ளன.
- பெண் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக வேண்டி பிராந்திய மற்றும் தேசியக் கொள்கைகள் எதுவும் இல்லை.
- தெற்காசியா மற்றும் இந்துகுஷ் இமயமலைப் பிராந்தியங்களில் உள்ள அரசாங்கங்களின் கொள்கை ஆவணங்கள் பாலின அடிப்படையிலான ஊதிய இடைவெளியினைச் சரி செய்வதில் எந்தவித கவனமும் செலுத்துவதில்லை.
- பருவநிலை மாற்றத்தை மேலாண்மை செய்வதற்கான இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப் பட்ட பங்களிப்புகள் (NDC) ஆனது பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அங்கீகரித்ததாக இந்த அறிக்கை எடுத்துரைத்தது.
- பாலின உள்ளடக்கம் மிக்க கொள்கைகளை உருவாக்க வேளாண்மை, எரிசக்தி மற்றும் நீர் வளத் துறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்யப் பரிந்துரைக்கிறது.

## வறுமை மற்றும் பகிரப்பட்ட வளம் 2022 - சரிசெய்யும் நடைமுறை




- உலக வங்கியானது "வறுமை மற்றும் பகிரப்பட்ட வளம் 2022 - சரிசெய்யும் நடைமுறை" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- 2015 ஆம் ஆண்டிலிருந்து உலகளாவிய வறுமைக் குறைப்பு நடைமுறையின் வேகம் குறைந்து வருகிறது.
- 2015 ஆம் ஆண்டு வாக்கில், உலகளாவிய தீவிர-வறுமை விகிதம் பாதிக்கு மேல் குறைக்கப் பட்டது.

- 2020 ஆம் ஆண்டில் மட்டும், தீவிர வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை 70 மில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- 1990 ஆம் ஆண்டில் உலகளாவிய வறுமைக் கண்காணிப்பு தொடங்கியதில் இருந்து இது ஒரு வருடத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய அதிகரிப்பாகும்.
- தற்போதையப் போக்குகளின் அடிப்படையில், 574 மில்லியன் மக்கள் (உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 7%) 2030 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்கின்ற நிலையில், இதில் பெரும்பாலானவர்கள் ஆப்பிரிக்காவில் உள்ளனர்.
- 2011 ஆம் ஆண்டை விட 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் தீவிர வறுமை 12.3% புள்ளிகள் குறைவாக இருந்தது.
- 2011 ஆம் ஆண்டில் 22.5% ஆக இருந்த வறுமையின் உள்ளவர்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 10.2% ஆகக் குறைந்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் 26.3% ஆக இருந்த கிராமப்புற வறுமை 2019 ஆம் ஆண்டில் 11.6% ஆகக் குறைந்ததால், நகர்ப்புற இந்தியாவுடன் ஒப்பிடும் போது கிராமப்புறங்களில் வறுமைக் குறைப்பு அதிகமாக இருந்தது.
- இதே காலக் கட்டத்தில் நகர்ப்புறங்களில் வறுமையின் சரிவு 14.2% என்ற அளவிலிருந்து 6.3% ஆக இருந்தது.

## துர்கா பூஜை பந்தல்

- லக்னோவின் ஜானகிபுரத்தில் அமைக்கப் பட்ட 136 அடி உயரமுள்ள துர்கா பூஜை என்ற பந்தல், உலகிலேயே மிக உயரமானதாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க உள்ளது.
- இந்தப் பந்தல் பிருந்தாவனத்தின் சந்திரோதயா கோவிலின் பிரதியாக , 14 மாடி கட்டிட உயரத்தில் உள்ளது.
- இதற்கு முன், உலகின் மிக உயரமானப் பந்தல் என்ற பட்டத்தை 125 அடி உயரம் கொண்ட கொல்கத்தாவின் பந்தல் பெற்றிருந்தது.



## உலக வனத்துறை கண்ணோட்ட அறிக்கை 2050

- "உலகளாவிய வனத்துறை கண்ணோட்டம் 2050: ஒரு நிலையான பொருளாதாரத்திற்கான எதிர்காலத் தேவை மற்றும் மரங்களின் வளங்களை மதிப்பீடு செய்தல்" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.

- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- முதன்மையான பதப்படுத்தப்பட்ட மரப் பொருட்களின் நுகர்வானது 2050 ஆம் ஆண்டில் 3.1 பில்லியன் கன மீட்டராக அதிகரிக்கும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் அவற்றின் தேவை 272 மில்லியன் கன மீட்டர்கள் வரை உயரக் கூடும்.
- இது வளர்ந்து வரும் நாடுகளில் 1 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளால் தொழில்துறைப் பயன்பாடு சார்ந்த மரங்களின் உற்பத்தி (IRW) பாதிக்கப்படும் என்றும் இந்த அறிக்கை கணித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், தொழில்துறை பயன்பாடு சார்ந்த மரங்களின் உற்பத்தியில் சுமார் 44 சதவீதம் மித வெப்ப மற்றும் போரியல் வகை காடுகளால் உருவாக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில், எரிபொருள் பயன்பாடு சார்ந்த மரத்தின் உலகளாவிய நுகர்வு 1.9 பில்லியன் கன மீட்டராக இருந்தது.
- 2050 ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை 2.1 முதல் 2.7 பில்லியன் கன மீட்டரை எட்டுவதன் மூலம் 11 முதல் 42 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## 'வனத்துறையில் பல்லுயிர்ப் பெருக்கத்தை முதன்மைப்படுத்துதல்' பற்றிய அறிக்கை

- காடுகள், மரங்கள் மற்றும் வேளாண் வனவியல் தொடர்பான சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மீதான ஆலோசனைக் குழுமத்தின் (CGIAR) ஆராய்ச்சித் திட்டத்தின் முதன்மை மையமான லாப நோக்கற்ற சர்வதேச வனவியல் ஆராய்ச்சி மையம் (CIFOR) மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டாண்மை மூலம் இந்த அறிக்கையானது தயாரிக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டில், உணவு மற்றும் வேளாண் அமைப்பானது, வேளாண் துறைகளில் பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்துவதற்கான உத்தியை ஏற்றுக்கொண்டது.
- பல்லுயிர்ப் பெருக்கத்தை முதன்மைப்படுத்துதல் என்பது இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக முக்கியப் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் கொள்கைகள், உத்திகள் மற்றும் நடைமுறைகளில் பல்லுயிர்ப் பெருக்கம் பற்றிய கருத்துகளை உட்சேர்ப்பதாகும்.
- சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மீதான ஆலோசனை குழுமம் என்பது உணவுப் பாதுகாப்பு குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள சர்வதேச நிறுவனங்களை ஒன்றிணைக்கும் ஒரு உலகளாவியக் கூட்டாண்மை ஆகும்.
- காடுகள் உலகின் நிலப்பரப்பில் 31 சதவீதத்தை உள்ளடக்கியதோடு, 296 ஜிகா டன்கள் கார்பனைச் சேமிக்கின்றன.
- உலகிலுள்ள காடுகள் 80 சதவீத இருவாழிட உயிரினங்கள், 75 சதவீத பறவை இனங்கள் மற்றும் 68 சதவீதப் பாலூட்டி இனங்களுக்கு வாழ்விடங்களை வழங்குகின்றன.
- கூடுதலாக, அனைத்து வகை காற்றுச் சுவர் கொண்ட தாவரங்களில் (வாஸ்குலர் தாவரங்கள்) 60 சதவீதம் வெப்ப மண்டலக் காடுகளில் காணப் படுகின்றன.




## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானம்

- இந்தியக் கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி, 'துரோணி' என்ற பெயரிலான குவாட்காப்டர் நுகர்வோர் ஒளிப்படக் கருவி ஆளில்லா விமானத்தை அறிமுகப் படுத்தி உள்ளார்.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒளிப்படக் கருவி பொருந்திய ஆளில்லா விமானம் ஆனது மேம்பட்ட அம்சங்களுடன் கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தால் தயாரிக்கப் பட்டதாகும்.

- இது விவசாயத்திற்குப் பூச்சிக் கொல்லி தெளித்தல், சூரிய சக்தி ஒளித் தகடுகளைச் சுத்தம் செய்தல், தொழிற்சாலைகளில் உள்ள குழாய் ஆய்வுகள், வரைபடமிடல், கணக்கெடுப்பு, பொது அறிவிப்புகள் மற்றும் விநியோகச் சேவைகளுக்கு இந்த ஆளில்லா விமானம் தனது சேவைகளை வழங்குகிறது.



## எத்தீரியம் இணைய சங்கேதப் பணத்தின் "தி மெர்ஜ்"




- எத்தீரியம் உலகின் இரண்டாவது மதிப்பு மிக்க இணைய சங்கேதப் பணம் ஆகும்.
- எத்தீரியம் அதன் நிலைமாற்றத்தை முதன்மை அமைப்பில் ப்ரூஃப்-ஆஃப்-வொர்க் (போட்டித் திறன் மிக்க சரிபார்ப்பு முறை) என்பதிலிருந்து ப்ரூஃப்-ஆஃப்-ஸ்டேஜிற்கு (தேர்ந்தெடுக்கப்பட்ட சரிபார்ப்புக் காரணி முறை) நிறைவு செய்தது.
- இது மெர்ஜ் என்றும் அழைக்கப்படுகிறது.
- இணைய சங்கேதப் பணங்களின் கார்பன் தடயத்தைக் குறைப்பதாகக் கூறி அதன் பாதுகாப்பை அதிகரிக்க உறுதியளிக்கிறது.
- மெர்ஜ் எத்தீரியம் வலையமைப்பில் பரிவர்த்தனைகளை மிகவும் பாதுகாப்பானதாக ஆக்கும்.
- எத்தீரியம் என்பது ஒரு பரவலாக்கப்பட்ட இணைய சங்கேதப் பணமாகும்.
- அதன் வலையமைப்பில் நடைபெறும் பரிவர்த்தனைகளை அங்கீகரிக்கும் வங்கிகள் போன்ற நிறுவனங்கள் இதில் இல்லை.

## என்செலடஸ் பெருங்கடல்

- என்செலடஸ் சனிக் கோளின் ஆறாவது பெரிய துணைக்கோள் ஆகும்.
- சமீபத்தில், அறிவியலாளர் குழு ஒன்று சனிக் கோளின் துணைக் கோளான என்செலடஸின் மேற்பரப்பு கடலில் பாஸ்பரஸ் கரைந்துள்ளதைக் கண்டுபிடித்தது.

- ❖ இது விண்வெளியில் வெளிப்படுகின்ற ஒரு பனி மூடிய நீர் கடலான என்செலடஸ் பெருங்கடலின் ஒரு முக்கியக் கட்டுமானத் தொகுதிக்கான புதிய ஆதாரங்களை வழங்குகிறது.
- ❖ காசினி விண்கலம் மேற்கொண்ட கண்காணிப்புகளின் படி, இது நிலப்பரப்பு சார்ந்த வாழ்வியலின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தொகுதியை உருவாக்குகிறது.
- ❖ பாஸ்பரஸ் என்பது உயிரினங்களை உருவாக்கும் டிஎன்ஏ, உயிரி இழைகள் மற்றும் எலும்புகளுக்கு இன்றியமையாத ஒரு உறுப்பு ஆகும்.
- ❖ பாஸ்பரஸ் தண்ணீரில் கரைந்திருந்தால் மட்டுமே உயிரினங்களால் அதனைப் பயன்படுத்த முடியும்.
- ❖ என்செலடஸில் உள்ள நீரைப் பூமியில் உள்ள நீருடன் ஒப்பிடும் போது அதிக காரத் தன்மை உடையது மற்றும் ஆக்ஸிஜன் இல்லாததாகும்.




## டைம்ஸ் உயர்கல்வி இதழின் உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2023

- ❖ டைம்ஸ் உயர் கல்வி (THE) இதழின் 2023 ஆம் ஆண்டிற்கான தரவரிசையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- ❖ கல்வி (30%), ஆராய்ச்சி (30%), பாராட்டுகள் (30%), சர்வதேசக் கண்ணோட்டம் (7.5%) மற்றும் தொழில்துறை விளைவு (2.5%) ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனங்கள் தர வரிசைப் படுத்தப் படுகின்றன.
- ❖ கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில், ஒரு நன்மதிப்புக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொன்றிற்கும் 15% மதிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ தரவரிசையில் இடம் பெற்ற 75 பல்கலைக்கழகங்களுடன் 2023 ஆம் ஆண்டிற்கான தர வரிசையில் இந்தியா ஆறாவது அதிகப் பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக திகழ்கிறது.
- ❖ இந்தியக் கல்வி நிறுவனங்களில் இந்திய அறிவியல் கழகம் (IISc) முதலிடத்தில் உள்ளது.
- ❖ உலகளவில், இந்திய அறிவியல் கழகம் (IISc) 251-300 என்ற குழுவில் இடம் பெற்றுள்ளது.
- ❖ இந்திய நிறுவனங்களில் இரண்டாவது இடத்தை இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த ஷூலினி உயிரித் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை அறிவியல் பல்கலைக்கழகம் (மொத்தம் 351-400) பெற்றுள்ளது.

- 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் இரண்டாவது முன்னணி இந்திய நிறுவனமாக இருந்த ரோபார் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது 6வது இடத்திற்குச் சரிந்தது.
- இதில் தமிழ்நாட்டின் அழகப்பா பல்கலைக்கழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றது.




## லிவிங் பிளானட் அறிக்கை 2022




- லிவிங் பிளானட் அறிக்கை (2022) என்பது உலக வனவிலங்கு நிதியம் மற்றும் லண்டனின் விலங்கியல் சங்கம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- 1970 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலக வனவிலங்குகளின் எண்ணிக்கையில் 69 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள தனித்து வாழும் விலங்குகளில் 69 சதவீதம் குறைந்து விட்டது என பொருள்படாது.
- இந்த அறிக்கை 5,230 இனங்களைச் சேர்ந்த 32,000 உயிரினங்களை ஆய்வு செய்தது.
- அமேசான் மழைக்காடுகள் அமைந்துள்ள இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதியில், 1970 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 94 சதவீத வன விலங்குகளின் எண்ணிக்கையில் மிக அதிகமான சரிவானது பதிவாகியுள்ளது.
- இதே காலக் கட்டத்தில் ஆப்பிரிக்காவில் இரண்டாவது அதிகபட்ச சரிவாக 66 சதவிகிதமும், அதைத் தொடர்ந்து பசிபிக் பகுதியில் 55 சதவிகிதமும் பதிவாகியுள்ளன.
- வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய பகுதிகளில் முறையே 20 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற அளவில் சரிவு பதிவாகி குறைவான இயற்கை வீழ்ச்சி என்ற அளவில் பதிவாகி உள்ளது.

- நன்னீர் வாழ் இனங்களின் எண்ணிக்கை 83 சதவீதம் குறைந்துள்ளது.
- சதுப்பு நிலங்களில் மீன்வளர்ப்பு, வேளாண்மை மற்றும் கடலோர வளர்ச்சி ஆகியவற்றில் ஆண்டிற்கு 0.13% வீதம் தொடர்ந்து இழப்பு ஏற்படுகின்றன.
- இந்தியா மற்றும் வங்காளதேசத்தில் உள்ள சுந்தரவன சதுப்புநிலக் காடுகளில் சுமார் 137 சதுர கிலோமீட்டர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் கடல் அரிப்பிற்கு உள்ளாக்கப் பட்டன.

## நட்புறவு இருக்கைகள்

- 2022 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பை கத்தார் போட்டியில் பங்கேற்கும் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், போட்டியாளர்களின் மனநலத்தை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி 32 'நட்புறவு இருக்கைகள், கத்தாரைச் சுற்றியுள்ள சில முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- உலக மனநலத் தினத்தினை முன்னிட்டு, தோஹா நகரில் உள்ள 974 அரங்கில் முதல் இருக்கைகளின் தேர்வு குறித்து அறிவிக்கப்பட்டது.
- முன்னதாக, கத்தார் அறக்கட்டளையின் உலகளாவிய சுகாதார மாநாட்டில் இங்கிலாந்து அமர்வின் முன்னோட்டத்துடன் இந்த இருக்கை நிறுவல் முன்னெடுப்பு என்பது தொடங்கப் பட்டது.




## பல வகையான ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளின் உலகளாவிய நிலை — இலக்கு G

- ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் மற்றும் உலக வானிலை அமைப்பு ஆகியவை இணைந்து இந்த அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின் சில தகவல்களானது, செண்டாய் கட்டமைப்புக் கண்காணிப்பு அமைப்பின் தரவு மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- செண்டாய் கட்டமைப்பு அமைப்பின் இலக்கு G ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் பல வகையான ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகள் (MHEWS) மற்றும் பேரிடர் ஆபத்து தகவல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் கிடைக்கும் தன்மை மற்றும் அணுகல் ஆகியவற்றை அதிகரிக்க முயல்கிறது.
- உலகில் உள்ள 50 சதவீத நாடுகளில் இயற்கைப் பேரிடர்களுக்கு எதிரான முன்னெச்சரிக்கை அமைப்புகள் இல்லை.
- ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் அரபு மற்றும் கரீபியன் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளில் பல வகையான ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகள் மிகக் குறைந்த அளவு பரப்பளவில் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன.

- சராசரியாக, ஒவ்வொரு பிராந்தியத்திலும் குறைந்தபட்சம் 40% நாடுகள் பல வகையான ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளைப் பயன்படுத்தச் செய்வதாகப் பதிவு செய்துள்ளன.
- குறைந்த அளவு வளர்ந்த நாடுகளில் (LDC) பாதிக்கும் குறைவானவை மற்றும் சிறிய வளர்ந்து வரும் தீவு நாடுகளில் 33 சதவீதம் மட்டுமே பல வகையான ஆபத்துகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகளைக் கொண்டுள்ளன.
- முன்னெச்சரிக்கை வழங்கீட்டு அமைப்புகளின் குறைந்த அளவுப் பயன்பாடு உள்ள நாடுகளில் பதிவான இறப்பு எண்ணிக்கையானது, அவற்றின் கணிசமான மற்றும் விரிவானப் பாதுகாப்பு கொண்ட நாடுகளில் பதிவான அளவை விட எட்டு மடங்கு அதிகமாகும்.

## சமத்துவமின்மையினைக் குறைப்பதற்கான உறுதிப்பாட்டுக் குறியீடு – 2022

- இது 161 நாடுகள் தனது மக்கள் மத்தியில் சமத்துவமின்மையைக் குறைப்பதில் மேற் கொள்ளும் செயல்திறனை மதிப்பிடுகிறது.
- இந்தக் குறியீடானது பொதுச் சேவைகள் (சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு), வரிவிதிப்பு மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் ஆகிய துறைகளில் நாடுகளின் கொள்கைகள் மற்றும் செயல்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது.
- இது ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் மற்றும் டெவலப்மெண்ட் ஃபைனான்ஸ் இன்டர் நேஷனல் ஆகியவற்றின் ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீடு, பெருந்தொற்றுக் காலத்தின் போது சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடும் நாடுகளின் கொள்கைகள் மற்றும் செயல்களின் முதலாவது விரிவான மதிப்பீடாகும்.
- குறைந்த வருமானம் மற்றும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் தனது வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரச் செலவினங்களில் 50% வரை தனது பங்கைக் குறைத்துள்ளன.
- 50% நாடுகள் சமூகப் பாதுகாப்புச் செலவினங்களின் பங்கைக் குறைத்துள்ளன என்பதோடு மேலும் 70% நாடுகள் கல்விச் செலவினத்தின் பங்கைக் குறைத்துள்ளன.
- 143 நாடுகள் பணக்காரக் குடிமக்கள் மீதான வரி விகிதத்தை அதிகரிப்பதைத் தவிர்த்து விட்டன.
- 11 நாடுகளின் அரசாங்கங்கள் உண்மையில் பணக்காரர்களுக்கான வரி விகிதங்களைக் குறைத்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டின் குறியீட்டில் நார்வே முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, ஜப்பான், டென்மார்க், நியூசிலாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியா 123வது இடத்தில் உள்ளது என்றாலும் இது 2020 ஆம் ஆண்டு முதல் 6 இடங்கள் முன்னேறியுள்ளது (129 வது இடத்தில் இருந்தது).
- இருப்பினும், சுகாதாரச் செலவினங்களைப் பொறுத்தவரை இந்தியா 2 இடங்கள் சரிந்து உள்ளது.

## உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டுக் கணக்கெடுப்பு

- மெர்சர் CFA என்ற நிறுவனமானது 2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டுக் கணக்கெடுப்பினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் உள்ள ஓய்வூதிய முறைகளை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.
- ஐஸ்லாந்து முதலிடத்திலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் முறையே நெதர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தக் குறியீட்டில் தாய்லாந்து மிக மோசமான செயல்திறன் கொண்ட நாடாக இடம் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்ற 44 நாடுகளில் இந்தியா 41வது இடத்தில் உள்ளது.
- முந்தைய ஆண்டின் குறியீட்டில், இடம் பெற்ற 43 நாடுகளில் இந்தியா 40வது இடத்தைப் பிடித்தது.
- 2021 ஆம் ஆண்டில் 43.3 ஆக இருந்த ஒட்டு மொத்தக் குறியீட்டு மதிப்பானது, 2022 ஆம் ஆண்டில் 44.4 ஆக அதிகரித்ததுடன் இந்தியா ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கண்டது.
- இருப்பினும், இந்த மதிப்பெண் 2020 ஆம் ஆண்டில் 45.7 என்ற மதிப்பை விட குறைவாக உள்ளது.
- நிறைவு, நிலைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகிய மூன்று துணைக் குறியீடுகளில் இந்தியாவின் மதிப்பெண்கள் முறையே 33.5, 41.8 மற்றும் 61.0 ஆகும்.
- இருப்பினும், "நிலைத்தன்மை" மற்றும் "ஒருமைப்பாடு" ஆகியவற்றில் இந்தியாவின் மதிப்பெண்கள் குறைந்துள்ளன.
- நிறைவு மற்றும் நிலைத்தன்மை ஆகிய துணைக் குறியீடுகளை அதிகரிக்க தனியார் ஓய்வூதிய திட்டங்களின் கீழ் பரவலை விரிவுபடுத்தச் செய்வதற்கு இந்த அறிக்கை பரிந்துரைத்தது.




## உலகின் முன்னணி பாசுமதி அரிசி தயாரிப்பு நிறுவனம்

- இந்தியா கேட் என்ற நிறுவனமானது உலகின் முன்னணி பாசுமதி அரிசித் தயாரிப்பு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இது 90 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, ஆண்டுதோறும் 8 கோடிக்கும் மேலான அளவில் அதன் சரக்குப் பொதிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

- ❖ பாசுமதி அரிசியின் தானியங்கள் பல நாட்களுக்குப் பிறகு முதிர்ச்சியடைகின்றன.
- ❖ இது அவற்றை நீளமான நெல் மணிகளாகவும், பஞ்சு போன்றதாகவும், ஒட்டாததாகவும் மிகுந்த நறுமணம் நிறைந்ததாகவும் மாற்றுகிறது.
- ❖ இதுவே மற்ற அரிசி வகைகளிலிருந்து அவற்றை வேறுபடுத்துகிறது.

## இந்தியாவின் இணைய சுதந்திரம்

- ❖ அமெரிக்காவைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஃப்ரீடம் ஹவுஸ், இந்தியாவின் இணைய சுதந்திரத்திற்கான மதிப்பெண் இரண்டு புள்ளிகள் அதிகரித்து உள்ளதாகக் கூறியுள்ளது.
- ❖ தற்போது இந்தியா உலகளாவியத் தரவரிசையில் 51வது இடத்தை எட்டியுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் மதிப்பெண் 49 ஆக இருந்தது.
- ❖ நாட்டில் இணைய சேவை 'பகுதியளவு தடைகளின்றி' வழங்கப்படுவதாக இந்த அறிக்கை கூறியது.
- ❖ இணைய சுதந்திரம் வழங்குவதில் சீனா மிகவும் மோசமான நாடாகவும், ஐஸ்லாந்து முதலிடத்திலும் உள்ளது.
- ❖ இணைய சுதந்திரத்தின் அடிப்படையிலான குறியீட்டில் பச்சை நிற மதிப்பு பெற்ற முதல் 15 நாடுகளில் அமெரிக்காவும் ஒன்றாகும்.
- ❖ இது கடந்த ஆறு ஆண்டுகளில் முதல் முறையாக அதன் தரத்தை மேம்படுத்துகிறது.
- ❖ உக்ரைன் மீதான ரஷ்யப் போருக்குப் பிறகு இந்த குறியீட்டில் ரஷ்யா கடுமையான சரிவைக் கண்டது.




## உலகின் 10வது பரபரப்பான விமான நிலையம்

- ❖ உலகின் முதல் 10 பரபரப்பான விமான நிலையங்களின் பட்டியல் ஆனது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மொத்தப் போக்குவரத்து எண்ணிக்கையைப் பயன்படுத்தி தயாரிக்கப் பட்டது.
- ❖ அக்டோபர் மாதத்தில் தேசியத் தலைநகரில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையமானது, உலகின் 10வது பரபரப்பான விமான நிலையமாக உருவெடுத்துள்ளது.

- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 14வது இடத்திலிருந்த டெல்லி விமான நிலையம் தற்போது 10வது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக விமானப் பகுப்பாய்வு நிறுவனமான OAG தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் அட்லாண்டா சர்வதேச விமான நிலையம் உலகிலேயே மிகவும் பரபரப்பான விமான நிலையமாக விளங்குகிறது.
- அட்லாண்டாவிற்கு அடுத்தபடியாக துபாய் மற்றும் டோக்கியோ ஹனேடா விமான நிலையங்கள் ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடங்களில் உள்ளன.
- இந்த அறிக்கையின்படி, துபாய் மிகவும் பரபரப்பான சர்வதேச விமான நிலையமாக விளங்குகிறது.
- அதைத் தொடர்ந்து லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் மற்றும் ஆம்ஸ்டர்டாம் விமான நிலையம் ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடங்களில் உள்ளன.
- முதல் 10 பரபரப்பான சர்வதேச விமான நிலையங்களின் பட்டியலில் இந்திய விமான நிலையம் எதுவும் இடம் பெறவில்லை.
- முதல் 10 பரபரப்பான சர்வதேச வழித்தடங்களில் மும்பை முதல் துபாய் மற்றும் டெல்லி முதல் துபாய் ஆகிய வழித் தடங்கள் அடங்கும்.
- மும்பை மற்றும் நியூயார்க்கிற்கு இடையேயான பாதை, இதுவரை விமானச் சேவை மேற்கொள்ளப் படாத மிகப்பெரிய வழித்தடங்களில் ஒன்றாகும்.




## சென்டி மில்லியனர்களின் பட்டியல்

- சென்டி மில்லியனர்களின் அதிகரிப்பு குறித்த உலகின் முதல் உலகளாவிய ஆய்வில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- சென்டி மில்லியனர்கள் என்பது ரூ. 830 கோடிக்கு மேல் (100 மில்லியன் டாலர்) சொத்துக்களைக் கொண்ட நபர்கள் ஆவர்.
- உலகிலுள்ள மொத்த 25,490 சென்டி மில்லியனர்களில், ஐக்கியப் பேரரசு, ரஷ்யா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா 1132 பேரைக் கொண்டுள்ளது.
- 2032 ஆம் ஆண்டில், இந்தியா சீனாவை (2வது இடத்தில்) முந்திக் கொண்டு, சென்டி மில்லியனர்களுக்கான மிக வேகமாக வளர்ந்து வரும் சந்தையாக விளங்கும்.

- 38 சதவிகித (9,730) அளவில் உலக மில்லியனர்களைக் கொண்டு அமெரிக்கா 1வது இடத்தில் உள்ளது.
- 2,021 சென்டி மில்லியனர்களுடன் சீனா, அமெரிக்காவிற்கு அடுத்த இடத்தில் உள்ளது.




## புவிசார் குறியீடு பெற்ற மிகவும் பிரபலமான தயாரிப்பு விருது

- ஹைதராபாத் ஹலீம் மற்றும் அதன் பிற புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளுக்கு 'புவிசார் குறியீடு பெற்ற மிகவும் பிரபலமான தயாரிப்பு' விருதானது வழங்கப்பட்டது.
- இது உணவு வகை மற்றும் வேளாண்மைப் பிரிவின் கீழ் வழங்கப்படுகிறது.
- தெலுங்கானாவில் உணவுப் பொருட்கள் வகையின் கீழ் புவிசார் குறியீட்டினைப் பெற்ற ஒரே தயாரிப்பு இதுவாகும்.
- கைவினைப் பொருள்கள் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த தஞ்சாவூரின் கலைநயம் மிக்க தட்டு வகையானது விருது பெற்றது.
- கராந்தகாவைச் சேர்ந்த மைசூர் சாண்டல் சோப் ஆனது தயாரிப்புப் பிரிவின் கீழ் விருதைப் பெற்றது.
- இயற்கைப் பிரிவில் உத்தரப் பிரதேசத்தின் சுனா பலுவா பட்டார் விருதினைப் பெற்று உள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★